உரைநடைச் சிலம்பு

பரல் — ௨

FIRST EDITION

சுன்னாகம்

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

Copy-right]   Feb. 1948   [விலை ரூபாய் 1-50

உரை நடைச் சிலம்பு

பரல் — ௨

இலக்கியம்-சரித்திரம் சங்கீதம், விஞ்ஞானம், கலை, வணிகம் முதலிய பல துறைகளில் கை தேர்ந்த ஆசிரியர் பலர் எழுதிய கட்டுரைத் திரட்டு.

சுன்னுகம் :
வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்
1948

கன்னுகம் :
திருமகள் அழுத்தகம்

(Copyright Reserved)

பொருளடக்கம்

பக்.

1. இளங்கோவடிகளும் கம்பரும் — 1
   வித்துவான் சி. கணேசையர்
2. வண்ணமும் வடிவும் — 7
   சுவாமி விபுலானந்தர்
3. உண்மைத் தைரியம் — 15
   பெ. நா. அப்புசுவாமி ஐயர்
4. புனலாட்டு — 21
   பண்டிதர் க. சிவசம்பு
5. தமிழ் வளர்த்த தாமோதரன் — 29
   ராவ்சாகிப் S. வையாபுரிப்பிள்ளை
6. நாட்டுப் பாடல் — 36
   பண்டிதர் க. சிவசம்பு
7. மனையறம் நடத்தும் மாண்பு — 41
   வித்துவான் வி. சிவக்கொழுந்து
8. தமிழ் இசை — 45
   இராஜ அரியரத்தினம்
9. வணிகம் — 51
   க. நவரத்தினம்
10. சேரமன்னர் கடற்படைச் சிறப்பு — 55
    பண்டிதர் ச. ஆனந்தர்
11. வானொலி — 60
    அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரிய மாணவன்
12. மெய்ப்புலவன் — 63
    பண்டிதர் சோ. இளமுருகனார்
13. இந்திரனும் கண்ணனும் — 69
    முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி
14. ஆற்றுப்படை — 74
    பண்டிதர் க. சிவசம்பு
15. பெண்பாற் புலவர்கள் — 78
    பண்டிதர் க. சிவசம்பு

உரைக்குறிப்புகள் — 83

பதிப்புரை

உரைநடைச் சிலம்பின் முதற் பரல் 1940-ம் ஆண்டில் எம்மால் வெளியிடப்படுவதாயிற்று. அதன் சிறப்பினையுணர்ந்த ஆசிரிய நண்பர்கள் பலர், இவ்வாறான வசன நூல்கள் இக்காலத்துக்கு மிகவும் ஏற்றவையென்றும், தொடர்ந்து வெளியிடுதல் நலமென்றும் எம்மைப் பன்முறையும் ஊக்குவாராயினர்.

தமிழ் வசன நடை விருத்தியடைந்துள்ள இக்காலத்தில், ஆங்கில, தமிழ்ப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்கள் வசனத் தமிழிலே பயிற்சி பெறுவதற்கனுகூலமாக சிறந்த எழுத்தாளர்கள் பலர் பல பொருள்மேல் எழுதிய கட்டுரைகளை ஒன்று சேர்த்து இவ் இரண்டாம் பரல் வெளியிடப்படுகின்றது.

இவ் வுரைநடைச் சிலம்பு இரண்டாவது பரலில் வரும் கட்டுரைகள் இலக்கியம், சரித்திரம், சங்கீதம், விஞ்ஞானம், வணிகம், முதலான பல துறைகளில் எழுதப்பெற்றுள்ளன. இக் கட்டுரைகள் மாணவர்களுக்குப் பழந்தமிழிலக்கியங்களைப் படிப்பதற்குத் தூண்டுகோலா யிருப்பதுமன்றி, இலக்கிய அறிவுக்கும் மொழிப் பயிற்சிக்கும் இன்றியமையாத் துணைபுரிவதுமாகும்.

இதிலுள்ள கட்டுரைகளிற் பல "ஈழகேசரி" ஆண்டுமடல், கல்விமலர் பிரசுரங்களிலும், சாதாரண, விசேட வெளியீடுகளிலும் வெளிவந்தவை. "மனையறம் நடத்தும் மாண்பு" என்ற கட்டுரை "தமிழ் மகள்" பொங்கல் மலரில் வெளிவந்தது. 'வானொலி' அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி வகுப்பு மாணவர் ஒருவரால் எழுதியுதவப்பெற்றது. ஏனைய கட்டுரைகள் இந்நூலுக்கென்றே விசேடமாக எழுதியுதவப்பெற்றவை.

இவற்றைத் திரட்டி வெளியிட மனமுவந் தனுமதிதந்த 'ஈழகேசரி', 'தமிழ்மகள்' ஆசிரியர்களுக்கும், இந் நூலுக்கென்றே மற்றைய கட்டுரைகள் எழுதியுதவிய அன்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

சுன்னாகம்
10-2-48.

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

உரை நடைச் சிலம்பு

பரல் — ௨

இளங்கோவடிகளும் கம்பரும்

சிலப்பதிகார மென்னுஞ் சிறந்த காப்பியத்தைச் செய்தவர் இளங்கோவடிகள். இவர் சேரர் குலத்தவர். சேரன் செங்குட்டுவனுக்குத் தம்பியாதலினால் இளங்கோவென்றும், துறவொழுக்கம் பூண்டமையால் அடிகள் என்றும் அழைக்கப்பட்டார். இவருக்குப் பிற்காலத்திருந்தவர் கம்பர். இவர் கவிச்சக்கரவர்த்தி எனவும் பாராட்டப்பட்டவர். இவராற் செய்யப்பட்டது இராமன் கதையைத் தெரிக்கும் இராமாவதாரம் என்னுங் காப்பியம். அக்காப்பியத்துட் சிற்சில இடங்களுள் சிலப்பதிகார வைப்பினை ஒத்த வைப்புக்கள் காணப்படுதலின், கம்பர் சிலப்பதிகாரம் என்னும் நூலினும் பெரிதும் பயிற்சியுடையார் என்பது புலப்படுகின்றது. அவ் வைப்புள் சிலவற்றை ஈண்டுத் தெரிக்குதும்.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துள், 'கோவலன் கண்ணகியாற் சிலம்பு பெற்று, அதனை வாணிகமுதலாகக் கொண்டு பொருள் தேடும்படி கண்ணகியையும் அழைத்துக் கொண்டு மதுரைக்குப் புறப்பட்டு ஊர்வாயிலைக் கடந்து காததூரம் போனவுடன், கண்ணகி நடையால் அடிவருந்தி, "மதுரைமூதூர் யா"தென வினவினாள்' என்னுங் கருத்தமைய,

"வான்கண் விழியா வைகறை யாமத்து
....
மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து,
....
இந்திர விகார மேழுடன் போகி
....
இலங்கொளிச் சிலாதலந் தொழுதுவலங் கொண்டு
....

உலக விடைகழி யொருங்குட னீங்கி
……………………………………………………
இலவந் திகையி னெயிற்புறம் போகி
……………………………………………………
காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து
……………………………………………………
வடபெருங் கோட்டு மலர்ப்பொழி னுழைந்து
காவதங் கடந்து கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்க
ணிறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ"
—நாடுகாண் காதை

எனக் கூறியுள்ளார்.

கம்பரும் தாஞ்செய்த இராமாவதாரத்துள், "இராமன் வனம்போகுமாறு சீதையுடன் புறப்பட்டுக் கோபுரவாயிலை அடைந்தபோதே சீதை இராமனை நோக்கி, 'வனம் யாது?' என்று வினவினாள்" என்னுங் கருத்தமைய,

"நீண்டமுடி வேந்தனரு ளேந்திநிறை செல்வம்
பூண்டதனை நீங்கிநெறி போதலுறு நாளின்
ஆண்டநக ரானரயொடு வாயிலக லாமுன்
யாண்டையது கானெனவி சைத்ததுமி சைப்பாய்"

எனக் கூறியுள்ளார்.

ஆசிரியர் இருவர் கருத்தும் பதியெழுவறியாப் பண்பினராகிய இருபெரும் பெண்ணணங்குகளின் மென்மையைப் புலப்படுத்தினும் கண்ணகி காதஞ் சென்றபின் வினவினாள் என்றும், சீதை கோபுரவாயிலை அடைந்தபோதே வினவினாள் என்றுங் கூறியவதனால், கண்ணகியினுஞ் சீதை மெல்லியள் என்பது போதராதோவெனின் ? போதராது. என்னை? கண்ணகி, தன் கணவன் பொருளிழந்த துயரத்தினால் உந்தப்பட்டுப் பொருளை யீட்டுமாறு புறப்பட்டவன் என்பதை உணர்ந்தவளாதலின் தனக்குண்டாகிய நடை வருத்தத்தை அப்பொழுதே உணர்த்திவிடின் தன் கணவனுடைய செலவிற்கு அது தடையாகுமென்று கருதி, அவ்வருத்தத்தை அப்பொழுதே உணர்த்தாதுபொறுத்துச்சென்று முடியாதஅளவில் உணர்த்திவிட்டாள் ஆதலானும், நாட்டிலிருத்தலினும் வனத்திலிருத்

தலே தனக்குப் பெருவாழ்வாகக் கருதி, அதனுல் அப்பொழு தலர்ந்த செந்தாமரைபோன் மலர்ந்த முகத்தோடும் வன நோக்கிச் சென்ற இராமனேடு தானும் அம்மகிழ்ச்சிகொடு சென்ருளாகலின் தனக்கு உண்டாய வருத்தத்தைச் சீதை அப்பொழுதே கூறிவிட்டாளாதலானும் இருவரும் ஒத்த மென்மையுடையரென்பது போதருமன்றிச் சீதை மெல்லிய ளென்பது போதராதென்க.

அன்றியும், இருவரும் பதியெழுவறியாப் பண்பினராயி னும் கண்ணகி காடிடையிட்டும், நாடிடையிட்டும் சென்று பொருள் தேடும் வணிக குலத்துப் பிறந்தவளாதலினுலே "குலவித்தை கல்லாமற் பாகம்படு" மென்றவாறேயாய்ச் சிறிது நடைவன்மை யுடையளாயினுள் என்பது புலப்படவும், சீதை நடையிற் செல்லா அரசகுலத்துப் பிறந்தவளாதலி னுலே நடைவன்மை இலளாயினுள் என்பது புலப்படவும் கூறினுரெனினும் ஆண்டும் இருவர் கருத்தினும் வேற்றுமை யின்மை உணர்க. இனிச் சீதை திருமகளினவதாரத்தளாத லின் கண்ணகியினும் மெல்லியள் எனினுமமையும்.

சிலப்பதிகார மென்னு மிந்நூலிலே கோவலன் பொருட் குச் செல்லுங்கால் கண்ணகியையு முடன்கொண்டு சென்று னென்று கூறப்பட்டிருப்பவும், 'முந்நீர் வழக்க மகடூஉவோ டில்லை' என்னும் (தொல் - பொருள் - அகத்திணை - ௩௪) சூத்திர உரையுள் ஆசிரியர் நச்சினுர்க்கினியர், 'இனிப் பொருள்வயிற் பிரிவின்கட் ... காலிற் பிரிவு தலைவியுடன்சேற லுண்டு என்று கூறுவார்க்குச் சான்ருேர் செய்த புலனெறி வழக்கமின்மை யுணர்க" என்று கூறுவது பொருந்துமோ எனின், பின்பு கோவலன்,

"வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக் கொன்றேற்கு நன்னெறி யுண்டோ
இருமுது குரவ ரேவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்
டெழுகென வெழுந்தா யென்செய் தனை"

என்று கூறுதலினாலே மகளிரொடு காலிற் போதலும் வழுவென்பது பெறப்படுதலின் அவர் கூறியது பொருந்து மென்பது. ஆயின் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னுள்ள வழக்கு எப்படியிருந்ததோ என்பது ஆராயத் தக்கது.

இன்னும் இளங்கோவடிகள் தந்நூலுள்ளே கோவலன் கண்ணகியோடு மதுரைமாநகர் புக்கபோது அந்நகரின் கீழ்த் திசைக் கோபுரவாயிற்கொடி, குடதிசையினின்றும் வந்த காற்றால் அசைந்துகொண்டிருந்த தன்மையைப் புனைந் துரைக்குங்கால், அக்கொடி யசைந்த தன்மை அம் மதுரைமா நகர் கோவலனை நோக்கி 'நீ இங்கு வந்தாற் றீங்குவரும், வாராதே! வாராதே!!' என்று மறுத்துக் கைகாட்டியது போன்றிருந்தது என்னுங் கருத்தமைய,

"போருழந் தெடுத்த வாரெயி னெடுங்கொடி
வாரலென் பனபோன் மறித்துக்கை காட்ட"

என்று அழகிதாக வமைத்துக் கூறியுள்ளார். இக் கருத் துறவே கவிச்சக்கரவர்த்தியும், இராமன் மிதிலை புக்கபோது அம் மிதிலைமாநகரிலுள்ள கோபுரவாயிற்கொடி (உட்பக்க மாக) அசைந்துகொண்டிருந்த தன்மையைப் புனைந்துரைக் குங்கால், அக்கொடி அசைந்துகொண்டிருந்ததன்மை, அம் மாநகர் இராமனை நோக்கி 'நீ வரின் உனக்கு மங்கலம் உண் டாம்; ஆகையால் விரைந்து வா! வா!!' என்று கையால் அழைப்பதுபோன்றிருந்தது என்னுங் கருத்தமைய,

"மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா"

என்று புனைந்துரைத்தனர். இங்கே கோவலனுக்குண் டாந் தீமையையும், இராமனுக்குண்டாம் நன்மையையும் கொடியசைவின் மேலேற்றி உற்பாதநெறியில் இடத்திற் கேற்பப் புனைந்துரைத்த இருபெருங் கவிகளுடைய மதி நுட்பமும் மிகப் போற்றற்பாலனவே யாகும்.

இன்னும், இளங்கோவடிகள் சேரலாதன் செங்குட்டுவ னது வீரத்தைச் சிறப்பித்துக் கூறுங்கால், வட கலிங்க

வரசர்களாகிய கனக விஜயரோடும் அவரைச் சூழ்ந்த ஐம்பத்திருவர் தேர்வீரரோடும் செங்குட்டுவன் போர்புரிந்த காலத்து, வீரர்கள் யாவரும் இடியேறுண்ட நாகமென வஞ்சி, தம்முயிர் பிழைத்தற் பொருட்டுச் சடைமுடித்தவ ராயும், கஷாய உடை தரித்தவராயும், விபூதியை இடையின்றிப் பூசிய மெய்யராயும், கையிற் பீலியேந்திய அருக சந்நியாசகோல முடையராயும், பாடற் பாணராயும், கூத்த ராயும் வேடம்பூண்டு வழிதிசை யறியாது ஓடினார்களென் னுங் கருத்தமைய,

"சடையின ருடையினர் சாம்பற் பூச்சினர்
பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளின
ராடு கூத்த ராகி யெங்கணு
மேந்துவா ளொழியத் தாந்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தர"

எனக் கூறியுள்ளார்.

இங்ஙனமே கம்பரும் அனுமனது வீரத்தைச் சிறப்பித்துக் கூறுமிடத்து, அட்சகுமாரனொடு சேர்ந்து யுத்தஞ் செய்ய வந்த அரக்கர்கள் அனுமனது வலிக்கு எதிர் நிற்க வியலாது காற்றின்முன் னெதிர்ப்பட்ட பஞ்சுபோற் சுழன்று, நடுக்குற்றுத் தம்முயிரைப் பாதுகாத்தற் பொருட்டு மீன் வடிவினராயும், பசுவடிவினராயும், பறவையுருவினராயும், பார்ப்பனக்கோலமுடையவராயும், தம்மைத் தழுவிய இராக்ஷதச் சுற்றத்தாரை நோக்கி, 'உமது சுற்றத்தவரல்லேம்; நாம் தேவர்; நாம் மானுடர்' என ஓலமிட்டவராயும், பற்களை முரித்தவராயும், மயிரினைக் கருமையாக்கிக் கொண்டவராயும் பலவிடங்களுக்கும் பரந்து ஓடினர் என்னுங் கருத்தமைய,

"மீனாய் வேலையை யுற்றார் சிலர்சிலர்
பசுவாய் வழிதொறு மேய்வுற்றார்
ஊனார் பறவையின் வடிவுற் றார்சிலர்
சிலர்நான் மறையவ ருருவானார்
மானார் கண்ணிள மடவா ராயினர்
முன்னே தங்குழல் வகிர்வுற்றார்
ஆனார் சிலர்சில ரையா நின்சர
ணென்றார் நின்றவ ரரியென்றார்."

"தந்தா ரமுமுறு கிளையுந் தமையெதிர்
தழுவுந் தொறுநும தமரல்லேம்
வந்தேம் வானவ ரென்றே கினர்சிலர்
சிலர்மா னுடரென வாய்விட்டார்
மந்தா ரம்வளர் பொழில்வாய் வண்டுக
ளானுர் சிலர்சிலர் மருள்கொண்டார்
இந்தா ரெயிறுக ளிறுவித் தார்சில
ரெரிபோற் குஞ்சியை யிருள்வித்தார்"

எனக் கூறியுள்ளார்.

(அரக்கர் சிலர் அச்சத்தினுல் இராக்ஷத வடிவை யொழித்தற் பொருட்டு எயிறுகளை முரித்துக்கொண்டும், மயிரினைக் கருமையாக்கிக் கொண்டும், தம்மை மானுடரெனக் கூறிக் கொண்டு ஓடி உயிர் பிழைத்தனர் எனக் கூட்டிப் பொருள் கொள்ளல் சிறப்பாகும்.)

இப் புலவர்களுடைய நுண்மதியையும், கவிநயத்தையும் ஆராய்ந்து கண்டே பிற்காலத்திருந்த வரகவி சுப்பிரமணிய பாரதியவர்கள் 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை' என்று சத்தியத்தோடு எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

2. வண்ணமும் வடிவும்

முன்னாளிலே, யவனபுரத்திலிருந்த சிற்பாசாரிகள், வெள்ளிய சலவைக் கல்லினைச் செதுக்கி, அழகிய உருவங்களை வகுத்தார்கள். அவ்வுருவங்களிற் சில மேனாட்டிலுள்ள காட்சிச் சாலைகளிலே, இன்றும் பார்ப்போர் கண்ணுக்கு உவகையளிக்கின்றன.

மிகப் பழைய காலத்திலே தமிழ் நாட்டிலிருந்த சிற்ப நூல் வல்லார் வகுத்த உருவங்கள் நமக்குக் கிடைப்பதில்லை. அவ்வுருவங்கள் 'மண்ணீடு' எனப்பட்டன; மண்ணி(சுதையி)னாலும் மரத்தினாலும் இயற்றப்பட்டன வாதலின், அவை இப்பெயர் பெற்றன. இவைதம்மை இயற்றிய சிற்பிகள் மண்ணீட்டாளர் எனப்பட்டார். இவரை 'ஓவியர்' என்பதும், இவர்க்குரிய நூலினை 'ஓவியச் செந்நூல்' என்பதும் பழைய வழக்கு.

இடைக் காலத்திலே நமது நாட்டிலே கருங்கல்லினாலே உருவங்களை அமைத்துக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. மதுரையிலும் தென்காசியிலும் பேரூரிலும் மற்றுமிடங்களிலும் கோயில் மண்டபங்களிலே அமைக்கப்பட்டிருக்கிற உருவங்கள் தமிழரது சிற்ப வல்லமையைச் சிறப்புறக் காட்டுகின்றன.

"எவ்வகை யுயிர்களும் உவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம்"

[மணிமேகலை : காதை 3 அடி 128-131]

எனவும்,

"எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞர்"

[மதுரைக் காஞ்சி : அடி 516-518]

எனவும் கூறினமையின், பார்ப்போர் கண்களைக் கவருந் தன்மையவாகிய ஓவியங்களை அமைப்போர் நுண்ணுணர்வும் நுழைந்தநோக்கும் உடையராதல் வேண்டுமென அறிகின்றோம்.

வெண்சுதையில் தீட்டிய உருவத்தினது இயற்கை வண்ணம் வெளிப்படுமாறு வண்ணந் தீட்டுவோரும், வட்டிகைப் பலகையிலே துகிலிகைக் கோலினலே பலவித வர்ணங்களை எழுதி அழகிய சித்திரங்களை அமைப்போரும் கண்ணுள் வினைஞர் எனப்பட்டார். 'கண்ணுள்வினைஞர் — சித்திர காரிகள்' என அடியார்க்குநல்லாருரை கூறும்.

"வட்டிகை மணிப்பலகை வண்ணநுண் டுகிலிகை"

என்னும் சிந்தாமணிச் செய்யு ளடியினுள்ளே கண்ணுள் வினைஞர்க்கு வேண்டிய கருவி மூன்றும் கூறப்பட்டன.

"துவார வட்டிகை" என அடியார்க்குநல்லார் கூறுதலின், 'இக்காலத்து மேனுட்டுச் சித்திரகாரிகள் வழங்கும் Palette என்னும் பலகையினை ஒத்த வட்டிகைப் பலகைகளே பண்டைநாளிலும் இருந்தன' என எண்ண இடமுண்டு.

தென்னுட்டுச் சித்திரவன்மையைக் காட்டும் பழைய சித்திரங்கள், சித்தண்ணவாசலிலும் தஞ்சைப் பெரிய கோயிலிலும் ஈழநாட்டுச் சிகிரியாக் குகையிலும் வடநாட்டு அஜந்தா குகையிலும் உள்ளன. இவற்றைக் கூர்ந்து ஆராயின், பழந்தமிழ் நாட்டு அணிகலன் உடை கூந்தலமைப்பு என்று இன்னவும், ஆடவரும் மகளிரும் அறங்கூறவையத்தும் விளையாட்டிடங்களிலும் வாழ்மனையிலும் வேற்றிடத்தும் எவ்வெச் செய்திகளை மேற்கொண்டிருந்தார்க ளென்பதும் தெளிவாகும்.

மண்ணீட்டாளர், கண்ணுள் வினைஞர்—ஆகிய இருபாலாரையும் ஓவியர் என்பதும், வண்ணம் வடிவம் என நுணுகி வேறுபடுத்தாது அனைத்தினையும் ஓவியம் என்பதும் ஒருதலை.

ஓவியனுனவன் படாத்தில் வர்ணம் தீட்டியோ, சுதை மீது சுதையினுற் புனைந்தோ, வெண்சலவைக் கல்லைச் செதுக்கியோ, கருங்கல்லைப் பொழிந்தோ வெளிப்படுத்திய உருவத்தை அறிவுடையோன் நோக்கும்போது ஓவியனுடைய கைந்நுட்பத்தை வியப்பதோடமையாது, "ஓவியனுள்ளத்து உள்ளியது" இதுவெனக் கண்டும் வியத்தல் வேண்டும். ஓவியனது உள்ளக் கருத்தே ஓவியத்திற்கு உயிர் போன்றது.

நவிலுந்தோறும் இனிமை பயக்கும் நூல்நயம் போலவும், பயிலுந்தோறும் இனிமை பயக்கும் பண்புடையாளர் தொடர்பு போலவும், பார்க்குந்தோறும் அறிவுடையோனுக்கு உவகையளிக்கும் ஓவியமே அழகிய ஓவியமாகும்.

“பஞ்சரத்திலுள்ள கிளிப்பிள்ளை பொன் வட்டிலிற் பாலடிசில் உண்ணுவதை இவ்வோவியம் காட்டுகின்றது.” எனக் காட்சிமாத்திரத்திலே அளந்து தீர்ப்பிடுதற்குரிய ஓவியம் அறிஞர்க்கு உவகை பயப்பதில்லை. “இப்பொழிலகத்தே நிற்கும் மாமரத்தின் கனியினை இக்கிளிப்பிள்ளை உண்கின்றது” எனற்குரிய ஓவியமும் முன்னையதைப் போல்வதே. ஆனால் ஓர் ஓவியன் இவ்விரண்டினையும் ஒரு படத்திலே சித்திரித்துத் தருகின்றான் என வைத்துக்கொள்வோம்: “பொழில் நடுவில் அழகிய மாளிகை; மாளிகை மேன்மாடத்தில் ஒரு மடவரல் பஞ்சரத்திற் கிளிக்குப் பாலடிசில் ஊட்டுகின்றாள். பக்கத்திலுள்ள மாமரக்கிளையிலிருக்கும் கிளி தன்னிச்சையாக மாங்கனியினை உண்கின்றது.”

இப் படத்தினைப் பார்த்தவுடனே நமது சிந்தையிலே பல வேறு எண்ணங்கள் உதிக்கின்றன. இப்படம் சுதந்திர வாழ்க்கையையும் அடிமை வாழ்க்கையையும் குறிப்பிடுகின்றதா? அன்றேல், மனை வாழ்க்கையையும் துறவு வாழ்க்கையையும் காட்டுகின்றதா? பட்டின வாழ்க்கையையும் பட்டிக்காட்டு வாழ்க்கையையும் காட்டுகின்றதா? என இவ்வாறெல்லாம் சிந்திக்கிறோம். கண்ணினைக் கவர்ந்த படம் மனத்தினையும் கவர்ந்துவிட்டது.

> “மாத்திரை முதலா அடிநிலை காறும்
> நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே”
>
> [தொல். பொருள். செய்யு. 104]

எனத் தொல்லாசிரியர் செய்யுளுக்குக் கூறிய ‘நோக்கு’ என்னும் இலக்கணம் ஓவியத்திற்கும் அமையவேண்டும். “கவியிதயம்” எதுவென நாம் ஆராய்ந்து கண்டு மகிழ்வுறுவதுபோல ஓவியனுள்ளத்தினையும் நாம் ஆராய்ந்து கண்டு மகிழ்வுறுமாறு ஓவியம் அமையவேண்டும்.

இளையோரும் அறிவிற் சிறியோரும் ‘பெரிமாவை மெச்சினான் பொக்கை வாயன்’ என்றபடி, வெள்ளைப் பாடல்

களையும் இயற்கைத் தோற்றத்தை அப்படியே அமைத்துக் காட்டும் ஓவியங்களையும் பாராட்டுவர். உண்மை அழகு இதுவென உணரும் ஆற்றலுடைய அறிஞர், உண்மைக் கவிகள் எழுதிய செய்யுள் நலனையும் உண்மை ஓவியன் அமைத்த சித்திரநலனையும் ஆராய்ந்துணர்ந்து மகிழ்வுறுவர்.

கவிதையானது ஐம்புலன்களையும் மனத்தினையும் கவரும் ஆற்றல் வாய்ந்தது. மண்ணீட்டாளரும் கண்ணுள் வினைஞரும் கண்ணினையும் மனத்தினையும் கவர்வார். இசைவல்லோர் கண்டத்தினாலும் கருவியினாலும் உளத்தைக் கவர்ந்து செவிக்கு அமுதளிப்பர்.

> ''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
> ஒண்டொடி கண்ணே யுள''
>
> [திருக்குறள் : 1101]

என விழைவுவயப்பட்ட தலைமகன் கூறுவதுபோலக் கவிச் சுவை தேர்வோனும்,

> ''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
> ஒண்கவி கண்ணே யுள''

எனக்கூறி விண்ணவ ரின்பத்தினும் மிக்க கவியின்பத்தை நுகர்வான்.

செவியின்பம், நாவின்பம், மூக்கின்பம், ஊற்றின்பமாகிய நான்கும் எடுத்துக்கொண்ட ஆராய்ச்சிக்குப் புறம்பானவையாதலின், அவைதம்மை ஒழித்து, வண்ணமும் வடிவமும் காட்டும் செய்யுளானது, வல்லான் வகுத்த ஓவியம் போன்று அகக்கண்ணுக்கு உவகையளிக்கும் மாண்பினை, ஆன்றோர் செய்யுட்கள் சிலவற்றை எடுத்துக்காட்டி நிறுவுதல் மேற்கொள்வாம்.

> ''வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
> வகைபெற வந்த வுவமத் தோற்றம்''

என்னும் தொல்காப்பிய உவமவியற் சூத்திரத்தினுள்ளே, மெய்யென்பது வடிவம் (வட்டம், சதுரம், கோணம் முதலாயின); உருவென்பது நிறம், வண்ணம் (வெண்மை, பொன்மை முதலியன); எனக் கூறப்பட்டது.

சொற்களாலே கவிவல்லான் புனையும் ஓவியமானது, கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும் புனையும் ஓவியத்

தினும் சிறந்த இயங்கும் ஓவியமாகும். அஃதன்றியும் கவிதையோவியம், உவமம் தழுவிநின்று ஆராயுந்தோறும் ஆராயுந்தோறும் புதிய புதிய நலத்தினைக் காட்ட வல்லது.

"வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ராரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்
என்கண் காட்டென் றென்னுளம் கவற்ற
வந்தேன்"

[சிலப்பதிகாரம்: காதை 11, அடி 41-53]

என மாங்காட்டு அந்தணன் வாய்மொழியாக இளங்கோவடிகள் ஓவியக் கவிதை புனைகின்றார். உவமானம் ஒரு தனியோவியம், உவமேயம் மற்றோரோவியம். ஈரோவியமும் அகக்கண்முன் தோன்றி இரண்டற்ற (அத்துவித) நீர்மையாய் நிற்கின்றன. நாம் கண்டு பரவசமடைகின்றோம்.

முதலிலே உவமானத்தைத் தனித்து நோக்குவாம். ஒவ்வொரு மொழியினாலும் குறிக்கப்படுகிற வண்ணத்தினையும் வடிவினையும் அகக்கண்ணினாலே நோக்குதல் வேண்டும்.

வாளா 'வேங்கடம்' என்னாது 'வீங்குநீர் அருவி வேங்கடம்' என்றார், மலைக்கு அணிகலன் போன்று அழகினை நல்குவது நீரருவியாதலின்.

'ஓங்குயர் மலையம்' என்புழி மெல்லொற்றுத் தொடர்ந்த நெட்டெழுத்துத் தனக்குரிய மாத்திரையினும் நீண்டொலித்துக் குறவரும் மருளும் தெய்வக் குன்றின் உயர்வினை உணர்த்தி வியப்பினை அளிக்கின்றது.

'விரிகதிர் ஞாயிறு' என்னும் தொடர், பரிதி வட்டத்தினையும் அதனைச் சூழ்ந்து எத்திசையினும் பரவும் ஆயிரங் கதிர்களையும் கண்முன் கொண்டு வருகிறது. நிறை மதிக்கு

அடுத்த நாளிலே குணதிசையில் ஞாயிறு உதிக்கக் குடபாலிலே வான வட்டத்தின் மேல் நிற்கும் திங்களே ஈண்டுத் 'திங்கள்' என அடையின்றிக் குறிக்கப்பட்டது. அந்திமாலையிலே காவிரிப்பூம் பட்டினம் என்னும் பெண்ணணங்கு தோற்றிய தன்மையினை உரைக்கப் புகுந்த **கூலவாணிகன் சாத்தனார்,**

"குணதிசை மருங்கின் நாண்முதிர் மதியமும்
குடதிசை மருங்கிற் சென்றுவீழ் கதிரும்
வெள்ளிவெண் டோட்டொடு பொற்றோ டாக
எள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலும்"

[மணிமேகலை: காதை 5, அடி 119-122]

என்றாரெனின் அவர் கூறியது "வீழ்கதிர்," இவருரைத்தது "விரிகதிர்" என்க.

"நன்னிற மேகம்" நல்ல நிறத்தையுடைய மேகம் என உரையாசிரியர் கூறுவார்.

வானவில்லானது வட்டாகாரமாய் இந்திரநீலம், பூநீலம், நீலம், பச்சை, மஞ்சள், பொன்மை, செம்மை என்னும் ஏழு நிறங்களும் பொருந்தி ஒளியொடும் திகழ்வது.

"உருவு கொண்ட மின்னே போலத்
திருவி லிட்டுத் திகழ்தரு மேனியள்"

[மணிமேகலை: காதை 6, அடி 9-10]

எனவும்.

"மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றோன்றுமால்"

[சிலப். 29. செங்குட்டுவன்கூற்று, அடி 4]

எனவும் வருதலின் வானவில்லும் மின்னற் கொடியும் தெய்வவொளி வீசுந்தகைய என அறிகின்றோம்.

"மிக்க அருவிநீரையுடைய வேங்கடமென்று பெயர் கூறப்படும் மலையினுச்சியிடத்தே ஞாயிறும் திங்களும் இருமருங்கும் ஓங்கி விளங்கிய இடைப்பட்ட இடத்தே நல்ல நீல நிறத்தையுடைய மேகம், தன் மின்னுகிய புதுப்புடைவையையுடுத்துத் தன் வில்லாகிய பணியைப் பூண்டு நின்றது" என உவமான ஓவியம் காட்டப்பட்டது.

நீனிற மேகம் நெடியோனுக்கும், விரிகதிர் ஞாயிறு பகையணங்கு ஆழிக்கும், திங்கள் பால் வெண் சங்கிற்கும், மின்னல் பொற்பூ வாடைக்கும், வானிடுவில் அணிகிள ராரத்திற்கும் ஒப்பாயின.

மேல் வரும் எடுத்துக்காட்டுச் செய்யுட்களையும் விரித்துரைத்துக் கொள்க.

"கோல நெடுங்கண் மகளிர்
கூந்தல் பரப்பி யிருப்பப்
பீலி மஞ்ஞை நோக்கிப்
பேடை மயிலென் றெண்ணி
ஆலிச் சென்று புல்லி
யன்மை கண்டு நாணிச்
சோலை நோக்கி நடக்கும்
தோகை வண்ணங் காண்மின்."

[சீவகசிந்தாமணி 919]

"தாய்தன் கையின் மெல்லத்
தண்ணென் குறங்கி னெறிய
ஆய்பொன் னமளித் துஞ்சும்
அணியார் குழவி போலத்
தோயுந் திரைக ளலைப்பத்
தோடார் கமலப் பள்ளி
மேய வகையிற் றுஞ்சும்
வெள்ளை யன்னங் காண்மின்."

[சீவகசிந்தாமணி 930]

"திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
யோம்பினர் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமு மவரு மோராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்."

[மதுரைக்காஞ்சி : 461-465]

"திரண்டெழு தழை மழைமுகில் வண்ணன்
செங்கமல மலர்சூழ் வண்டினம் போல
சுருண்டிருண்ட குழல் தாழ்ந்த முகத்தான்
ஊதுகின்ற குழ லோசை வழியோ

மருண்டுமான் கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லுங் கடைவாய் வழிசோர
இரண்டு பாடுந் துலுங்காப் புடைபெயரா
எழுது சித்திரங்கள் போலநின் றனவே.''
[பெரியாழ்வார் திருமொழி 3-6-9]

''மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடியும் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளும் செம்பொற் றோளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.''
[திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் 225]

''ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.''
[திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் 728]

3. உண்மைத் தைரியம்

"உண்மையான தைரியம் என்பது எது என்ருல்' ஒருவன் அமைதியாக உட்கார்ந்திருக்கும் நேரத்தில் அவன் ஒரு சாகசமான செயலைச் செய்யவேண்டும் என்று தீர்மானித்து நடத்துவதுதான் உண்மைத் தைரியம். தான் செய்யப்போகும் காரியத்திலேயுள்ள அபாயம் முழுவதையும் ஆற அமர ஆலோசித்துப் பார்த்து, அதனுல் தனக்கு உயிர்ச் சேதம் வந்தாலும் வரலாம் என்பதையும் உணர்ந்து, அச்செயலால் விளையக்கூடும் நன்மையைக் கவனித்துப் பார்க்கும்பொழுது அதிலுள்ள அபாயத்தை ஒருபொருட்டாக மதிக்கலாகாது என்னும் உறுதியைக் கொண்டு, தனக்கு அபாயம் வந்தாலும் வரட்டும், உலகத்துக்கோ மற்ருருவனுக்கோ நன்மை விளைந்தால் போதும் என்று ஒழுங்காக எண்ணிப்பார்த்து, துணிந்து செய்யும் செயல்தான் உண்மையான தைரியத்தைக் காட்டும்."

இங்கிலாந்து கைத்தொழிலிலே சிறந்த நாடு என்பது உங்களுக்குத் தெரியும். ஒவ்வொருவகைக் கைத்தொழிலுக்கும் அடிப்படியிலே நிலக்கரி அவசியம். நிலக்கரி பூமிக்குள்ளிருந்து தோண்டி எடுக்கப்படவேண்டும். இங்கிலாந்திலே அங்கங்கே எலி வளைகள் மாதிரி நிலக்கரிச் சுரங்கங்கள் காணப்படுகின்றன. கிணற்றுக்குள்ளே வாளி வழியாக இறங்குவது போல் மனிதர்கள் சுரங்கத்துக்குள்ளே இறங்கி அங்கேயுள்ள நிலக்கரியைக் குடைந்து குடைந்து தோண்டி எடுத்து வெளியே எடுப்பார்கள். அங்கே சுரங்கத்தினுள்ளே ஒரே மையிருட்டாக இருக்கும். மேலிருந்து வெளிச்சம் வருவதற்கு வழியே கிடையாது. போதாததற்கு எங்கும் கன்னங்கறேலென்ற கரியும் கரித்தூளும். சுரங்கவேலை தொடங்கின காலத்திலே விளக்குகளைக் கீழே எடுத்துக்கொண்டுபோனுர்கள். ஆனுல் அங்கே கசிந்த ஒருவிதக் காற்றுனது விளக்கின் கொழுந்தால் தீப்பற்றிக்கொண்டு படீரென்று வெடித்தது. அதனுல் உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏராளமாக விளைந்தன. இம்மாதிரியாகப் பலமுறை நிகழவே, சுரங்கவேலை மிகவும்

அபாயகரமான வேலையாகிவிட்டது. எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் கீழே இறங்கி வேலை செய்ய ஜனங்கள் பின் வாங்கினார்கள். ஆனால், சிற்சிலர் தங்கள் குடும்ப நிலையை எண்ணித் தமது உயிரைக்கூடப் பெரிதாக எண்ணாமல், கீழிறங்கிப் பயந்து வேலை செய்து வந்தார்கள். அவர்கள் சுரங்கத்துக்குள்ளே இறங்கும்பொழுது விளக்குக்களை எடுத்துப் போவதில்லை. சுரங்கத்துக்குள் சுழலும் சிறு இரும்புச் சக்கரத்தின் விளிம்பிலே அவ்வப்போது ஒரு கூழாங்கல்லை அழுத்திப் பிடித்து வந்தார்கள். அதிலிருந்து மினுக்கு மினுக்கென்று தோன்றும் சிறுபொறிகளின் வெளிச்சத்தைக் கொண்டே இருட்டில் வேலை செய்து வந்தார்கள். அதனால் சுரங்கங்களிலே வேலை செய்வது மிகவும் கஷ்டமாகவே இருந்தது.

அந்தக் காலத்தில் ஹம்ப்ரி டேவி என்னும் விஞ்ஞானி ஒருவர் அந்தப் பிரதேசத்திலே தம் நண்பர் ஒருவருடைய வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருந்தார். அப்பொழுது அவர்களுடைய நண்பர்களிற் சிலரும், ஹட்ஸன் என்னும் பாதிரி ஒருவரும் அவரைப் பார்த்து, "சுரங்கங்களிலே விளக்கினால் ஏற்படும் வெடிப்புக்களை நிறுத்துவதற்கு ஏதாவது வழி கண்டுபிடிக்கலாகாதா?" என்று கேட்டுக்கொண்டார்கள்.

டேவி சம்மதப்படவே, சுரங்கத்திற் கசியும் காற்றினால் ஏற்படும் அபாயங்களைப்பற்றி அவர்கள் விவரமாகச் சொன்னார்கள். அவ்விடங்களிலே இருட்டிலே வேலை செய்ய முடியாமலிருப்பதையும், சாதாரணமான விளக்குக்களை எடுத்துக்கொண்டு செல்வதினாற் சில சமயங்களிலே திடீர் திடீரென்று வெடிப்புக்கள் உண்டாவதையும், மின்னலும் பூகம்பமும் ஒன்றாய்ச் சேர்ந்தாற் போலத் தோன்றும் அந்தக் கோர சம்பவங்களின் கொடுமைகளையும் அவர்கள் விரிவாய்ச் சொன்னார்கள்.

அவற்றைக் கேட்டு மனமிளகிய டேவி அந்தக் கொடுமைகளை நிவர்த்திப்பதற்கு வேண்டிய வழிகளை ஆராய்ந்தார். எத்தனையோ சோதனைகளை நிகழ்த்தினார். அவற்றின் பயனாகப் புதுமாதிரியான விளக்கு ஒன்றை நிருமித்தார். அந்த

விளக்குச் சாதாரணமான விளக்கைப் போன்றது; ஆனால் அதைச் சுற்றி மெல்லிய வலைக்கம்பியினால் உறையிடப்பட்டிருந்தது. ஆராய்ச்சிச் சாலையிலே நடத்திய சோதனைகளால் அந்த விளக்கானது பக்கத்திலுள்ள காற்றை வெடிக்கச் செய்யாதென்பதை டேவி கண்டுகொண்டார். ஆனால் விளக்கின் உட்புறத்திலே திரி கொழுந்துவிட்டு எரிகிறது. அதன் சுவாலையின் வெளிச்சம் வலைக்கம்பியின் இடுக்குக்களின் வழியாக வெளியே தெரிகிறது. அப்படியிருந்தும் சுவாலை வெளியே வராதென்றார் டேவி. இது கேட்பதற்குக் கூடச் சரியாய்த் தோன்றவில்லையல்லவா? தீப்பற்றும் காற்று வலைக்கம்பியின் வழியாக உள்ளே போகாதா? விளக்கினுள்ளே புகுந்த காற்றுத் தீப்பற்றாதா? பற்றிக்கொண்டு அது வெடிக்குமானால், சுவாலை வெளியே வந்து வெளியில் உள்ள காற்றும் வெடித்துவிடாதா? — என்று ஜனங்கள் பயந்தார்கள்.

ஆனால் "வெளியிலுள்ள காற்று உள்ளே வரும். வந்து உள்ளே தீப்பற்றினாலும் பற்றும். ஆனால் அதன் சுவாலை வலைக்கம்பிக்கு வெளியே வராது" என்றார் டேவி. அவர் எவ்வளவு சொல்லியும் சனங்களுக்கிருந்த அவநம்பிக்கை குறையவில்லை. 'அந்த விளக்கை எடுத்துக்கொண்டு, தீப்பற்றும் காற்று நிறைந்த சுரங்கத்தினுள்ளே ஒருவன் போனால், நிச்சயமாக வெடிப்பு உண்டாகி அவன் இறப்பது உறுதி" என்று ஜனங்கள் சொன்னார்கள். ஆதலால் ஒருவரும் விளக்கை எடுத்துக்கொண்டு சுரங்கத்தில் இறங்கத் துணியவில்லை. இறங்கியவன் சாவது உறுதி என்பது அவர்களது பூரணமான நம்பிக்கை.

இந்த நிலையில் ஹட்ஸன் என்பவர் மிகவும் துணிகரமான தீரச்செயலைச் செய்யத் துணிந்தார். எல்லாரும் செய்ய அஞ்சுங் காரியத்தைத் தாம் செய்ய வேண்டியது அவசியம் என்று அவர் நினைத்தார் — பொது நன்மையின் பொருட்டு. அவர் விஞ்ஞானியல்ல; அவர் ஒரு பாதிரி.

1816-ம் வருஷத்தில் ஜனவரி மாதத்திலே ஒரு நாள் டேவி செய்த விளக்கு ஒன்றை ஏற்றிக் கையில் எடுத்துக்கொண்டு அச்சம் உடனிருந்து பின்னிழுக்கக் கருணையும் உணர்ச்சியும் முன்னிழுக்க, அவர் சுரங்கத்தில் இறங்கினார். குகைபோன்ற அவ்விடத்திலே இருள் எங்கும் சூழ்ந்

இருந்தது. வெகு தூரத்துக்கப்பாற் சுரங்கக்காரன் ஒருவன் இரும்புச் சக்கரப்பொறியின் வெளிச்சத்திலே சுரங்கத்திலே நிலக்கரியைத் தோண்டிக்கொண்டிருந்தான். அவனைத்தவிர வேறு ஒருவரும் இல்லை. எங்கும் துணையில்லா அந்தகாரம் நிறைந்து கிடந்தது. கண்ணுக்குத் தெரியாத அருளற்ற கொடுங்காற்று எங்கும் கசிந்து பதுங்கிக் கிடந்தது. விளக்கை எடுத்துக்கொண்டு சிறிதுதூரம் மெல்ல மெல்ல அடிமேல் அடிவைத்து நடந்தார் ஹட்ஸன். ஒவ்வொரு கணத்திலும் எங்கே படீர் என்ற வெடிப்பு உண்டாகுமோ என்று நினைக்க நினைக்க, அவருடைய நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. மேன்மேலும் எழும் அச்சத்தை அடக்கி, அமர்த்தி மேல் நடந்தார். வெடிப்பு உண்டாக வில்லை. அப்பொழுதுதான் அவருக்கு டேவியின் ஆராய்ச்சி யில் நம்பிக்கை பிறந்தது. இனிமேல் அபாயம் இல்லை என் பதைத் தெரிந்துகொண்டார். அதன் பிறகு, சுரங்கத்திலே தன்னந்தனியாக வேலை செய்துகொண்டிருந்த சுரங்கக்காரன் இருந்த இடத்தைப் பார்த்துப் போனார். வேலையில் ஈடுபட் டிருந்த சுரங்கக்காரன் அவர் வருவதை முதலிற் பார்க்க வில்லை. பிறகு ஒருநாளுமில்லாத வெளிச்சம் அன்று சுரங் கத்திற்குள்ளே தோன்றவே அவன் தலையை நிமிர்த்திச் சுற்றிப் பார்த்தான். விளக்கைக் கையிலேந்திய ஓர் உருவம் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். உடனே நடுநடுங்கிப் பயமும் கோபமும் கலந்த குரலில், “அணை அந்த விளக்கை, அணை! அணை!” என்று கத்தினான்.

ஆனால் விளக்கைக் கொண்டுவரும் ஆள் தயங்கவில்லை; நிற்கவில்லை; விளக்கை அணைக்கவும் இல்லை. முன்போலவே அது அவனைப் பார்த்து வந்துகொண்டேயிருந்தது. அதைக் கண்டு அவன் வாயில் வந்தபடியெல்லாம் வைதான். “அடே முட்டாள்! அங்கேயே நில்லு! அடே பைத்தியக்காரா! கிட்டவராதே! போ! போ! அந்தப்பக்கமாகத் திரும்பிப் போ! — அட சனியனே! நான் சொல்லுவது காது கேட்க வில்லையா? நீ செவிடா? வராதே என்கிறேனே! மடையா? போ!” என்று உரக்கக் கூவினான்.

ஆனால் இருள் நிரம்பிய குகையிலே சுடரும் சிறு விளக்கை ஏந்திய உருவம் அவன் சொல்லுவது ஒன்றையும் கவனியாமல், வாயைத் திறந்து பதிலே சொல்லாமல் அமைதி

யாக, நிதானமாக அவனைப் பார்த்து வந்துகொண்டே யிருந்தது. பயத்தால் மதி கலங்கிய அந்தச் சுரங்கக்காரனுக்கு அது பேயோ, அல்லது பிசாசோ என்ற பயம் உண்டாயிற்று. "அடே நில்லடா! மனிதனானால் நில்! பிசாசானால் ஓடிப்போ! தெய்வத்தின்மேல் ஆணை!" என்று கதறினான். அதற்கும் பதில் சொல்லாமல் அவ்வுருவம் வந்துகொண்டேயிருக்கவே, அவன் பின்னும் பயந்து, "ஐயோ! உன்னைக் கெஞ்சுகிறேன். நீ யாராயிருந்தாலும் சரி, விளக்கோடு இங்கே வராதே. விளக்கை வைத்துவிட்டாவது வா. உன்னை உயிர்ப்பிச்சை கேட்கிறேன்" என்று கெஞ்சினான்.

அவ்வுருவம் அதற்கும் பதில் சொல்லாமல் மேன்மேலும் வந்துகொண்டேயிருந்தது. சுரங்கக்காரன் முழந்தாள்பணிந்து, கைகளைக் கூப்பித் தன்னுடைய தெய்வத்தை நோக்கி, "என்னைக் காப்பாற்ற வேண்டும் தெய்வமே! இந்த ஆபத்தில் உன்னைத் தவிர எனக்கு வேறு கதி இல்லை. நான் சாகப் பயப்படவில்லை. நான் செத்தால் சாகிறேன். அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் வீட்டிலுள்ள என் மனைவியும் குழந்தைகளும் அநாதைகளாகிவிடுவார்களே! அவர்களை யார் காப்பாற்றுவார்கள்" என்று பரிதாபமாகத் தெய்வத்தை நோக்கி மன்றாடினான். அபாயம் நிரம்பிய இடத்திலே, நிர்ப்பயமாய் யாதோர் அபாயமும் விளைவிக்காமல், விளக்கோடு வரும் உருவமும் அவ்வுருவம் கையில் தாங்கி வரும் விளக்கும் தெய்விகமானவைகளாகவே இருக்கவேண்டுமென்று அவன் எண்ணலானான். மௌனமாய்த் தன்னை எதிர் நோக்கி வரும் உருவத்தையே பார்த்தவண்ணமாய் வாய்திறவாது மூச்சுக்கூடவிடாது திகைத்து நின்றான்.

இவ்வாறு அவனுடைய மனம் பலவகையாகக் குழம்பித் தத்தளித்துக்கொண்டிருக்கையில், விளக்கைப்பிடித்த உருவம் அவன் கிட்ட வந்துவிட்டது. வரவே, அது பேயல்ல, பிசாசுமல்ல, தன்னுடைய ஊர்ப் பாதிரியாகிய கருணை நிரம்பிய ஹட்ஸன் என்பதைத் தெரிந்துகொண்டான் சுரங்கக்காரன். ஹட்ஸன் ஊரிலுள்ள ஏழைகளுக்கெல்லாம் அன்பர். ஒருவருக்கும் தீங்கு செய்யாதவர். ஒருவருக்கும் தீங்கு நினையாதவர். எல்லாருக்கும் நன்மையே செய்பவர். தீப்பற்றும் காற்றின் நடுவிலே கொழுந்துவிட்டெரியும் விளக்கும் கையுமாய் அவரைக் கண்டதும் சுரங்கக்காரன் பிரமித்துப்

போனான். அபாயம் நிரம்பிய இடத்திலே, அபாயம் விளைவிக்கும் கருவியைக் கையிலேந்தியும், அபாயத்தை உண்டாக்காமல் இருப்பதைக்கண்டு அவன் அடைந்த வியப்புக்கு அளவேயில்லை. "இது என்ன ? தேவலோகத்திலிருந்துவந்தவிளக்கா ? ரக்ஷைபெற்ற தீபமா ? அநாதைகளைக் காக்கும் இந்தச் சுடர்விளக்கு எங்கிருந்து வந்தது ? தேவர்களே ஏழைகளுக்கு இரங்கி இவ்விளக்கை அருளினார்களா ? உன் கிருபையே கிருபை" என்று அவன் தெய்வத்தைத் துதித்தான்; ஹட்ஸனையும் புகழ்ந்தான்.

"கடவுள் செயல்" என்றான் சுரங்கக்காரன்.

"நான் சுரங்கத்துக்குள் இறங்கும்பொழுது கடவுளைப் பிரார்த்தித்து, அபாயம் விளையக்கூடாது என்று வேண்டிக்கொண்டு பயத்தோடுதான் உள்ளே இறங்கினேன். ஆனால் தீப்பற்றும் காற்று இருக்கும் வழியாகக் கொஞ்சதூரம் நான் நடந்த பிறகு இனி ஆபத்து ஒன்றும் விளையாது என்பதைக் கண்டுகொண்டேன். அதன் பிறகு எனக்குப் பயமே இல்லை. அதனால்தான் நீயிருக்கும் இடத்தைப் பார்த்து வந்தேன். இந்த ரக்ஷாதீபத்தினுடைய குணத்தைப்பற்றி நான் சொல்லுவதோடு நீயும் கூடச் சேர்ந்து சொன்னால் ஜனங்களுக்கு நம்பிக்கை அதிகமாயிருக்குமென்று நினைத்துத் தான் உன்பக்கமாக வந்தேன். உனக்கு மனக்கவலையும், பெரும் பயமும் சிறிதுநேரம் உண்டாக்கியதற்கு என்னை மன்னிக்கவேண்டும்" என்றார்.

அதற்கு அந்தச் சுரங்கக்காரன், "உமக்கு மனத்தில் சந்தேகமும் பயமும் இருந்தபோதிலும், ஏழைகளாகிய எங்கள் பொருட்டு உம்முடைய உயிரைப் பலி கொடுப்பதற்குத் தயாராக இருந்து, சுரங்கத்தில் விளக்கோடு இறங்கிய உம்முடைய கருணையே கருணை ! தைரியமே தைரியம் !" என்று கொண்டாடினான்.

ஹட்ஸன் செய்த இந்தத் தீரச் செயலின் விருத்தாந்தம் நாடெங்கும் பரவிற்று. ரக்ஷாதீபத்தின் மகிமையை எல்லாரும் கேள்விப்பட்டார்கள். பிறகு சுரங்கங்களிலே அதை வழக்கமாக உபயோகிக்கத் தொடங்கினார்கள். உயிர்ச்சேதம் நீங்கிற்று. தீபத்தை நிருமித்த டேவியை எல்லாரும் வாழ்த்தினார்கள்.

4 புனலாட்டு

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பர். அது 'இல்லிற்கு மடக்கொடி இன்மைபோல' எனக் காட்டலால், 'பெருக்கற்று அடிசுடும் அந்நாளும், அவ்வாறு ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்' பெரும் பயனையும் பெறவைத்தமை யாகும். அழகினையுடைய ஒன்று, விழுமிய பயனையும் உடைத்தேல், அதனைத் தெய்வத்தை யொப்பப் போற்றுதல் பண்டு தொட்டுள்ள மரபாகும். அது உலகின் எப்பகுதியினர்க்கும் பொருந்துவதொன்று என்பது அவரவர் சரித்திர நோக்கிற் புலனாகும். அதனால், பாரத நாட்டில் பிரவஹிக்கும் ஒவ்வொரு நதியும் தெய்வாமிசம் பொருந்திப் புண்ணிய தீர்த்தங்களாகக் கொண்டாடப்படுதலும் இயல்பே ஆகும்.

தமிழ் நாட்டில் மேற்கு மலைப்பகுதி வேண்டிய அளவு மழையைப் பெற, தென்பகுதியும் கிழக்குப் பகுதியும் மிகக் குறைந்த அளவுக்கே மழையைப் பெறுகின்றன. எனினும் அவ்விரண்டு பகுதிகளும் பெருவளம் கொழிக்கும் நாடுகளையுடையன என்பது, 'சோழவளநாடு சோறுடைத்து' எனவும் பிறவுமாய் வருவனவற்றாற் றுணியப்படும். எனவே அவற்றின் வளமிகுதி மழையானன்றி, மழைவளம் பெற்றுப் பெருகும் யாறுகளானேயாமென்பது அறிதல் வேண்டும். சோழ நாட்டைப் பொன்னி என வழங்கும் காவேரியும், பாண்டி நாட்டைத் தமிழ் வையைநதியும் வளம்படுத்துவன வாகும். பண்டுள்ள தமிழ் மன்னர் அவ் யாறுகளின் நீரை வேண்டுழியெல்லாம் தேக்கி, நிலத்தைப் பெரிதும் பயன்படச் செய்தனர். அஃது அம் மன்னர் வரலாறுகளில் இருந்து அறியப்படும்.

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே — மன்னனுயிர்த்தே மலர்தலை உலகம்" — எனக் கூறுமாற்றால், 'நெல்லும் நீரும் உளவாய வழியன்றே, மன்னன் செங்கோல் செவ்விதாய் உலகுக் குயிராவது' என்றதனையே புலப்படுத்துதலினால், மக்கள், தம் உணவையும், அதுவாயிலாத் தம் மியலறங்களையும் ஆற்றுதற்குப் பெருந் துணையாய் நீர் பெருக்கி வரும் ஆற்றைப் பலபடப் புனைந்து கூறுதலினும், வணங்கு

தலினும், வாழ்த்திக் காணிக்கை செலுத்துதலினும் பொய் யாரன்றே.

“ கண்ணியர் தாரர் கமழ்நறுங் கோதையர்
பண்ணிய வீகைப் பயன்கொள்வா ளுடலால்
நாறு ளுறையு நறுஞ்சாந்துங் கோதையும்
பூத்த புகையும் அவியும் புலராமை
மறுஅற்க வான மலிதந்து நீத்தம்
அறுஅற்க வையை நினக்கு.”

எனவும்,

“ நத்தொடு நள்ளி நடையிறவு வயவாளை
வித்தி யலையில் விளைக பொலிகென்பார்.”

எனவும் வருகின்ற பரிபாடற் பகுதிகள், மகளிரும் மைந்தரும் வையைக்குக் காணிக்கை தந்து வணங்கி வாழ்த்துதலைத் தெரிப்பனவாகும்.

‘ நெறிநீ ரருவி யசும்புறு செல்வ
மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா
தண்பரங் குன்ற நினக்கு,”

என்பது மலையைப் பழிச்சுமுகத்தால் அருவியை வாழ்த்தியவாறுகும்.

உலகம் வழங்கிவரற்கேது வானம் பொய்யாது நிற்றலே என்று, அதனை “துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப் பார்க்குத் — துப்பாய தூஉ மழை” என, உணவை ஆக்கு வதும் உண்ணப்படுவதும் தானேயாய் அமைந்து உயிர் தாங்கி நிலைபெறுத்துஞ் சிறப்பினைக் காரண காரிய முறை தழீஇக் கூறுவர் வள்ளுவர். அவர் ‘உலகொழுக்கு நீரின் ஒழுக்கை இன்றியமையா’ தென இறுதியில் அறுதியிட்டுச் செல்வர். ஆதலின் வானொழுக்கும் (மழை), அவ்வொழுக்கி னின்றொழுகும் (யாற்று) நீரொழுக்கும் உலகந் தாங்கும் பயன் தருமியல்பிற் றம்முள் வேறுவன வல்லவென்பது துணியப்படும். அதனுனன்றே பழந்தமிழ் மக்கள் யாற்றுப் புதுப்புனல் வருங்காலத்தும், மகிழ் தூங்குதல் சிறந்த பிற போழ்தும் பூவும் புகையும் அவியும் முதலாயின கொண்டு, பூம்புனலாடி வணங்கி, அயலிருஞ் சோலைவாய் உண்டாட் டயர்தலும் ஆயினர் என்பது.

பரிபாடல் என்னும் இன்னிசைச் செந்தமிழ் நூலில் இப்பொழுதுள்ள பாடல் இருபத்திரண்டனுள் எட்டு,

வையை நதியைப் பற்றியனவாகும். மேற்கு மலைக்கண் 'மழை பொழியப் பெருகி வருஞ் செம்புலப் புது நீரில், தமிழ்நாட்டு மைந்தரும் மகளிரும், நீரணி யணிந்து ஆவனகொண்டு எதிரேற்று ஆடும் செய்திகள் அவற்றுட் கூறப்படுகின்றன. சிந்தாமணி முதலிய காவியங்களிலும் ஆற்றின் புதுநீர் வருகையும், அதனால் மக்கள் செயலும் முதலாயின காவிய உறுப்பாக அமைந்துள்ளன. சில இடங்களில் தம்முடலையலைத்துறுப்பணியின் முயன்ற மக்கள், தம்முடல் நோதீரப் பூம்புனலாடி மகிழும் செய்தி கூறப்படுதலும், ஏனைத் தெய்வ விழாவே போல், யாற்றுப் பூம்புனலாட்டு விழாவும் ஒன்றாகக் கூறப்படுதலும் உளவாம்.

மேகமானது கடல்நீரைச் செவ்விதா அறமுகந்து எங்கும் பரந்து கருக்கொண்டது. அது வலிய இடியே றொலிப்பத் தன்மே லேறின, நீர் நிறைதலாற் றுளும்பும் பாரத்தைப் பொறுக்கமாட்டாது, கரையுடைந்த குளத்து நீர் கழலுமாறுபோல, அப்பாரம் கழல வயிறழிகின்றது. அதனால் நிலம் மறைவதுபோல வெள்ளம் எங்கும் பரந்து மிகுகின்றது. மிகுதலால் மலையின்கண்ணுள்ள மான் முதலாயின கலங்கவும், மயில் அகவவும் அருவிகள் மலைமாசு கழிய இழிகின்றன. அருவிகள் திரண்டு ஒரு பேரியாறாய், அது

" இரவிருள் பகலாக விடமரிது செலவென்னாது
வலனிரங்கு முரசிற் றென்னவ ருள்ளிய
நிலனுற நிமிர்தானை நெடுநிரை நிவப்பன்ன
பெயலாற் பொலிந்து பெரும்புனல் பலநந்த
நலனந்த நாடணி நந்தப் புலனந்த."

பொங்கி வருகின்றது. எல்லையும் ஆழமும் சென்று அளந்து கடையறியாக் கடல்தலைக்கூட, நிலவெல்லையிற் பசி முதலிய துன்பங்கள் சுருங்கவும், வளம் பெருகவும், விரிந்த பல பூக்கள் நிறைந்த போர்வையுடன் பருமணற் பரப்பெல்லாம் மூடி ஆய்ந்தளவறியாப் பலவித ஓசைகளும் ஒலிக்க வருகின்றது அப் பூம்புனல். அதுதான், மரங்கள் தரும் மலர் நாற்றமும், தேன் தந்த மலர் நாற்றமும் செறும் வெயிலையும். மிக்க காற்றையும் ஏற்றுடையவாய காடுகள் தரும் வெங்கார் நாற்றமும், மரக் கொம்புதிர்த்த கனி நாற்றமும் ஆகிய இந் நாற்றங்களை உடன் கலந்து தான் கொண்டுவந்து பிறர்க்கும் கொடுக்கின்றது. அன்றியும்,

காற்றுனலேயும் பெரிய கொம்பர்களேயுடைய மரங்களே வேர் அகழ்ந்தும், உயர்ந்த இடங்களில் உள்ளனவற்றைப் பயம் பிடைப் பரப்பியும் விளேயாடி, ஆடலின் இயல்பை அறியா நங்கைபோலத் தான் வேண்டிய இடங்களில் நடந்தும், ஊடலியற்கையறியாத ஊடலுவகையள் கணவனேக் கடந்து நீங்குமாறுபோலக் கட்டிய அணேகளே முறித்தும், நறியன பல கூடிய பொது நாற்றத்தை உள்ளே உள்ளே அடக்கி மேலே புதியனவான நாற்றத்தை அது செய்யா நின்றது. இனி, 'கைவண்மை யுடையான் ஈகை போலும்' என்று கண்டார் கூறச் சிலம்பிற் கறியொடுஞ் சாந்தொடும், 'நெய் குடை தயிர் போலும்' நுரையோடும் எவ்விடத்தும் மேன் மேலும் பெருகிவரும் புனல் வரவின்கண் காவினும் கயத்தி னும் ஆற்றிடைக் குறையினும் மதுவையுண்டு வண்டுபாடப் பூவிஞகிய அழகு திசைதொறும் பொலிந்தது.

இன்ன தன்மைத்தாய்த் தன்னகத்தே யாய்வார்க்குப் பல்பயன் காட்டிவரும் நீர்ப் பெருக்கின் தோற்றம். நுவலுந் தோறும் நயம்பல தரூஉம் நுண்புலவர் கவியெனும்படி இருந்தது.

> "மாசில் பனுவற் புலவர் புகழ்புல
> நாவிற் புனேந்த நன்கவிதை மாருமை
> மேவிப் பரந்து......"

எனவும், 'புலவர் — கவி எனக் கிடந்த கோதாவரி'— எனவும் வருவனவற்ருல் அஃதுணரப்படும். இனி அப் பூம் புனல் தான்வருஞ் சாரலகத்தேயுள்ள பலவேருய மலர்களே யுஞ் சுமந்து, ஒரு நீர்த்துறைக்கண் ஒன்று சேர்க்கும்போது உண்டாகும் அழகு பலபட்டப் புனேதற்குரியதே.

> "வேய்பயில் சோலே யருவி தூர்த்தரப்
> பாய்திரை யுந்தித் தருதலா னுய்கோல்
> வயவ ரரிமலர்த் துறை யென்கோ
> அரிமலர் மீப்போர்வை யாரந்தாழ் மார்பிற்
> றிரைநுரை மென்பொருட்டுத் தேமணச் சாந்தின்
> அரிவையது தானேயென் கோகள் ளுண் ணூஉப்
> பருகுபடி மிடறென்கோ."

என்னுமடிகள் புனேந்து காட்டும் அழகு நுழைபுல விருந்தேயாம்.

மழைக்கோள் சுபநிலையின் நிறப்பப் பொழிந்து வரும் புது நீரின் வரவு, அதனாற் பயன் கொண்டு வாழும் மக்களுக்கு உள்ளக்கிளர்ச்சியையும் ஊக்கத்தையும் தருகின்றது. களனிகடோறும் நீர் பெருகலால் ஆவன செய்யப் புகுவர் பலர்; அணைகரை நீர் மோதுதலால் ஏயின புரியப் போயினர் பலர். பெருகிவரும் யாற்றுநீர் கரையுடைத்தமையையும், அதனால் அதனை அடைத்தற்கு ஊர் எழுந்தமையையும் புலவர் ஒருவர்,

"விருப்பொன்று பட்டவர் உளநிறை யுடைத்தென
வரைச்சிறை யுடைத்ததை வையை வையைத்
திரைச்சிறை யுடைத்தன்று கரைச்சிறை யறைகெனும்
உரைச்சிறைப் பறையெழ ஊரொலித் தன்று"

எனக் கூறுவர்.

இனி, காவிய முதலியவற்றின் உறுப்பாய் அமைந்துள்ள யாற்றுப் படலத்து, அவ்யாறு ஐந்திணை நிலத்து வரும் வரவும், அவ்வந் நிலங்களில் வாழும் மக்கள் அப் பெருக்கின் போழ்து செய்வனவும், அவற்றுள் விசேடமாக மருதநிலத்துள்ள மக்கள் — உழவர் தங்களிதூங்கு முயற்சிகளும் பிறவும் விரித்துச் சொல்லப்படுகின்றன.

'பெயின் நந்தி வறப்பிற் சாம் புலத்திற்குப் பெயல் போல' வரும் யாற்றுப் புதுநீர் வரவினால் மகிழ்ந்த மகளிரும் மைந்தரும் புனலாடல் குறித்து, வேண்டுவ பலவு முடன் கொண்டு செல்கின்றனர். அவருந் தாந்தாம் முற்பட்டுச் செல்லுதல் விருப்பினால் தம் உடை அணி முதலாயின வற்றை அணியும் முறைமையை மறந்து மாறியணிந்தவராய் விரைந்தனர். அங்ஙனம் விரைந்தார் செலவு:

"திண்டேர்ப் புரவி வங்கம் பூட்டவும்
வங்கப் பாண்டியிற் றிண்டே ரூரவும்
வயமாப் பண்ணுந மதமாப் பண்ணவும்
கயமாப் பேணிக் கலவா தூரவும்
மகளிர் கோதை மைந்தர் புனையவும்
மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்
முந்துறல் விருப்பொடு முறைமறந் தணிந்தவர்
....
கோடேற் றெருத்தத் திரும்புனலிற் குறுகி"

என நகைச்சுவை ததும்பக் கூறப்படுகிறது. செல்லு இன்றவர் தெரிகை மேலும் மேலும் மிகுதலாலே எத்திறத் தாரும் ஒரே தன்மையராய் மென்னடையையே மேற்கொள்வா ராயினர். அதனை "—தாள—விதிகூட் டியவிய மென்னடை போல" எனக் காட்டிய உவமைப் பகுதிக்கு, ஆசிரியர் பரிமேலழகர் "தாள விதி கூட்டிய இயமென்னடை போற லாவது: இயங்கள் ஒன்றற் கொன்று கூறு வேறுபாடுடைய வேனும் விளம்பித நடையையுடைய தாள கதியால் எல்லாம் மென்னடையவாய்ச் செல்லுமாறு போல, எதிர் செல்கின்ற வர்களும் வன்மை மென்மை இடைமை என்னும் பண்பு வேறுபாடுடையரேனும் நெருக்கத்தால் எல்லாரும் மென் னடையராய்ச் சேறல்" — என விளக்கி யுரைக்கும் பண்பு அநுபவத்தொடு பொருந்துவதாகும்.

யாணர் நன்னீராடலில் எப்பருவத்தினர்க்கும் உரிமை பொதுமையாகவே இருந்தது. தெய்வ விழாவின் உரிமை வரையப்படாமைபோல, புனலாடல் உரிமையும் வரையப் படவில்லை.

"முதியர் இளையர் முகைப்பரு வத்தர்
வதிமண வம்பலர் வாயவிழ்ந் தன்னோர்
இருதிற மாந்தரும் இன்னினி யோரும்
விரவுநரை யோரும் வெறுநரை யோரும்
பதிவத மாதர் பரத்தையர் பாங்கர்"

என வரும் பகுதி, புனலாடச் சென்றோர்தம் பருவ வெல்லைகளைக் குறிப்பதாகும்.

புனலின்கண் ஆடச் சென்றவர், புனலாடற்குரிய கருவி களை எல்லாம் உடன்கொண்டு சென்றார்கள். நீரெக்கியும், துருத்தியும், சிவிறியும், நீந்தும் புணையாய் அமைந்த வாழைத் தண்டு முதலியனவும், நீராடுங்கால் அணியும் உடை முதலி யனவும் அவர் கொண்டு செல்வர். நீரெக்கி முதலியவற்றால் ஒருவர்க்கொருவர் நீரெற்றியும் வீசியும் கலந்தாடும் மைந்த ரும் மகளிரும் தம் வேட்கை தீரும்வரை புனலின்கண் ஆடுவர். அவர் அங்ஙனம் ஆடும் தோற்றத்தான் அந்நீர்ப் பரப்பு ஒரு போர்க்களம் போலப் பொலிவு பெற்றது.

"வெள்வாள் விதிர்ப்போர் மிளிர்குந்த மேந்துவோர்
கொள்வார் கோல்கொள்ளக் கொடித்திண்டேர் ஏறுவோர்

புள்ளேர் புரவி பொலம்படைக் கைம்மாவை
வெள்ளநீர் நீத்தத்து ளூர்பூர் புழக்குநரும்
....
தெரிகோதை நல்லார்தங் கேளிர்த் திளைக்கும்
உருகெழு தோற்ற முரைக்குங்கா லூரும்
பொருகளம் போலுந் தகைத்தே ''

என வரும் அடிகள் புனலாடும் நீர்த்துறையின் தோற்றத்தைக் கூறுவனவாகும்.

இங்ஙனம் நிகழும் நீராடற் போரில், விரைந்தாடும் மகளிர் காதில் தளிரைச் செருகியும், மைந்தர் கண்ணியைப் பறித்தும், மகளிர் கைவளையும் தலைக்கோலமும் உடுத்த துகிலும் துகிற்குள்ளணியும் மேகலையும் புறத்தணியும் காஞ்சியும், மைந்தர் ஆழி மோதிரமும் வாகுவலயமும் என்றிவையெல்லாவற்றையும் கவர்ந்து செல்லுதலாற் பூம்புனலே வென்றி காண்கின்றது.

புனல் பொருது மெலிந்தாரெல்லாம் தம் புணையை விட்டு நீங்கிக் கரை சேர்ந்தனர்; ஈரம் புலர்த்தித் துகிலும் பிற வணியும் அணிந்தனர்; தெம்புண்டாக வெம்மை மிக்க நறவினையுண்டு கிளர்ந்தனர். 'காமமும் கள்ளும் கலந்துடன் பாராட்டத் தாமமர் காதலரொடாடப் புணர்வித்த' லும், செய்யின்கட் பொன் பரப்புதலும், கள்ளொடு காமம் கலத்தலால், கரையறும் இன்பவெள்ளத்தைத் தருதலும், மக்களையன்றி விலங்கு முதலியவற்றையும் ஒத்த அன்பினவாக்குதலும் முதலாய அப்புனல் செய்கின்ற உதவிக்குக் கைம்மாறு செய்ய விழைந்தனர்: பொன்னாற் செய்த சங்கு நண்டு முதலியவற்றை நீரில் வித்தி விளைக என்றும் பொலிக என்றும் வாழ்த்தி வணங்கினார்கள்; இரப்போர் தம் இன்மை கூறுதற்கு முன்பே அவர் விரும்பும் தானங்களைச் செய்தார்கள்; மாலையும் சந்தனமும் கத்தூரியும் ஆபரணமும் ஆகிய இவற்றை அழகு பொருந்த அப்புனற்குக் கூட்டுவித்தார்கள்; தீராத வேட்கையால் அப்புனலுண்ணாத நறவினையும் அதற்கு ஊட்டினார்கள்; இங்ஙனம் எல்லாஞ் செய்து மகிழ்வர்.

இனிப் புனல் பொருதிளையாத மைந்தர் அப்புனலின் கண் பல்வகை விளையாட்டுக்களையும் புரிந்து உளம் பூரிப்பர்;

அவருட் சிலர் வாழையின் தண்டைத் தழுவி நீரின்மேற் குவிச் செல்வர்; சிலர் தாளம் பூவின் நுண்டண்டாதை அலையிலும் நுரையிலும் தூவி அழகு பார்த்து மகிழ்வர்; சிலர் புனலெதிராடிய இளைப்பான் மெல்ல ஆடுவர்; சிலர் மகளிர் இழைத்த சிற்றிலில் அட்ட சிறு சோற்றை உண்ணச் செல்வர்; சிலர் தமக்கு முன் இட்டுப் பின் மறுப்பாராய மகளிருடைய பந்தையும் கழங்கையும் கொண்டோடி, அவ ரறிந்து வாங்கச் சென்றுழி எட்டாமல் நீருட் பாய்வர்.

நீராடி ஒழிந்தபின் ஒழியா வேட்கை ஒழியப் பின்னும் அயலில் உள்ள பொழிலுள் உண்டாட்டயர்தலும் வழக் காறாய் இருந்தது. அதனோடு களியாட்டயர்தலும் உண்டு. தமது துன்பமெல்லாம் மறந்து, இன்பத்திலே பாய்ந்த சிந்தையராய் நின்றே இவற்றை நுகருதலின், தமக்குத் துன் பத்தை மறக்கச் செய்த நதியும் முதலாயினவற்றை, வாழ்த் துதலுந் தக்காறாயிற்று.

‘இலம்படு புலவர் ஏற்றகை நெருமரப்
பொலஞ்சொரி வழுதியிற் புனலிறை பரப்பிச்
செய்யிற் பொலம்பரப்புஞ் செய்வினை ஓயற்க’

என்றும்,

‘ஆடுவார் நெஞ்சத் தலர்ந்தமைந்த காமம்
வாடற்க வையை நினக்கு’

என்றும்,

‘இன்பமும் கவினும் அழுங்கல் மூதூர்
நன்பல நன்பல நன்பல வையை
நின்புகழ் கொள்ளாதிம் மலர்தலை யுலகே’

என்றும் வரும் அடிகள் யாற்று நல்லியாணர்ப் புனல் தந்த தகைப்பரிய இன்பத்துட் டிழைத்த நல்லுள்ளத்தி னின்றெழுந்த கருத்துக்களே யாகும்.

5. தமிழ் வளர்த்த தாமோதரன்

சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியிலே நமது தமிழ் மொழி ஒரு நூதன சக்தியால் இயக்கப்பட்டது. மேலைநாட்டுப் புதிய நாகரிகமும், பயிற்சிப் பண்பும் (Culture) நமது நாட்டினரையும் தாக்கத் தொடங்கின. மேலைநாட்டுக் கல்வி முறை நம்மவர்களாற் கையாளப்பட்டது. மேலை நாட்டு இலக்கிய நயங்களிலே கவர்ச்சி உடையபராய் அதன் நலங்களைத் துய்த்து இன்புறத் தொடங்கினர். பெரும்பாலோர் அதன் புதுமை மோகத்தில் தம்மைப் பறிகொடுத்தும் விட்டனர். "புதியன கண்டபோது விடுவாரோ புதுமை பார்ப்போர்?" என்று கம்பன் கூறியது பொய்படுமா? இவர்கள் அந்நியமொழிகளைத் தாய்மொழி போலவே கருதினர்; தமது தாய்மொழியைப் புறக்கணித்தல் செய்தனர். ஆனால் ஒரு சிலர் இவர்களுக்கு விலக்காய் அமைந்து தாய்மொழியாகிய தமிழையும், அதன் இலக்கியங்களையும் போற்றி வரலாயினர். இச்சிலருள் ஒருவர் ராவ்பஹதுர் ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள்.

பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்திலே சைவமரபிலே வைரவநாதருக்குப் புத்திரராய்ப் பிறந்தவர்கள். அந்நாட்டிலேயுள்ள கிறிஸ்துவ சங்கம் கல்வி நிலையங்கள் நிறுவிக் கல்வியைப் பரப்பி வந்தது. ஆங்கிலங் கற்க விரும்பினோர்க்கு அந் நாளில் இச் சங்கத்தைத் தவிர வேறுகதி யில்லாதிருந்தது. சங்கத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றியாவது கல்வி கற்கவேண்டுமென்று தாமோதரனார்க்குத் தோன்றியது. "பிச்சை புகினுங் கற்கை நன்றே" என்பது நமது முன்னோர்களது கொள்கையல்லவா? சிலகாலம் கிறிஸ்தவர்களோடு கூடித் தங்கித் தமது கருத்தை முற்றுவித்துக் கொண்டனர். இவ்வநுபவம் ஒரு சோதனையாய் முடிந்தது. இதனால், புடமிட்ட பொன்போல அறிவொளி மிகுந்து, சைவசமயத்திற் பேரன்பு பூண்டவராய் விளங்கினர்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு."

என்பது பொய்யாமொழியன்றோ? ஆங்கிலக் கல்வியில் ஈடுபட்டனர் என்பது உண்மை; ஆனால் தமிழ்க் கல்வியை மறந்துவிடவில்லை. சுன்னை முத்துக்குமார கவிராசர் என்ற ஆசிரியரிடம் தமிழ் கற்றுச் சிறந்த புலமையெய்தினர். இவரது ஆசாரிய பக்தி;

"தெள்ளுதமிழ்க் கடல்கடந்து செழியகலைத்
துறைபடிந்து திரிபில் ஞானக்
கொள்ளைகொண்டு நுகர்ந்தமுத்துக் குமாரகவி
மேகமிதைக் கொடிச்சுன் னுக
வள்ளலெனை துள்ளமதி கொள்ளநறை
விள்ளுதமிழ் மணஞ்சற் றேறி
வெள்ளறிவின் முடைநாற்றம் வீவித்தான்
விரைமலர்த்தாள் மிலைவன் மாதோ"

என்ற அழகிய செய்யுளால் விளங்கும்.

யாழ்ப்பாணத்திற் கல்வி முடிந்தது. தாமோதரனார் தமிழ் நாட்டிற்கு வந்து, சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டங்கள் பெற்று, தமிழ் நாட்டிலேயே உயர்தர அலுவலில் அமர்ந்து, இறுதியிற் புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்து நீதிபதியாக விளங்கினர். இம்மகிழ்ச்சி நிரம்பிய வாழ்வில் அவர் தம்மை மறந்துவிடவில்லை. அவரது தமிழார்வம் அவர் உள்ளத்திலே மங்கா ஒளியாகத் திகழ்ந்து, ஒருகாலைக் கொருகால் வளர்ந்து முடிவிற் பேரொளிப் பிழம்பாகச் சுடர்விட்டு எரிந்தது.

ஒரு நாட்டில் இலக்கியவுணர்ச்சியும், பயிற்சிப் பண்பின் நலமும் பெருக வேண்டுமாயின், அந்நாட்டுப் புராதன இலக்கியங்களால்தான் அது கூடுவதாகும். புதிய இலக்கியங்களும் புராதன இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டுதான் பிறத்தல் இயலும். தேசியப் பற்றும் இப்பண்டை இலக்கியக் கல்வியினாலும், பயிற்சிப் பண்பினாலும் உண்டாவதேயாம். இதனை நன்குணர்ந்த பிள்ளையவர்கள், "தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் என்றிவை இல்லாதார் பெருமையும் ஒரு பெருமையா" என்று ஓரிடத்துக் கூறியிருக்கிறார்கள். இதனால் அவர்கள் உள்ளப் பாங்கு நன்கு விளங்குகிறது. நமது நாட்டில் மொழிப்பற்று மிகுதியாக உண்டு. ஆனால் இம்மொழிப் பற்றுச் சுய நலத்தோடு கலந்தது;

விரிந்து இடம் பரந்த நெறியிற் செல்லாது சுருங்கி இட்டிதாகிய குறுநெறியிற் சென்றது. புராதன இலக்கிய நலன்களின் உணர்ச்சிச்சார்பாகத் தோன்றுது. கேவலம் பெருமித வுணர்ச்சியில் தோன்றி, அறை கூவிப் போரிடுதற்குமாத்திரம் துணையாக அமைந்திருந்தது. இப்பொய்மையான மொழிப்பற்று வளர்ந்து, பெருக, உண்மையான மொழிப்பற்று ஒளித்து வந்தது. இதனிடையிற் பண்டையிலக்கியங்களும் பேணுவாரற்று அழிந்து வந்தன. ஏட்டுச் சுவடிகள் நீர் வாய்ப்பட்டும், தீவாய்ப்பட்டும், சிதல்வாய்ப்பட்டும் மறைந்த வண்ணமாய் இருந்தன. இந்நிலையைக் கண்டு பிள்ளையவர்களுடைய உள்ளங் கொதித்தது. கலித்தொகையின் பதிப்புரையிலே :

"ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது; கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது; ஒற்றை புரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி, எழுத்துக்களோ வென்றால், வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுதுகிடக்கின்றது......"

"பழைய சுவடிகள் யாவுங் கிலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதிவைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதின்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாட்டவறிஞல் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ் நூற்களை மீட்டல் அரிது. யானைவாய்ப்பட்ட விளம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்றே கிட்டுவது! காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும், நாரசமுந்தான் மீரும். அரைக்காசுக் கழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது. சங்க மரீஇய நூல்களுட் சில இப்போதுதானும் கிடைப்பது சமுசயம்..... எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றுவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியக் காண்கினும் மனந் தளம்புகின்றதே! தமிழ் மாது நுந்

தாயல்லவா? இவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா? தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமான மென்று இவையில்லாதார் பெருமையும் ஒரு பெருமையாமா? இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக" என்று எழுதி அபயமிட்டார்கள். இச்சொற்கள் இன்றும் நமது உள்ளத்தைக் கொதித்தெழச் செய்யும் பேராற்றல் வாய்ந்தன. இவ்வாறு உளங் கொதித்திருந்த பிள்ளையவர்களுக்கு அமைதியுண்டா? இவர்கள் காலம் வரையில் ஒருவரும் எட்டிப் பாராத இப்பணியில் உழைத்துவர முற்பட்டனர்.

ஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவசமய நூல்கள், குறள், பாரதம் முதலியன வெளியிடுவதோடு அமைந்துவிட்டார்கள். வித்வான் தாண்டவராய முதலியார் திவாகர முதலிய நூல்களையும், பள்ளி மாணவர்களுக்கு வேண்டிய வசன நூல்களையும் அச்சியற்றுவதில் ஒடுங்கிவிட்டார்கள். மழவை மஹாலிங்க ஐயர், தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியருரையோடு பதிப்பித்து, வேறு சில நூல்களையும் வெளியிட்டு, அத்துடன் நின்றுவிட்டார்கள். களத்தூர் வேதகிரி முதலியார் நாலடி, நைடதம் முதலிய நூல்களை வெளியிட்டு அவ்வளவில் திருப்தியுற்றார்கள். திருத்தணிகை விசாகப் பெருமாளையர் முதலியோர் குறளுக்குத் தெளிபொருள், பிரபுலிங்கலீலை, சூடாமணி நிகண்டு முதலியவற்றைப் பிரசுரித்து அவ்வளவில் தங்கள் முயற்சியைச் சுருக்கிக் கொண்டார்கள். திருவேங்கட முதலியார் இராசகோபாலப்பிள்ளை முதலானவர்கள் இராமாயணம் வெளியிடுவதிலும், நாலடி முதலிய பதிப்பித்தலிலும் ஈடுபட்டு நின்றனர். ஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கள் அப்பொழுதுதான் சீவகசிந்தாமணிப் பதிப்பு முயற்சியில் போராடிக் கொண்டிருந்தார்கள். ஆகவே நமது பிள்ளையவர்கள் தன்னந்தனியராய்ப் பண்டைத் தமிழ்ச் செல்வப் புதையலைத் தமிழ் மக்களுக்கு அகழ்ந்தெடுத்து உதவும் பெரு முயற்சியை மேற்கொண்டனர்.

இம் முயற்சியில் நேர்ந்த இடையூறுகள் மிகப் பல. முதலாவதாக, ஏட்டுப் பிரதிகள் கிடைப்பது அரிதாயிருந்தது. பரம்பரை வித்துவான்களது இல்லங்கள் தோறும் பிரதிகள் தேடுவது அவசியமாயிற்று. பிள்ளையவர்களின் உற்ற நண்பர்கள் அங்கங்கே உதவி புரிந்தனர். ஆனல் இந்

நண்பர்களுக்கு ஏட்டுப் பிரதிகளை நேரிற் பரிசோதித்தெடுப்பது பெரும்பாலும் இயலாத காரியமாயிருந்தமையால், ஏடு பெறும் முயற்சி முற்றும் நிறைவேற வழியின்றிப் போயிற்று. ஏடுகளுக்கு உரியவர்களும் அவற்றைக் கொடுத்துத் தமிழுலகிற்கு நன்மை புரிவதில் விருப்பமில்லாதிருந்தார்கள். ஆனால் பிள்ளையவர்கள் மனந் தளரவில்லை; மேலும் மேலும் ஊக்கம் கொண்டு தேடியவண்ணமா யிருந்தார்கள்.

இரண்டாவதாக, ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்துப்' பலபடியாக ஆராய்ந்து வழுவறப் பிரதிசெய்வது ஏடுபார்த்து வாசித்தல் வழக்காறற்றுப் புதியதொரு கலையாகத் தோன்றிவிட்ட காலம்! தற்போது அச்சிற் கிடைக்கும் பல இலக்கியங்களின் பெயர்கூட அறியப்படாமலிருந்த காலம்! ஏட்டுத் தொகையுள் அடங்கியுள்ள நூல்கள் இன்னவென்று அறியாத காலம்; சிலப்பதிகாரமா அல்லது சிறப்பதிகாரமா என மயங்கிக்கொண்டிருந்த காலம்! ஆகவே தக்க பாண்டித்தியம் இருந்தாலன்றி நூல்களைப் பதிப்பிடுதல் இயலாததாம். அவ்வகைப் பாண்டித்தியமுள்ள உதவியாளர்கள் பிள்ளையவர்களுக்குக் கிடைப்பது அருமையாயிருந்தது. அவர்களே ஏடுபார்த்துப் பிரதிசெய்து பொருள் ஆராயவேண்டியதாயிற்று. தமக்கு விளங்காத இடங்களைக் குறித்துக் கடிதவாயிலாகப் பல வித்துவான்களுக்கும் எழுதினுர்கள். ஆனால் இக் கடிதப் போக்குவரத்தினுல் விளங்கிய இடம் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். பிள்ளையவர்களுடைய அல்லற் பாடுகளை யுணர்ந்தார்தாமும் மிகச் சிலரேயாவர். "எனக்கு ஸ்ரீமத் சாமிநாதையரும் அவருக்கு நானுமே சாட்சி" என்று ஓரிடத்து எழுதியிருக்கிறுர்கள்.

மூன்றுவதாக, நூல்களைப் பதிப்பிடுதலின் செலவு. பெரியார்கள் சிலர் இவ் விஷயத்தில் உதவினுர்கள்; எனினும் பெரும்பாலும் தமது கைப் பொருளையே செலவிடும்படி நேர்ந்தது. இக் காலத்துப் போன்று தமிழ்மக்கள் நூல்கள் வாங்குதல் முற்காலத்தில் இல்லை. மிகச் சில பிரதிகளே வெளியிடப்படினும், அவை தாமும் பதிப்பாசிரியரிடமே தங்கிச் செல்லரிப்புண்டு அழிதல் வழக்கமாயிருந்தது. அன்றியும் தமிழ் நூல்களிற் பற்றுள்ள புஸ்தகப் பிரசுராலயங்களும் அக்காலத்தில் இல்லையென்றே சொல்லவேண்டும்.

நான்காவதாக, எத்துணையோ சிரமமெடுத்து நூல்களை வெளியிட்டபோதினும், அதற்குக் கைம்மாருகக் கிடைத்தது வசவுரைதாம். ஆங்கிலங்கற்ற தமிழ் விற்பன்னர்கள் உதாஸீனமாயிருந்தார்கள். தமிழ் கற்ற பண்டிதர்களிற் பலர் பொருமை மிக்குப் பகைகாட்டினூர்கள். ஒரு சிலர் தமிழ் நூல்களை வெளியிடுவதற்குத் தங்களுக்குத்தான் தனியுரிமையுண்டென்று கருதினூர்கள். அவ்வாருவது நூல்களைப் பதிப்பிட முன் வந்தார்களா? அதுவும் இல்லை. முன் வந்தார்களாயின், தமிழ் நூல்கள் அழியாது பாதுகாக்கப்பட்டிருக்குமே! இவர்கள் செய்ததெல்லாம் குறை கூறிக்கொண்டிருந்ததொன்றேயாம்!

பிழைகளை எழுதி யனுப்பினுல், எழுதினேர் பெயர்களோடு அவை வெளியிடப்படுமென்றும், ஐம்பது பிழைகள் காட்டுவோர்க்கு ஒரு புத்தகம் இனமாக அளிக்கப்படுமென்றும் பிள்ளையவர்கள் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தார்கள். யாரும் எழுதி யனுப்பினதாகத் தெரியவில்லை. 'பிறரைக் குறை கூறிக்கொண்டிருப்பதே பாண்டித்தியத்தின் லட்சண'மென்ற கொள்கை யுடையரால் தமிழில் இலக்கியச் செல்வம் எங்ஙானேனும் பெருகுவதாகுமா? அக்காலத்துப் பலராலும் விரும்பிக் கற்கப்பட்டுவந்த திராவிடப் பிரகாசிகை என்னும் நூலில் பிள்ளையவர்களைக் குறித்துள்ள பகுதி தமிழ்ப் பண்டிதர்கள் சிலரது மனப்போக்கை நன்கு தெரிவிக்கின்றன. ஆனுல் பிள்ளையவர்கள் இக் கண்டனவுரை, வசவுரை முதலிய இடையூறுகளை யெல்லாம், பொருட்படுத்தியவர்களே யல்லர். தமது அறிவொழுக்கங்களுக் கேற்பச் சிறந்த நற்குணமும் உடையவர்கள். அடக்கம் நிரம்பியவர்கள். எல்லாம் அறிந்த பெரும் புலவர் எனத் தம்மைக் கூறிக்கொள்ளவில்லை. தமக்குத் தெரியாத பொருள்களைப் பிறரிடம் கேட்டுணர்வதிற் சிறிதும் கூச்சமற்றவர்கள். அவ்வாறு கேட்பது தமக்குச் சிறுமையாமென்று கருதியவர்களுமல்லர். தமிழன்னைக்குப் புரியும் திருத் தொண்டினூற் பிற வித்துவான்களும் உழைத்து வரவேண்டுமென்ற கொள்கையையே உடையவர்கள். ஒரு சிலர் தம்மைத் தவிரத் தமிழ் நூல்களைப் பதிப்பிடும் பணியில் இறங்கிய பிறருக்கெல்லாம் நரக தண்டனை விதித்துச் சபித்து வந்துள்ளார்கள்! பிள்ளையவர்கள் இவ்வினத்தைச் சார்ந்தவர்க ளல்லர். உண்மையான அன்போடு

உண்மையான தமிழ்த் தொண்டு புரிதலே பிள்ளையவர்களது வாழ்க்கையின் பெரு நோக்கமா யிருந்தது.

இவ்வகையான உண்மைத் தொண்டு பயனற்றுப் போகுமா? பிள்ளையவர்கள் வெற்றி யெய்தியமை தமிழ் நாடு நன்கறிந்ததே. தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி யென்பன அவர்கள் தந்த தனிப்பெரும் செல்வங்களுட் சிறந்தன. தமிழன்னையின் அருங்கலமாகத் திகழும் இந் நூல்கள் உள்ளவரை பிள்ளையவர்கள் புகழும் நின்று நிலவுவதாகும்.

உரைநடை யெழுதுவதில் எத்துணை ஆற்றல் படைத்தவர்களென்பது மேலே தந்துள்ள எடுத்துக் காட்டுகளால் விளங்கும். அழகிய செய்யுட்கள் இயற்றவல்ல கவித்துவ சக்தி அவர்களிடத்திற் சிறந்து விளங்கிற்று. மாயூரம் வேதநாயகம்பிள்ளை யவர்கள்,

"நீடிய சீர்பெறு தாமோ தரமன்ன நீள்புவியில்
வாடிய சூழ்கள் மழைமுகங் கண்டென மாண்புறநீ
பாடிய செய்யுளைப் பார்த்தின்ப வாரி படிந்தனன்யான்
கோடி புலவர்கள் கூடினு நின்புகழ் கூறரிதே."

என்று பாடியிருக்கின்றார்கள். இது முகஸ்துதியன்று; உண்மையே யாகும்.

உரைநடையாளர், கவிஞர் என்ற இரண்டு நிலையிலும் பிள்ளையவர்கள் சிறந்த ஸ்தானத்தைப் பெறத்தக்கவர்கள். ஆனால் இவ்விரண்டு வகையிலும் அவரது ஆற்றல் மேன் மேலும் விளங்குவதைக் காணும் பேறு நமக்குக் கிடைக்க வில்லை. சிறந்த பதிப்பாசிரியர் என்ற நிலையிற்றான் இன்று பிள்ளையவர்களைப் போற்றுகிறோம்.

தமிழன்னையே! உனது திருவுதரத்திற் பிள்ளையவர்களைப் போன்ற உத்தமர்கள் பல்லாயிரவர் தோன்றுதல் வேண்டும்! அவர்களது விரிந்து, பரந்த நோக்கங்களும், அரிய குணங்களும் நம்மனோர்க்கு வழிகாட்டியாய் என்றென்றும் திகழ்தல் வேண்டும்! அவர்கள் தாய்மொழிமீது கொண்டிருந்த தூய அன்பும், உண்மைத் திருத்தொண்டும், நம்மனோரையும் ஊக்குவித்து நம்மை உண்மைத் தமிழ் மக்களாகத் திருத்துதல் வேண்டும்! அவர்களை லட்சிய புருஷராகக்கொண்டு நமது தாய்மொழிக்கு உற்ற பணியை நாம் புரிந்துவரல் வேண்டும்!

6. நாட்டுப் பாடல்கள்

உலகினில் மக்கள் வாழ்விஞக்கு இன்றியமையாத உண்மைப் பொருள்களைச் சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினியவாகிய அழகிய சொற்களால் இலக்கண அமைதி குன்ருது திறம்பட எடுத்துச் சொல்லுவோனே கவிஞன் எனப்படுவான். இத்தகைய கவிஞர் செய்த தனிச் செய்யுள்களும், பிரபந்தங்களும், தொகை நூல்களும், காவியங்களும் தமிழிலக்கியப் பரப்பிலே இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியாவண்ணம் விளங்குகின்றன. இவற்றைவிடக் கிராமப் புறங்களில் உள்ள கல்வியறிவு கைவரப் பெருத மக்கள், தினந்தோறும் உடல்வருந்த வேலைசெய்தலால் வரும் இளைப்பு முதலியன நீங்குதற் பொருட்டுத் தம் மனதுக்குகந்த பாட்டுக்களைப்பாடி யாடி மகிழ்வர். அவை சாதாரண மக்களின் உணர்ச்சி வேகத்தால் பாடப்பட்டனவன்றிப் புலமையிஞற் பாடப்பட்டனவல்ல வாதையால் அவற்றைப் பண்புசால் புலவர்கள் பண்பட்ட பாடல்களெனக் கொள்ளார். எனினும் மக்கள் உடல்வருத்தத்தைத் தீர்த்து மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க வல்லனவாகலின் அவை உயிருள்ள பாடல்கள் எனக் கொள்ளல் பொருந்தும். இத்தகைய உயிருள்ள பாடல்கள் நாட்டுப் பாடல்களென வழங்கப்படும். அவை ஓசை நயமும் தாளவமைதியும் மிகுதியும் பொருந்தியவையாய்க் கேட்போர் செவிக்கின்பம் பயப்பதாய் விளங்கும்.

நாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் எழுத்து வழக்கில் இல்லை. வயலில் உழவு தொழில் செய்வோரும் நாற்று நடுவோரும், அரிவி வெட்டுவோரும், சூடு அடுக்குவோரும் சூடு மிதிப்போரும், கிணற்றிலிருந்து சலம் இறைப்போரும், நெல் முதலிய தானியங்களைக் குத்துவோரும், வண்டி ஓடம் முதலியன செலுத்துவோரும் தங்கள் உடல் வருத்தத்தை மனச்சந்தோஷத்தாற் போக்கவெண்ணிப் பாடும் பாட்டுக்களே நாட்டுப் பாடல்கள் எனப்படும். இவற்றை வழிமுறை வழிமுறையாக அத்தொழிலைச் செய்கின்றவர்கள் பாடிக்

கொண்டு வந்தனர். புத்தகங்களில் எழுதப்படாமலே அப் பாடல்கள் நாட்டுமக்களிடையே வழங்கி வருகின்றன. ஆயி னும் காலகதியில் நாட்டுப் பாடல்களின் தொகை மிகவும் குறைந்து கொண்டே போகும். இதற்காகப் பல அறிஞர்கள் நாட்டுப் பாடல்களைச் சேகரித்து வருகின்றனர்.

ஒரு நாட்டு மக்களின் இயல்பான பண்பாட்டை அந் நாட்டு மக்கள் பாடிவரும் எழுதாப் பாடல்களாகிய நாட்டுப் பாடல்களால் அறியலாம். அன்றி ஏனைய சிறந்த இலக் கியங்களால் அவ்வளவு திட்டமாக அறிய முடியாது. பண் படுத்தப்பட்ட கல்வி யறிவு நிரம்பிய நுண்புலவர்களால் யாக்கப்பட்டு அலங்காரம், சொல்நயம், பொருள்நயம் என்ப வற்றோடும் கூடி விளங்கும் செய்யுட்களைக்காட்டிலும் நாட் டுப் பாடல்களின் இயற்கை அமைதி சிறந்து விளங்கும்.

நாட்டுப்பாடல்களின் தோற்றம் ஏனைய சிறந்த இலக் கியங்களின் தோற்றத்தைப் போன்றதல்ல. கிராமத்து மக்கள் மனத்திலே, அன்பும், அமைதியும், ஆனந்தமும் உடையராய்க், கட்டுப்படுத்தப்பட்ட புலன் நுகர்ச்சியோடும் கவலையின்றி வாழ்வர். அவர்கள் தம்மனத்தில் உண்டான உணர்ச்சியைத் தமக்குத் தோன்றிய ஒரு சந்தத்தில் வைத்து வெளியிடுவர். மூளைக்கும் மனத்துக்கும் எவ்வித சிரமமுமில்லாமல் அப் பாடல்கள் வெளிவருவதால் உணர்ச்சி யுடையனவாய் விளங்கு கின்றன. அன்றியும் இக்காலத்திற் கண் குழிபாய்ந்துபோகும் வண்ணம் இரவும் பகலும் படித்துப் பட்டங்களைப்பெற்ற பட்டதாரிகளும் காணமுடியாத உண்மைகளை நாட்டுப்பாடல் மூலமாய் நாம் அறியக்கூடியதாகின்றது. சிறு குழந்தைகள் கீச்சு மாச்சுத் தம்பளம் என்னும் விளையாட்டை விளையாடும் போது,

"கீச்சுக் கீச்சுத் தம்பளம் கீயோ மாயோத் தம்பளம்
மாய்ச்சு மாய்ச்சுத் தம்பளம் மாயோ மாயோத் தம்பளம்."

என்று பாடுகின்றனர்.

இப்பாடல்கள் பெரிய சமயதத்துவத்தை அடக்கியுள்ள தாக விருக்கின்றது. மாசிலா உள்ளம்படைத்த குழந்தைகள் மணலில் இருந்து குதூகலமாய் விளையாடியதைக் கண்ட

யாரோ ஒரு பெரியார் "உலகம் மயக்கமானது; குழந்தைக ளாய்க் கீச்சுக் கீச்சென்று விளையாடிக் கீயோ மாயோ வென ஆசைக்குள் நுழைந்து, ஆசையை நிறைவேற்ற வெண்ணி உலகத்திலே கிடந்து மாய்ந்து மாய்ந்து மடிவது தான் உண்மை" என்பதை விளையாட்டாய்ப் பாடிவிட்டார். அப்பாட்டுக் குழந்தை உலகத்திலே நிலைபெற்று நிற்கின்றது.

இத்தகைய பாடல்களைக் காணும்போது நாட்டுப்பாடலை நாம் பெரிதும் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்கு உண்டாகும். இதுபோலவே செல்வமும் வறுமையும் ஒருவழி நில்லாது; மாறிமாறி வரும் என்னும் அரிய உண்மையைக்,

"கெட்டார் தழையாரோ? கேடொருகால் நீங்காதோ?
வெட்டின கட்டையிலே வேர்தான் முளையாதோ?"

என்னும் அடிகள் விளக்குகின்றன.

தமிழ் நாட்டா ரெல்லாரும் ஒருமுகமாகச் சிறப்பித்துக் கூறும் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும், "ஏற்றப் பாட் டுக்கு எதிர்ப் பாட்டு முண்டோ?" என்று கூறின ரெனில் நாட்டுப் பாட்டின் பெருமையை நாம் அளவிட முடியுமோ? கம்பர் ஒருநாள் ஒருவழியாகச் செல்லும்போது தண்ணீர் இறைத்துக்கொண்டு நின்றவர்கள்,

"மூங்கி லிலைமேலே தூங்கு பனிநீரே
தூங்கு பனிநீரை"

என்று பாட நீர்ப் பாய்ச்சுவோன் இறைத்தது போதும் என்றனன். இறைத்தவர்களும் பாட்டை அவ்வளவில் விட்டு விட்டார்கள். கம்பரும் அப்பாட்டைக் கேட்க முடியவில் லையே என்றதற்காக அன்று முழுவதும் மனம் வருந்தி அடுத்தநாள் மகளாகிய அம்பிகாவதியிடம் இதைச் சொன்ன போது, அம்பிகாவதி,

"தூங்கு பனிநீரை வாங்கு கதிரோனே"

என்று கூறக் கம்பர் மிகவும் மனமகிழ்ந்து 'ஏற்றப் பாட் டுக்கு எதிர்ப் பாட்டு முண்டோ' என்றனர்.

நாட்டுப் பாடல்கள் பொருளாதார அரசியல் விஷயங்களையும் எடுத்துக் கூறுவனவாயும் இருக்கும். பிரான்சியர் இந்தியாவுக்கு வந்த காலத்தில் அவர்களுடைய செய்கைகளைக் குறித்துக் கிராம மக்கள் பல நாட்டுப் பாடல்களைப் பாடினர்.

"ஊரா னூரான் தோட்டத்திலே குட்டி
ஒருவன் போட்டது வெள்ளரிக்காய்,
காசுக்கு இரண்டுதான் விற்கச் சொல்லிக்
காகிதம் போட்டானும் வெள்ளைக்காரன்
வெள்ளைக் காரன்பணம் வெள்ளைப் பணம்குட்டி
வேடிக்கை பார்க்கிருய் வெள்ளைப்பணம்
வெள்ளைப் பணத்திற்கு ஆசைப்பட்டு—இந்த
வேஷங் குலைந்தாளே வீராயி."

என்னும் பாட்டைப் பாடி மக்கள் எவ்வளவு சந்தோஷப் பட்டனர். இப்பாட்டு அரசியல் பொருளாதார நிலையை நாட்டு மக்களுக்கு விளக்குவனவா யிருக்கின்றது.

வயலிலே வேலை செய்யும் மக்களை உற்சாகப்படுத்துவதற்காகப் பல பாட்டுகள் பாடப்படும். வேலை செய்து இளைத்திருக்கும் மக்கள் இளைப்பு மாறுவதற்காகப் பாட்டுக்களைப் பாடத் தொடங்குவர். பாடத் தொடங்கியவுடன் அவர்களில் ஒருவன் ஆண்டானாக மாறிவிடுவன்; இன்னொருவன் பள்ளியாக மாறிவிடுவன். பள்ளன் ஏன் வரவில்லையென்பது ஆண்டானுடைய கேள்வி. அவன்,

"பள்ளிச்சி பள்ளன் எங்கெடி போட்டான்"

என்று கேட்க மற்றவன்,

"பள்ளம் பார்த்துப் பயிர்செய்யப் போட்டான்"

என்று கூறுவான். இவ்விடத்தில் வயல் ஒரு நாடகமேடையாக மாறிவிடுகின்றது. மேலும் ஆண்டானாக நடிப்பவன்,

"கள்ளனோ இவன் பள்ளனோ தானோ
காரியக் காரனா யிருப்பானோ"

என்று கோபிப்பான். அதற்குப் பள்ளியாக நடிப்பவன், பள்ளனுடைய குறைகளை எல்லாம் எடுத்துக் காட்டி,

" முள்ளிப்பூப் போல முப்பட்டுச் சால்வையும்
மூலே சாய்ந்த கடகமுங் கொண்டு
தள்ளித் தள்ளியே சாய்ந்த நடைகளும்
சாடை யும்பல கேலியும் பேசி

கொட்டப்போ னன்குழ லூதப் போனன்
கோழிக் கூட்டுக்கு மண்வெட்டப் போனன்
வட்டுக்காய் போலக் குட்டை வயிறனை
வாவெடா வென்று கூப்பிடப் போனன்

காலத் தாலே பாலுங் கறந்து
கமுகம் பூப்போ லரிசியும் திட்டி
காலத் தாலே காய்ச்சின பாற்கஞ்சி
காலாலே தட்டிப் போனன்கா ணண்டே.."

என்று கூறுவான். இவ்வாறு மனமகிழ்ச்சி தருவன நாட்டுப் பாடல்கள். இத்தகைய பாடல்கள் எல்லா மொழிகளிலும் உண்டு. இவை முயற்சி செய்வோருக்கு ஊக்கம் கொடுப்பன வாகும். முயற்சிகாரணமாகவே நாடு செழிப்புறும்.

7. மனையறம் நடாத்தும் மாண்பு

அகமெனவும் புறமெனவும் பகுக்கப்பட்ட வாழ்க்கையை நடத்திய தமிழ் மக்களின் சிறந்த நாகரீகத்தை விளக்கிக் காட்டுவன பழந் தமிழ் நூல்கள். அன்பிற் சிறந்த ஆண், பெண் இருவர் கூடி இல்லறம் நடத்தும் இயல்பை அகமெனவும், அவ்வறம் நடைபெறுதற்கான கல்வி, பொருள் முதலியவற்றைப் புறமெனவும் கொள்ளலாம். தமிழ்நூல்களிற் கூறப்பட்ட தமிழரது அகவாழ்வு சிறந்த தூய்மையுடையதாகவும் அன்போடு கலந்த வழக்குடையதாகவும் காணப்படுகின்றது. ஒரு பெண் தன்னைக் கொண்டானைத் தன் உயிரினும் மேன்மையாகக் கருதி அவன் இன்பமனுபவிப்பதைக் கண்டு தானும் மகிழ்பவளாக இருந்திருக்கிறாள். ஒரு ஆண்மகனும் தன் காதலி கையால் தொட்ட ஒன்றைத் தான் நுகரும் இன்பப்பொருள் எல்லாவற்றினும் சிறப்புடையதாகக் கருதிப் பாராட்டியிருக்கிறான்.

"ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோ ரமுதம் புரையுமால் எமக்கு......"

என்பது தமிழ் வளம் ததும்பும் தொல்காப்பியனார் திருவாக்கு ஆகும்.

தமிழ் நூல்களிலே காணப்படும் இத்தகைய அகவாழ்வு விளங்கும் பாட்டுக்கள், தமிழ்ப் பெண்கள் இன்றியமையாது படித்து மகிழ்ந்து அனுபவிக்கத் தக்கன. அவற்றுள் ஒன்றை இங்கே காண்போம்.

கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த ஒரு நற்குடியில், பலநாள் முயன்ற தவத்தின் பயனாகப் பிறந்தது ஒரு பெண் குழந்தை. தாய், தந்தையர் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்தனர். செல்வம் மிகுந்த தமிழக மானதால் குழந்தைக்கு விளையாடும் தோழிகள், வளர்க்கும் செவிலித்தாய், கற்பிக்கும் ஆசிரியர் முதலிய எல்லா ஏற்பாடுகளும் குறைவின்றி இருந்தன. 'குலவித்தை கல்லாமற் பாகம் படும்' என்றபடி, குழந்தை

அறிவிலும் திருவிலும் சிறந்து விளங்கிற்று. அவள் தங்கப் பதுமைதான்! வீட்டில் எங்கும் இன்பவெள்ளம் தேங்கிற்று. நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் பலவாகக் கடந்தன. நங்கையும் அறிவு நிரம்பி மங்கைப்பருவ மடைந்தபோது, நலம் பலவும் வாய்ந்த நம்பி ஒருவனுக்கு அவளை மணஞ்செய்து கொடுத்தார்கள்.

மணம் நடந்து சில நாட்கள் சென்றன. மகளை அவள் விருப்பப்படி மணமகன் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அவளுக்குப் பிறந்த அகத்தைவிடப் புகுந்த வீடே சிறந்ததாகத் தோற்றியது. உயிரினும் மேலாகக் கணவனை மதிக்கலானாள். கணவன் இருக்குமிடம் கற்புடைய பெண்ணுக்குச் சுவர்க்க மன்றோ? அவனும் அவ்வாறே தன்னுள்ளமாம் வீடத்தனையும் தன் அருமைக் காதலிக்கே தனி உரிமையாக் கிப் பாராட்டிவந்தான். பெண் வீட்டார் மகளின் பிரிவுக்கு வருந்தினர். சந்தனமும், முத்தும் தாம் பிறந்த இடத்திற்கு ஏதும் பயன் விளைக்குமோ? அவற்றை விரும்பி அணிபவர்க் கன்றோ அவை அணியாகும்? ஆகவே "சுரும்பிவர் சந்தும் தொடுகடல், முத்தும் வெண்சங்கும் எங்கும் விரும்பினர் பாற் சென்று மெய்க்கணியாம்" என்ற மணிவாசகர் திருமொழியைக் கருத்திற்கொண்டு ஆறுதலடைந்தனர் பெற்றோர். மக்கள்தம் இல்லறத் தேர் இன்பவெளியிலே இனிது செல்லலாயிற்று. செல்வன் அறத்தாற் பொருளீட்டி வருகின்றான். செல்வியும் செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து வாழ்க்கை நடத்தி வருகின்றாள்.

முன்னோர் தேடிய பொருள் இமாலயமாயினும் தான் முயன்று தேடிய பொருளை நுகர்தற்கு இன்பம் பயக்கும் என்பதும் அதைப் பழியஞ்சிப் பகுத்து உண்ணல் வேண்டுமென்பதும் தமிழரது தனிக்கருத்தும் மனையறமுமாகும். நிற்க,

ஒருநாள் பிறந்த வீட்டிலிருந்து செவிலித் தாயானவள் மகளைப் பார்க்கப் புறப்பட்டு வருகின்றாள். தான் வளர்த்த மகள் இல்லறம் நடத்தும் அருமையைக் கண்ணாரக் காண்கின்றாள். சில நாள் இருந்து ஊர் திரும்புகின்றாள். அங்கே பெற்ற தாய், மகளின் நலங்களைச் செவிலியிடம் கேட்க அவள் கூறுகின்றாள் :—

"அம்மா! ஒருநாள் சமையலறையில் வெகு தடபுடலாக வேலை நடந்துகொண்டிருந்தது. நானும் என்னதான் நடக்கிறதென்று கவனித்தேன். அந்த அழகான காந்தள் மலரின் இதழ்களைப் போன்ற விரல்களால் தயிர் பிசைந்தாள். அதே சமயம் புளிப்பாகுக்கு வேண்டிய தாளிப்பு அடுப்பில் இருந்தது. மிக விரைவில் சூடேறிவிட்டதால் தாளிப்பு வெடிக்கத் தொடங்கிவிட்டது. அடுத்தாற்போல் செய்ய வேண்டுவது புளிப்பாகினைத் தாளிப்பில் சேர்க்கவேண்டுவது தான். இவ்வேளையில் மகள் உடுத்தியிருந்த ஆடை சிறிது நெகிழ்ந்துவிட்டது. ஆடையோ வெளுக்கப்பட்டுத் தூய்மையுடையதாயிருக்கிறது. கையோ தயிர் பிசைந்த கை. கையைக் கழுவிக்கொண்டு ஆடையை உடுத்திக்கொள்ளலா மென்றாலோ தாளிப்புப் பதம் கெட்டுவிடும். பதம் கெட்ட உணவு கணவன் உண்பதற்கு எவ்வாறு இனிமை தரும்? அன்பனின் இன்பத்துக்கு முன் ஆடை ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. கையைக் கழுவாமலே நெகிழ்ந்த ஆடையைத் திருத்தி உடுத்துக்கொண்டாள். தாளிப்பின் புகையானது தன் கண்ணைத் தாக்குவதையும் பொருட்படுத்தாது வேலையை முடித்தாள். அந்த நீலோற்பலம் போன்ற—மையிட்டப்பெற்ற—கண்கள் தாளிப்புப் புகையை யேற்றுச் சிவந்தன. இவ்வளவும் விரைவில் நடந்தேறின.

"தொழில் காரணமாக வெளியே சென்ற பெருந்தகையும் வீடு வந்து சேர்ந்தான். ஆரணங்கு அவனை அன்புடன் வரவேற்று அமுதளித்தாள். தன் இன்பக்காதலி அன்புடன் படைத்த இனிய புளிப்பாகை 'இனிது இனிது' என இன்பச் செருக்குடன் கூறிக்கொண்டே அருந்தினுன் அக் காதலன்.

"பெருமாட்டி! அப்போது உன் மகள் அடைந்த பெருமிதத்தை என்னவென்று இயம்புவேன்! அவள் கொண்ட இன்பத்தை அவள் முகம் மிக நுட்பமாகத் தெரிவித்தது. தன் தெய்வப் பணிக்குக் கூலியாக அவள் எதிர்பார்த்தது 'இனிது' என்ற அவ்வொரு சொல்லே போலும்! தன் முயற்சியின் பயனாக அந்த 'இனிது' என்ற சொல்லைக் கேட்டவுடன் அவளுக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை."

இங்ஙனம் மகள் செய்தியை நற்றாய்க்கு உரைக்கும் செவிலியின் கூற்றை ஒரு தமிழ்ப் புலவர் ஒரு பாட்டால் தெரிவிக்கிறார். அப்பாட்டினையும் காண்போம் :

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே."

இப்பாட்டினால் அறியக்கிடக்கும் சில உண்மையையும் நோக்குவோம். 'முளிதயிர்' என்றதனால் முதிர்ந்த தயிரே உண்டற்கு இனிமை பயக்கும் என்பதும், 'காந்தள் மெல்விரல்', 'குவளை யுண்கண்' என்றவற்றால் அப் பெண்ணின் அழகும் 'கழுவுறு கலிங்கம்' தூய வாழ்க்கையையுடையவள் என்பதும் 'கழாஅதுஉடீஇ' என்றதனால் உண்பதற்குரிய பதம் கெடாதிருத்தற் பொருட்டு அவசரத்தில் தன் கையைக் கழுவாமலே உடுத்துக்கொண்டா ளென்பதும் 'கண்குய்ப் புகைகமழ' என்றதனால் தன் கண்ணில் தாளிப்புப் புகைபடுவதையும் கணவனிடத்து வைத்த அன்பினால் அவள் பொருட்படுத்திலள் என்பதும் 'தான்துழந்து அட்ட' என்றதனால் தன்னுயிரினும் இனிய காதலன் உண்ணக்கூடிய உணவைத் தன் கையாலேயே சமைக்கவேண்டு மென்னும் பெருவிருப்பம் உடையவள் அக்காதலி என்பதும் முதலான அரிய செய்திகள் விளங்குகின்றன. இன்னும் 'முகம் நுண்ணிதின் மகிழ்ந்தன்று' என்றதனால் பெருகச் சிரித்தல் தற்புகழ்ச்சியாகுமெனக் கருதிப் புன்னகை புரிந்தாள் என்பதும் அறியக்கிடக்கின்றது. என்னே அவள் அறிவு! இத்தகைய வாழ்க்கையை—மனையறத்தை—நம் செந்தமிழ் நாட்டு மகளிர்—நம் சகோதரிகள் தம் வாழ்க்கையிற் கொண்டு விளங்குவார்களாக.

8. தமிழ் இசை

தமிழ்மொழி மிகப் பழைமையது. கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே தமிழ்மொழி வளம் பெற்றிருந்தது. இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டமையால் தமிழ்மொழி 'முத்தமிழ்' எனச் சொல்லப்படுகின்றது. உள்ளக் கருத்தின் மலர்ச்சியை இயற்றமிழிலும், மொழியின் இனிமையை இசைத் தமிழிலும் (பாடல்), உடலினுக் குரித்தாய செயலின் இனிமையை நாடகத் தமிழிலும் (ஆடல்) பழந் தமிழர் விளங்க வைத்தனர். உள்ளக் கருத்தினை வெளிப்படுத்தும் சாதனமே மொழி என்ப. மெய்யின் வாயிலாக மொழியின் பொருள் வெளிக் கொணர்வது செயல். எனவே மனம், மொழி, மெய் என்ற மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையன. பண்டைத் தமிழர் இயலுக்கும் நாடகத்துக்கும் பயன்படத் தக்கதாய இசையை நடுவணதாய்வைத்து இசைத்தமிழின் பெருமையைப் பாராட்டினர். சங்க இலக்கியங்களிற் பரிபாடல் என்பதும் ஒரு நூல். அந் நூல் முழுவதும் இசைப் பாட்டினாலேயே ஆயது. இவ்வாறு பழந்தமிழ் மக்கள் இயற்கை யின்பத்தைப் பாடுதலோடு நில்லாது இறையின்பத்தையும் நுகர்ந்தனர்.

"பாடல் லோர்த்தும் நாடக நயந்தும்"

எனப் பட்டினப்பாலையிற் காணப்படுந் தொடர், பழந்தமிழ் மக்கள் எவ்வாறு ஆடல் பாடல்களில் இன்பந் துய்த்தனர் என்பதை உணர்த்துகின்றது.

இனி, தமிழிசை வளர்ச்சியின் சரிதையைக் கால வரையறை செய்வது அவசியமாகின்றது. தமிழை வளர்த்த சங்கங்கள் மூன்று. இவற்றுள் முதற் சங்கம் கி. மு. ஏழாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நிலவியது என்ப. முதற்சங்க காலத்திலேயே தமிழ்இசை வளர்க்கப்பட்டது. பெருநாரை, பெருங்குருகு என்ற இசை நூல்கள் அக் காலத்திலே தோன்றியதி லிருந்தும் அகத்தியர் முத்தமிழுக்கும் இலக்கணம் செய்தார் என்பதாலும் அறியலாம். இடைச்சங்க காலம் கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தியது. சிகண்டியார்

என்பவரின் இசைநுணுக்கம் என்ற இசைத்தமிழ் நூலும் அக் காலத்திலேயே இயற்றப்பெற்றது. தொல்காப்பியம் என்ற இலக்கண நூலும் இடைச்சங்க காலத்தில் ஆசிரியர் தொல்காப்பியரால் இயற்றப்பெற்றது. இந் நூலில் ஆசிரியர் 'நரம்பின் மறை' என இசைநூல் குறிக்கப்பெற்றிருக்கின்றது.

கடைச்சங்கம் கி. பி. 2-ம் நூற்றாண்டுவரை நின்று நிலவியதென்ப. அக்காலத்தெழுந்த பரிபாடற் செய்யுட்கள் இசைச் செய்யுட்களாக இருப்பதுடன் அவற்றிற்கு அறிஞர் பலர் பண்ணமைத்து முதவினர். இவையெல்லாம் பழந் தமிழர் இசைத்தமிழில் எத்துணை ஆர்வங் கூர்ந்திருந்தார் என்பதை நன்கு புலப்படுத்துகின்றன. கடைச்சங்க காலத் திறுதியை யடுத்தெழுந்த சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது. இதில் முத்தமிழுங் கலந்திருக்கின்றது. சிலப்பதிகாரத்துக்கு உரையெழுதிய அடியார்க்குநல்லார் இதனைப் 'பழுதற்ற முத்தமிழின் பாடல்' என விதந்தேற்றியுள்ளார். முத்தமிழ் இயல்புகளை அடியார்க்குநல்லார் செவ்வனே அறிந்திருந்தார் என்பது அவ்வியல்புகள் அனைத்தையும் விபரிக்கும் சிலப்பதிகாரத்துக்கு அவர் விரிவாக எழுதியுள்ள உரையினுல் விளங்கும்.

முச் சங்கங்களும் முடிந்துபோன பிற்றை நாட்களில், நமது தெய்வத் தமிழ்நாட்டில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி, தொன்மை வாய்ந்த தமிழ் இசைக்கு ஆக்கமளித்து வளம்பெற வளர்த்தனர். இராவணன் இசைத்த இன்னிசைக்கு மனமிளகி நல்வரமீந்த நாதன்பால் பொற்றாளம் பெற்று, "நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பினுர்" ஞானபோனகராகிய திருஞானசம்பந்தப்பெருமான். "தமிழோடிசைபாடல் மறந்தறியேன்" என்று இறைவனை ஏத்துகிறுர் ஆளுடைய அரசர். மறைகளுந் தேருக் கறைமிடற்றிறைவன் ஏழிசையாயும் அவ்விசைப்பயனுயும் மிளிர்கின்றுர் என்பர் சுந்தரர் செம்மல். அன்றியும் திருப்பாணுழ்வாரும் இசைக்கருவிகள்கொண்டு இசைவளர்த்தமையை இசையுலகம் நன்கு அறியும்.

பண்டைத் தமிழிசைவாணர் ஆரம்பத்திற் பேரியாழ், செங்கோட்டியாழ் என இரு இசைக்கருவிகளை யுபயோகித்

தனர். ஆயிரம் நரம்பினையுடைய ஆதியாழே பேரியாழாக விளங்கியது. யாழும் குழலும் சங்க இலக்கியங்களிற் பல இடங்களிற் பேசப்படுகின்றன. இயற்கையிலுள்ள ஓசை நுட்பத்தை யுணர்ந்த பழந்தமிழர் தாமே இவ்விரு இசைக் கருவிகளையும் அமைத்தனர். அசைந்தாடும் மூங்கில் மரங்களில் வண்டுகள் துளைக்கும் ஓட்டைகளினூடாக முதிர்வேனிற் காற்றுச் செல்லும்போது பிறக்கும் இன்னிசையை அனுபவித்த மக்கள் மூங்கிலினை யறுத்து நெருப்புக் கோலினால் அதற்குத் துளைகளிட்டு வேய்ங்குழலாக்கி அதிற் பண்ணமைத்து இசைத்தனர். இவ் வேய்ங்குழலே அக்காலத்து இசைக்கருவிகளுட் சிறந்ததெனக் கருதப்பட்டது.

> "குழல்வழி நின்றது யாழே" என்றும்
>
> "குழலினிது யாழினிது என்ப" எனவும்
>
> "மாம்பழ வாயினிலே—குழலிசை
> வண்மை புகழ்ந்திடுவோம்"

எனவும் தமிழ்ப்புலவர்கள் குழலுக்கே முதலிடங் கொடுத்திருப்பதிலிருந்து அதன் சிறப்பு விளங்கும். பழந் தமிழர் குமிழங் கொம்பினை வில்வடிவமாக்கி அதன்கண் மரற்புல் நாரினை நரம்புகளாகப் பூட்டி யாழாக அமைத்தனர். யாழின் வருணனைகளைச் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், சிலப்பதிகாரம், கல்லாடம் போன்ற நூல்களிற் காணலாம். இவற்றையெல்லாம் துருவி ஆராய்ந்து தமது நுண்ணறிவின் முடிபுகளை அடிப்படையாகக்கொண்டு மங்கிமறைந்த பல யாழ்வகைகளின் உருவங்களையும் அவற்றின் தந்திகளின் நீளங்களையும் ஒவ்வொரு யாழுக்குமுரிய தந்திகளின் எண்ணிக்கைகளையும் எங்கள் காலத்தில் முத்தமிழ் வித்தகனார் ஈழத்து சுவாமி விபுலாநந்தர் அவர்கள் தமிழுலகிற்கு உதவியிருக்கின்றார் யாழ்நூல் என்ற அவருடைய தமிழிசை ஆராய்ச்சிநூல் விலைமதிக்கவொண்ணா மாணிக்கமெனக் கருதப்படுகின்றது.

இயற்கை இசை ஒலிகளுடன் மக்களின் இசைவகைகளையும் பழந்தமிழர் ஒப்பிட்டுப் பார்த்தனர். இதனைப் பின்வரும் அடிகளைக்கொண்டு உணரலாம்.

"ஒருதிறம், பாணர் யாழின் தீங்குரல் எழ
ஒருதிறம், யாணர் வண்டின் இமிரிசை எழ
ஒருதிறம், கண்ணார் குழலின் கரை எழ
ஒருதிறம், பண்ணார் தும்பி பரந்திசை யூத
ஒருதிறம், மண்ணார் முழவின் இசை யெழ
ஒருதிறம், அண்ணல் நெடுவரை அருவிநீர் ததும்ப
ஒருதிறம், பாடல்நல் விறலியர் ஒல்குபு நுடங்க
ஒருதிறம், வாடை யுளர்வயிற் பூங்கொடி நுடங்க
ஒருதிறம், பாடினி முரலும் பாலையங் குரலின்
நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற
ஒருதிறம், ஆடுசீர் மஞ்ஞை யரிகுரல் தோன்ற
மாறுமா றுற்றனபோல் மாறெதிர் கோடல்
மாறட்டான் குன்ற முடைத்து."

—பரிபாடல்

இயற்றமிழ்ப் பாக்களை இசையாகப் பாடுமிடத்து ஆளத்திமுறை அனுஷ்டிக்கப்படும். இசையானது பாவோடு இணையாதபோது ஆளத்தி (ஆலாபனம்) செய்யப்படுகின்றது. பண்ணோடு பாடுவதற்குத் தாளவொழுங்கு வேண்டும். தாளவொழுங்குக்கேற்ப எழுத்தொழுங்கு, சீரொழுங்கு, அடியொழுங்கு, பொருளொழுங்கு இயைய அமையும் தமிழே இசைத்தமிழ் என்க.

பழந்தமிழர், இசை விரிவினை நன்றாக ஆராய்ந்து கணக்கிட்டிருக்கின்றனர். உந்திக்குக் கீழ்த் தொடங்கிய எழுத்தின் ஒலியே ஆளத்தியாகின்றது. இஃதே பின் இசையெனவும் பண்ணெனவும் பெயர்பெறும். நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை என்ற எட்டு இடத்திலும் அவற்றிற் குரித்தான எடுத்தல், படுத்தல், நலிதல், நிறுத்தல், வாய்மூடுதல், ஒலிமாற்றல், உருட்டு, தாக்கு என எண்திறத் தொழில் நிகழ்வதால் அதற்குப் பண் என்று வழங்கலாயிற்று. இசை, பண்ணுருவங் கொள்ளும்போது பண்கள் என்றும் திறங்கள் எனவும் பிரியும். ஏழிசையும் அமைந்த பண்களை நிறைநரம்பெனக் கூறுவர். அதற்குக் குறைந்த நரம்பினைத் திறம் என்பர். ஒளியின்கண் ஏழுவித வர்ணங்கள் இயங்குதல்போன்று, ஒலிகளும் ஏழுவகையாக இயங்குகின்றன. இவ்வேழு ஒலிப்பிரிவுகள்தான் ஏழு நரம்புகள் என்று அறிக. இவையேழும் குரல், துத்தம், கைக்கிளை,

உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயர்பெறும். முதலிற் தோன்றிய ஒலி தாரமென்பதாகும். தாரத்திலிருந்து உழையும், உழையிலிருந்து இளியும், இளியிலிருந்து துத்தமும், துத்தத்திலிருந்து விளரியும், விளரியிலிருந்து கைக்கிளையும் தோன்றின. தமிழ்ப் பாணன் ஒரு சுரத்தை ஏனைய சுரங்களுடன் அணைத்து வாசித்தான். ஒரு சுரத்தையும் அதன் பஞ்சமத்தையும் அணைத்து இசைத்தபோது இனிய நாதம் பிறந்ததைக் கவனித்தான். இதனை அஸ்திவாரமாகக்கொண்டு இசைப் புலவனும், இசைக்கருவி செய்பவனும் சங்கீத சாஸ்திரத்தை யுருப்படுத்தினர்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு நெட்டெழுத்துக்களையும் ஏழு வகை ஒலிகளையுங் குறிப்பிடுவதற்குப் பழந்தமிழர் பயன்படுத்தினர். இன்று அவை 'ச ரி க ம ப த நி ச' என வழங்கப்படுகின்றன. பழந் தமிழிசைக் கணிதத்திற்கியைய 'மா' என்பதே சுரமாகும். இச் சுரங்களைச் சில பறவைகளுடனும் மிருகங்களுடனும் ஒப்பிட்டிருக்கின்றனர். பழந்தமிழரின் குரல் – 'மா,' துத்தம் – 'பா,' கைக்கிளை – 'தா,' உழை – 'நி,' இளி – 'சா,' விளரி – 'ரி,' தாரம் - 'கா.'

ஐவகை நிலமும் ஐந்திணை யெனப்படும். தமிழர் ஐந்திணைக்கும் ஐவகை யாழும் ஐவகைப்பண்ணும் வகுத்துவைத்தனர். ஏழிசையும் நிரம்பிய பண்கள் ஏழும், பெரும்பாலை எனவும், கிளை, நட்பு என்ற நரம்புகளின் இசைபாக எழுந்த திறங்கள் ஐந்தையும் சிறுபாலை எனவும் கூறுவர். இப் பன்னிருபாலைகளையும் இராசிகளாக வகுத்துக் கூறும்முறை தமிழ்மக்களுக்கே உரித்தானது. சோதிட சாஸ்திரத்தையும் இசைக்கணிதத்தையும் சம்பந்தப்படுத்தியிருப்பதே ஒரு தனி விசேஷம்.

"இளி யிடபங் கற்கடமாம் விளரிசிங்கம்
தளராத தார மதுவாங்—தளராக்
குரல்கோற் றனுசு துத்தங் கும்பங் கிளையாம்
வரலால் உழை மீனம்."

என்ற வெண்பா ஈண்டு குறிப்பிடத்தக்கது. இசை ஏழெனக் கூறப்பட்டது. இவ்வேழிசையில் ஒவ்வொன்றையும் ஆரம்பித்து அவ்விசையிலேயே முடிப்பப் பிறப்பது ஒவ்வோர் பாலை என்ப.

பண்டைத்தமிழரின் இசைக்கருவிகள் பல. எனினும் இக் கருவிகளை ஒன்றின்வழி இசைத்து அதனின்றும் பிறக்கும் இசைநயத்தை அவர்கள் நன்கு அனுபவித்தனர். இவ்வியைபு 'இசைநயம்' சிலப்பதிகாரத்தில் வெகு அழகாகக் கூறப்பட்டிருக்கின்றது.

"குழல்வழி நின்றது யாழே ; யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே ; தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே ; முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை."

இசைக்கருவிகள் மூபெரும்பிரிவாக வகுக்கப்படும். தோற் கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள் என்ற தொகுப்புக்களுக்கு உதாரணங்களாக முறையே மத்தளம், வேய்ங் குழல், யாழ் என்பவற்றைக் கொள்க. இக்கருவிகளினின்றும் பிறக்கும் இன்னிசைநயத்தால் யானைபோன்ற பெரிய மிருகத்தையும் 'இசையறி பறவை' எனப் பெயரிய அசுணமா என்ற சிற்றுயிரையும் பாம்பாகிய பிற விலங்குகளையுங் கன்னெஞ்சுக் கள்வரையும் இசைவாணர் தம்வயப்படுத்திக் கனியச் செய்தனர்.

ஆகவே கி. பி. மூன்றும் நூற்றாண்டுக்குமேற் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழிசை வளம்பெற்றிருந்த தென்பதை உலகு நன்கறியும். ஆறுயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழர் சிறந்த நாகரீக மக்களாக வாழ்ந்திருக்கின்றனர் என்பதை மோகஞ்சதாரோ ஹரப்பா என்ற இடங்களிற் புதைபொருட் கலைஞர் செய்த ஆராய்ச்சிகள் வலியுறுத்துகின்றன. பழந் தமிழ்ப் பாணன் தனது மனைவி பாடினியுடன் சென்று யாழ் வாசித்தான். அதற்கியைய மனைவி ஆடுவாள். பாணனுக்கும் பாடினிக்கும் அரசசபையில் மகத்துவமும் சமத்துவமும் மிக விருந்தன. மிகச் சிறப்புற்று வாழ்ந்த பழந்தமிழர் சிற்பம் சித்திரம் இசை போன்ற கலைப்பொக்கிஷங்களை உலகுக்குத் தந்தனர். தமிழ்மக்கள் தங்கள் பழம்பெருமையை மீண்டும் பெறவேண்டுமானல் பழந்தமிழ்க் கலைகளுக்குப் புத்துயிர் கொடுக்கவேண்டும்.

9. வணிகம்

மக்களின் உடல் நலத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் கலைச்சிறப்பிற்கும் தொழிலுடைமை மிகவும் இன்றியமையாத பண்பாகும்.

> "தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்."

என்பது நாயனார் வாக்கு. "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" என்பது முதுமொழி. முயற்சி யுடைமையும் தொழிலுடைமையும் சமூகவாழ்க்கைக்கு எக்காலத்திலும் வேண்டப்படும் சிறந்த இயல்புகளாம்.

மக்களின் தொழில்களை இக்காலப் பொருள்நூலார் (Economists) நான்கு கூறுகப் பிரித்து ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். அவை: (a) இயற்கைப் பொருட்களை உற்பத்திசெய்யும் தொழில்கள்; (b) செய்கைப் பொருட்களை ஆக்கும் தொழில்கள்; (c) வணிகம்; (d) கூலித்தொழில்கள் என்பனவாம். முதற்பிரிவில் வேளாண்மை, கடற்றொழில், சுரங்கத் தொழில், வனப்பொருள் சேகரிக்கும் தொழில் என்பன அடங்கும். இரண்டாவதுபிரிவில் நெசவுத் தொழில், நூல்நூற்றல், அரிசி, மா முதலியனவற்றை உற்பத்திசெய்தல், யந்திரம் முதலியன செய்தல், செருப்பு சப்பாத்து முதலியன தைத்தல் ஆகியன அடங்கும். இக்காலத்தில் வேண்டப்படும் நவீனப் பொருட்களை உற்பத்திசெய்யும் முயற்சிகளும் இதனுள் அடங்குவனவாம். மூன்றுவது பிரிவினதாகிய வணிகம் வியாபாரத்தையும் அதனேடு தொடர்புடையனவாகிய பல முயற்சிகளையும் குறிக்கும். கூலித் தொழிலுள் படிப்பித்தல், நியாயம்வாதித்தல், சமயபோதனை செய்தல், விகிதனுய்த் தொழில்பார்த்தல், ஏவற்றொழில் என்பன அடங்கும்.

மேலே கூறப்பட்ட நான்கு பிரிவினுள்ளும் மக்களின் பொருளாதார நிலையைச் சிறப்பித்து நிற்கும் தொழில் வணிகமேயாகும். வணிகத்துறையுள் நன்னிலையடைந்துள்ள நாடு

களே இக்கால உலகிற் சகல செல்வாக்குகளும் பொருந்தப் பெற்றனவாய் விளங்குதல் நாம் எல்லோரும் நன்கறிந்த உண்மையாகும். இங்கிலாந்து, அமெரிக்கா, யப்பான் முதலிய நாடுகளின் அபிவிருத்திக்குக் காரணம் அந்நாட்டு மக்கள் வணிகத்துறையில் அடைந்திருக்கும் சிறப்பேயாகும்.

வணிகத்தோடு தொடர்புடைய தொழில்கள் எல்லாம் நான்கு பிரிவுகளாக வகுக்கப்படுகின்றன. அவை: (a) விற்றல் வாங்குதல் (Trade). (b) போக்குவரவு ஒழுங்குகளும் முயற்சிகளும் (Transport). (c) வங்கிநிலையங்களும் நாணய முறைகளும் (Banking & Finance). (d) ஈடுசெய் நிதிமுறைகளும் பண்டகசாலை ஒழுங்குகளும் (Insurance & Warehousing) என்பனவாம். விற்றல் வாங்குதல் என்பனவற்றில் ஈடுபட்டுள்ளோர் வியாபாரிகள் எனப்படுவார் (Traders). இவர்களை அடிப்படையாகக்கொண்டே வணிகம் இயங்குகின்றது. வியாபாரிகளின் சரக்குகளை, மக்களின் தேவைக்கேற்ற விதத்தில் ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குக் கொண்டுசெல்வதற்கு அமைந்துள்ள முறைகளும் சாதனங்களும் நிலையங்களும் வணிகவிருத்திக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாம். போக்கு வரவு முயற்சி தரைப்பகுதி தண்ணீர்ப்பகுதி ஆகாயப்பகுதி என மூன்று பிரிவுகளாக வகுக்கப்படுகின்றன. தரையில் போக்குவரவு தெருக்கள் மூலமாகவும் புகையிரதப் பாதைகள் மூலமாகவும் நிகழ்கின்றன. தண்ணீர்ப் போக்குவரவு சமுத்திரங்கள் கடல்கள் வாவிகள் வெட்டுவாய்க்கால்கள் ஆறுகள் என்பனமூலம் நிகழ்கின்றன.

பொருட்களை விற்பதற்கும் வாங்குதற்கும் துணைசெய்யும் சாதனம் நாணயம் எனப்படும். நாணயங்கள் இருவகையன. அவை உலோக நாணயம், தாள் நாணயம் என்பன. நாணய சம்பந்தமான நடபடிக்கைகளைக் கவனித்து அவற்றிற்கு ஏற்ற ஒழுங்குகளைச்செய்யும் நிலையம் வங்கி அல்லது நாணயநிலையம் எனப்படும். வங்கிகளின் நடபடிக்கைகள் நாணயச் சீட்டுக்கள் (Cheques) மூலமாகவும் உண்டியல் (Drafts) தவணை உண்டியல் (Bill of Exchange) மூலமாகவும் நிகழ்கின்றன. கடன் வியாபாரத்திற்குப் பெரும் துணையாக இருக்கும் சாதனம் தவணை உண்டியலேயாகும். பிறநாட்டு வியாபாரத்திற்கு இவ்வுண்டியல்கள் இன்றியமையாதனவாம்.

இந்நாட்டு மக்கள் பிறநாட்டுப் பொருட்களை வாங்கும் பொழுது அவற்றிற்குரிய விலைகளைத் தவணைஉண்டியல் மூலமாகவே கொடுப்பது சுலபம். தவணை உண்டியல்களின் போக்குவரவை அநுகூலப்படுத்துவதற்கு வங்கிகள் வேண்டப்படும். வங்கிகள் இல்லா நாடு வணிகத்தில் சிறப்படைதல் முடியாதகாரியமாம்.

ஈடுசெய் நிதிநிலையங்களும் பெரும் பண்டகசாலைகளும் வணிகத்தை விருத்திசெய்வதற்குச் சிறந்த துணைகளாக இக்காலத்தில் விளங்குகின்றன. ஈடுசெய் நிதிநிலையங்கள் மூலம் சேகரிக்கப்படும் பணம் புதிய வியாபார நிலையங்களையும் (Joint Stock Companies) பொருளுற்பத்தி நிலையங்களையும் (Manufactory Concerns) நாட்டின் பலபகுதிகளிலும் ஏற்படுத்தக்கூடியவாறு துணைபுரிகின்றது. வங்கிகளும் ஈடுசெய் நிதிநிலையங்களுமே மேல்நாட்டு வணிகத்தை நன்னிலையடையச் செய்தன எனக் கூறுதல் மிகையாகா. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்திற்கு அத்தியாவசியம் வேண்டப்படும் சாதனம் பெரும் பண்டகசாலைகளே. உலகத்திற் சிறந்துவிளங்கும் துறைமுகங்களாகிய லண்டன், பம்பாய், ரோக்கியோ, கொழும்பு, சிங்கப்பூர் முதலிய நகரங்களிற் பெரும்பண்டகசாலைகள் காணப்படுகின்றன. பண்டகசாலைகள் அமையாத துறைமுகங்களுள் ஏராளமாகச் சரக்குகளை ஏற்றுமதிசெய்வதும் இறக்குமதிசெய்வதும் முடியாத காரியமேயாகும்.

வணிக வளர்ச்சிக்கு வேண்டப்படும் இன்னுமொரு சாதனம் வணிகக் கணிதப்பயிற்சியாம். வணிக அபிவிருத்திக்கும் நடபடிக்கைகட்கும் ஏற்ற விதத்தில் வணிகக் கணக்குகளைப் பதிவுசெய்து சரிபார்த்தல் மிகவும் இன்றியமையாத சிறப்பு இயல்பாகும். வணிக விவகாரங்களை இக்கால வணிகக் கணித முறையில் நாம் எழுதிவைத்துக்கொள்ளும் வழக்கினைக் கையாளவேண்டும். இக்கால வணிகமுறைகளை விளக்கிக் கூறும் நூல்களும் வணிகக் கணிதவகைகளை விளக்கிக்கூறும் நூல்களும் தமிழில் புதியமுறையில் எழுதப்படல்வேண்டும்.

மனிதன் நாகரிகவாழ்க்கையில் வளர்ச்சிபெற்ற பின்பே வணிகமும் சிறப்படைந்து செழிப்புற் றிருக்கின்றது. பண்டைக்கால மக்களின் மத்தியில் வணிகம் நிலைபெற்றிருந்த

தாயினும் அது இக்காலத்தில் அடைந்திருக்கும் சிறப்பியல்புகளைப் பெறவில்லையென்பதே பொருள்நூலாரதும் வரலாற்று நூலாசிரியரதும் கருத்தாகும்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு முதலியனவற்றை நாம் படிக்கும்போது அங்கு தமிழ்மக்கள் அக்காலத்திலேயே கிரேக்கர், யவனர் முதலிய பிறநாட்டு மக்களுடன் வணிகம் நடாத்தி வந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைப்பதைக் காணலாம். அதுமாத்திரமன்றி காவிரிப்பூம்பட்டினத்தில் இக்காலத் துறைமுகங்களிற் காணப்படுவனபோன்ற பண்டகசாலைகளும் கலங்கரை விளக்கங்களும் இருந்தனவாக அந்நூல்களிற் கூறப்படுகின்றன. பண்டைத் தமிழ்மக்கள் வாணிபத் துறையுள் சிறப்பும் செழிப்பும்பெற்று வாழ்ந்தனராயினும், அவர்களின் அடிச்சுவட்டில் வந்த நாம் வாணிபத்தில் உலக மதிப்புக்கு உரிமையுடையோராய் விளங்கவில்லையென்பதை எவரும் மறுத்தலரிதாகும். இக்கால உலகத்தில் முற்போக்குடைய நாட்டுமக்கள் கையாளும் வணிக சாதனங்களாகிய நாணய நிலையங்களையும் ஈடுசெய் நிதிநிலையங்களையும், பண்டகசாலைகளையும் இயந்திரப் போக்குவரவுச் சாதனங்களையும் எமது நாட்டிலமைக்க நாம் முன்வருதல்வேண்டும். எமது நாட்டு மாணவர்கள் வணிகக் கல்வியில் தேர்ச்சிபெற வேண்டும். வணிகத்தில் நாடு முன்னேற்றம் அடைந்தாலன்றி எமது பொருளாதாரநிலை நன்னிலையடையமாட்டாது. இவ்வுண்மைகளை எமது தலைவர்களும், பள்ளிக்கூட அதிகாரிகளும், வித்தியா பகுதியினரும், பெற்றோரும் நன்குணர்தல் வேண்டும். உணர்ந்து எமது மாணவர்கட்கு இக்கால நாகரிக நாடுகள் கையாண்டுவரும் வணிகமுறைகளை நன்கு கற்பிக்கவேண்டும்.

10. சேரமன்னர் கடற்படைச் சிறப்பு

பண்டைத் தமிழரது போர்களைப்பற்றியும், போர் முறைகளைப்பற்றியும் ஆராயுங்கால், அவர்தம் கடல்வென்றிச் சிறப்புக்களைப்பற்றிக் கூறும் பற்பல குறிப்புகள் சங்க நூல்களில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. பல்லாயிரஆண்டுகட்கு முன்னரே தமிழ்நாடானது, கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும் நல்லிடங்களையும், பரதர் மலிந்த பயன்கெழு மாநகர்களையு முடைத்தாய் விளங்கிற்று. அப்பொழுது தமிழர் வாணிபத்திற்காகமட்டும் வங்கங்க ளமைத்தாரில்லை; மற்று மூவேந்தரும் தரைப் போர்மட்டும் புரிந்தாரல்லர்; வலிமைமிக்க கடற்படைக ளமைத்து ஏற்ற மாற்றாரை வென்று அடிப்படுத்தினர் என்பதற்குச் சங்கநூல்கள் சான்று பகருகின்றன. மூவேந்தருள்ளும் சேரமன்னரது கடற்படைச் சிறப்புகளைப் பற்றியே அவற்றில் அதிகம் விதந்தோதப்படுவதை நாம் காண்கிறோம்.

சேர வேந்தருட் சிறந்து விளங்கிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதான் தன் கடற்படை வல்லமையினால், பக்கத்திலிருந்த பகைவர்தீவுக்குப் படைஎடுத்துச் சென்று, அவர்களது காவன் மரமாக நிறுவப்பட்டதும், வஞ்சத்தால் நின்றதாகலின் மூப்பின்றி ஒரு நாட்போல நின்றதுமாகிய கடம்பினை வெட்டி வெற்றிகொண்டனன். இதனை,

> "முந்நீரினுட் புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
> மன்னர் கோச்சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்"

என்று. சிலப்பதிகாரம் பாராட்டுகின்றது. அன்றியும்,

> "வலம்படு முரசிற் சேர லாதான்
> முந்நீ ரோட்டிக் கடம்பறுத் திமயத்து
> முன்னோர் மருள வயங்குவிற் பொறித்து"

என, கடல் கடந்து அக் கடம்பறுத்த செய்தி, இமயத்திற்றன் விற்கொடி மாற்றாரின்மையிற் பொறித்த செய்தியொடு கூட்டியும்,

"சால்பெருந் தானைச் சேர லாதான்
மால்கடல் ஓட்டிக் கடம்பறுத் தியற்றிய
பண்ணமை முரசின் கண்ணதிர்ந்து"

என, தன் தானை கடலோட்டி அவர் காவல் மரமாய கடம் பெறிந்து அதனால் முரசமைத்து அமைந்த செய்தி தணித்தும் அகநானூற்றுச் செய்யுட்களிற் கூறப்படுவதுங் காண்க.

இனி, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார், பதிற்றுப்பத்தில் அவனது கடற் படைத் திறனையும், அவன் நெடுநீர் நாப்பண் நாவாயோட்டிப் பகைவரது கடம்பெறிந்த பெருஞ்செயலையும் பலபடப் புனைந்து கூறிப் போந்தார்.

"பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவி னார மார்பிற்
போரடு தானைச் சேர லாத!"

என விளிக்கின்றார் புலவர். ஈண்டுக் குறிப்பிட்ட 'தானை' என்பது எது? கடற்றானைதான். ஐயமேயில்லை. அன்றியும்,

"இடங்கவர் கடம்பி னரசுதலை பணிப்பக்
கடம்புமுத றடிந்த கடுஞ்சின வேந்தே!"

எனப் பிறண்டுங் கூறப்படுவதனாலும்,

"துளங்கு பிசிருடைய மாக்கட னீக்கிக்
கடம்பறுத் தியற்றிய வளம்படு வியன்பணை..."

என்புழி, "போர்செய்து வருந்தாமற் பகைவர் வெருவியோட முழங்கி அரசனுக்கு வென்றி தன்பாலே படாநின்ற முரசு" என உரைகாரர் கூற்றுயெழுந்த அவன்றன், பகைவர் காவன் மரமெறிந்தாக்கிய முரசச் சிறப்பாலும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய கடற்படை வலி தெள்ளிதிற் புலனும்.

இமயவரம்பன் றம்பியாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனுடைய பிரதாபங்களைக் கூறுமுகத்தான், அவனது மாற்றாராய பணிகெழு வேந்தரும் வேளிரும், கடலரண் காட்டரண் ஆகியவற்றாலாய மிடலுடைய ரெனினும், அவன்

முன் தம் ஆற்ருமை கண்டு, ஒருவர் துணிந்ததே காரியமாக அனைவருந் துணிந்து அவன்சரணடைவரென்பர் பாலைக் கௌதமனுர். இன்னும் அவன் தனக்குரித்தாய மேலைக்கடலும், முன் சோழபாண்டியர்க் குரித்தாய்ப் பின்பு தான் பொருது வென்று தன்னுட்சிக் குட்படுத்திய நாட்டிற் கீழ் கடலுமென அவ்விரு முந்நீர்ப் பரப்பினையும் தன் கருங் களிற்றியானைப் புணர் நிரை நீட்டி நிறைத்து, இருகடனீரும் ஒருபக லாடினுனென்பதை அவர் கூறிய பதிற்றுப்பத்துச் செய்யுளானும் அதற்கு உரைகாரர் தீட்டிய உரைக் குறிப்பாலும் அறியலாகும். இதிலிருந்து பல்யானைச் செல்கெழு குட்டுவனுடைய யானைப் படைச்சிறப்பு மாத்திரமன்றி அவனது கடலாதிக்கத்தின் பெருமையும் விதந்தவாறு புலனும்.

சேரன்செங்குட்டுவன் என்பான் ஏனைய சேரமன்னரைப் பார்க்கிலும் அதி திறமையும் வலிமையும் படைத்த கடற்படை யுடையனுய்ப் பற்பல கடல் வென்றிகள் பூண்டானென்பது சங்க இலக்கியங்களிலிருந்து அறியலாகும். சிலப்பதிகாரத்து வரந்தருகாதைக் கட்டுரைக்கண்,

"புறத்துறை மருங்கின் அறத்தொடு பொருந்திய
மறத்துறை முடித்த வாய்வாட் டானையொடு
பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டிக்
கங்கைப்பேர் யாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன்..."

என்று இவனது சிறப்புக் கூறப்பட்டுள்ளது. அன்றியும்,

"கொடும்போர் கடந்து நெடுங்கட லோட்டி
உடன்றுமேல் வந்த ஆரிய மன்னரைக்
கடும்புனற் கங்கைப் பேர்யாற்று வென்றேய்!"

என்று நடுகற் காதைக்கண்ணும் குட்டுவன்றன் கடற்படை வலிமை பாராட்டப்படுதலும் காண்க. இனி, பரணரும் அகநானூற்றில்,

"படைநிலா விலங்குங் கடன்மரு டானை
மட்டவிழ் தெரியன் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெருது விலங்குசினஞ் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவ நீங்க வோட்டிய..."

என்று குட்டுவன் கீர்த்தியைக் குறிப்பிடுகின்ருர். மேலும்,

" கோடுநரல் பௌவங் கலங்க வேலிட்
டுடைதிரைப் பரப்பிற் படுகடலோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்..."

என்ற அவர்தங் கூற்றும் செங்குட்டுவனது கடற் செருவின் றிறனை வலியுறுத்தும். இதனாலன்றோ அவன் "கடல் பிறக் கோட்டிய சேரன் செங்குட்டுவன்". என்று சீரிய அடை கொடுக்கப்பட்டுச் சிறப்புடனழைக்கப்படுவது,

பதிற்றுப்பத்திலும் பரணர் பெருமான் அவனை "நின் போலப் பனிக்கடலிற் புக்கு ஒருவினை செய்யத் துணிந்தார் யாண்டுளர்? நின்னனைய பண்பிற்றனை மன்னரினி யாருளர்? நின் முன்னுமில்லை; நிற் பின்னருமில்லை" என்று புகழ்வர். மற்றோரிடத்தில் அவர் அவனை,

" கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ!"

என்று விளிக்கின்றார். இதனால் அக்கடற்கண் உழத்தற் றொழிலொப்புமை பற்றிக் கடற்றுறை வாழும் நுளையர்க்குப் பெயராய 'பரதவன்' என்னும் பெயரான் இழித்துக் கூறினார் போலக் குறிப்பானுயர்த்து, அவன்றன் கடல்வென்றிச் சிறப்புக் கூறினாரென்றே கொள்ளப்படும்.

பதினாறும் பதினேழாம் நூற்றாண்டுகளில், அமெரிக் காவிலிருந்து செம்பொன்னும் வெண்பொன்னும் ஏலக் கொண்டு மீண்ட ஸ்பானியதேசக் கப்பல்களை, தம் கடலாதிக்க வெறியால் ஆங்கில நாட்டுக் கப்பல்கள் அத்திலாந்திக் சமுத் திரத்தில் வைத்து மடக்கிப் பொருள்கொண்ட சம்பவங்கள் பல, அந்நாட்டுச் சரித்திரங்களிற் காணப்படுகின்றன. அவற் றையொத்த சம்பவமொன்று மாமூலனார் கூற்றாகவரும் புறப்பாட்டொன்றில் வெகு அழகாகக் கூறப் பட்டுளது; அதுவும் சேரன் செங்குட்டுவனுடைய கடற்படை வலியைப் பற்றியதே:

" சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவா யோட்டிய அவ்வழிப்
பிறகலஞ் செல்கலா தனையேம்"

என்பது அது. 'சினம் மிகுந்த கடற்றானையினையுடைய சேரன் செங்குட்டுவன் மேல்கடலின் கண்ணே பொன்னைத்

தரும் நாவாய் செலுத்திய அவ்விடத்துப் பகைவரது வேறு சிலவாய மரக்கலங்கள் போகமாட்டாத அத்தகைய வன்மையை யுடையேம்' என்பது இதன் தாற்பரியம். செங்குட்டுவனுடைய செழும் பொன்னும் முழு மணியும் நிறைத்த நாவாய்களை மடக்குதற்குப் பகைவரது கப்பலோட்டிகட்குத் துணிவே இல்லையாம்! காரணம், செங்குட்டுவனது கடலாதிக்கமேயாகும்.

ஈண்டுக் கூறியவற்றாற் பண்டை நாளிற் சேரமன்னர் ஆதிக்கம் வாய்ந்த பீடுகெழு கடற்படை யுடையராயிருந்தனரென்பதும், அவற்றினுதவியாற் பகைவேந்தரைப் பல கடற்செருவிற் கடந்து பணிய வைத்தனரென்பதும் அறியலாகும்.

"வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம்
மேலைக் கடல்முழுதுங் கப்பல் விடுவோம்."

—பாரதியார்

11. வானொலி

இவ்விருபதாம் நூற்றாண்டில் அறிவியலில் பல ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இவற்றின் பலனாகப் பல புதிய கருவிகள் கிடைத்துள்ளன. அக் கருவிகளுட் டலைசிறந்தது வானொலி. இத்தாலி தேசத்தில் "சிஞ்ஞோர் மார்க்கோனி" என்னும் ஒரு அறிவியல் ஞானி வாழ்ந்து வந்தார். அவர் ஒலியின் தன்மைகளை நெடுநாட்களாக ஆராய்ந்து வந்தார். 'ஓரிடத்திற் பிறக்கும் ஒலியை மின்சாரத்தின் மூலம் தொலைவிலுள்ள வேறோரிடத்திற் கேட்கச் செய்யலாம்' என்னும் உண்மை அவர் மனத்திற் றோன்றியது. இவ்வுண்மையைக் காண்பதற்கு இடைவிடாது முயன்றார்.

"தெய்வத்தான் ஆகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்"

என்னும் பொதுமறையாளர் வாய்மொழிக் கிணங்க, கி. பி. 1895-ம் ஆண்டு தம் முயற்சியின் பலனைப் பெற்றார். தான் கண்ட உண்மையை முதலில் தம் அருமைத் தாயாரை அழைத்துக் காட்டினார். தன் மகனின் மதி நுட்பத்தை நேரே கண்டறிந்த தாய், அவனை ஈன்ற நாளிலும் பெரிது உவந்திருப்பாளல்லவா!

இளவேனிற் காலத்தில் மாந்தோப்பில் அமர்ந்து குயில் கூவுகின்றது. அதன் இன்னிசையைக் கேட்டு நாம் இன்புறுகின்றோம். அழகான ஒரு மண்டபத்தில் அமைந்துள்ள மேடையிலிருந்து ஓர் இசை வல்லவன் இசை விருந்து அளிக்கின்றான். அவ் விருந்தைப் பன்னூற்றுக் கணக்கான மக்கள் கேட்டு மகிழ்கின்றார்கள். குயிலின் இன்னிசையும் இசை வல்லவனின் இசையும் நம் செவிப்புலன்களை எவ்வாறடைந்தன? ஒலி அலைவடிவமாக ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குச் செல்கின்றமையாலாம்.

ஒளி, ஒலி, மின்சாரம் என்பவை அலைகளாகவே பரவுகின்றன. ஒலி ஒரு செக்கனில் 1008 அடி செல்கின்றது. ஒளி ஒரு செக்கனில் 1,86,300 மைல் செல்கின்றது. மின்சாரம்

ஒளிபோல் விரைவாகச் செல்லுந் தன்மையுள்ளது. ஆகையால் ஒலி அலைகளை மின்காந்த அலைகளாக (Electro-magnetic Waves) மாற்றிவிட்டால் உலகத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு விரைவாகப் பரவச் செய்யலாம்.

வானொலி நிலையத்திலிருந்து ஒருவர் பேசும்பொழுது அல்லது பாடும்பொழுது அவ்வொலிகளை ஒலிப்பதிவு விதானத்தின் (Microphoue) மூலம் மின்சார அதிர்ச்சிகளாக (Magnetic Induction) மாற்றி அவ்வதிர்ச்சிகளை மின்னுருத்தாள் (Thermionic valve) மூலம் மின்காந்த அலைகளாக மாற்றி அம் மின்காந்த அலைகளை வானி (Ariel) மூலம் ஆகாயத்திற் பரவச் செய்கின்றனர்.

வானொலியைக் கேட்பவர்கள் இவ்வாறு வானிற் சஞ்சரிக்கும் மின்காந்த அலைகளை வானி மூலமாகத் தங்கள் வீடுகளிலுள்ள வானொலி ஏற்குங் கருவியில் (Radio Receiver) பதிய வைக்கிறார்கள். வானொலி ஏற்குங் கருவியிலுள்ள மின்னுருத்தாள்கள் அம் மின்காந்த அலைகளை மறுபடியும் மின்சார அதிர்ச்சிகளாக மாற்றுகின்றன. மின்காந்த அலைகள் இறுதியில் ஒலி அலைகளாக மாற்றப்படுகின்றன. ஆகவே, செய்தியையோ, பேச்சையோ, பாட்டையோ அவர்கள் கேட்கிறார்கள்.

இக்காலத்தில் வானொலி நிலையம் பெரும்பாலும் எல்லா நாடுகளிலுமுண்டு. ஒவ்வொரு வானொலி நிலையமும் தினந்தோறும் ஒலிபரப்புகின்றது. நாங்கள் விரும்பிய ஒலிபரப்பை எங்கள் வீட்டிலுள்ள வானொலிக் கருவியில் எவ்வாறு கேட்கலாம் என்று ஆராய்வாம். ஒலிபரப்புக்கள் குறுகிய அலை (Short Wave), மத்திம அலை (Medium Wave), நீள அலை (Long Wave) என மூன்று வகையான அலைகளில் ஒலிபரப்பப்படுகின்றன. இவ்வலைகட்கு அலை நீளம் (Wave Length) உண்டு. ஒவ்வொரு வானொலி நிலையமும் வெவ்வேறு அலைநீளங்களில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும். ஆகையால் எங்கள் வானொலி ஏற்குங் கருவியிலுள்ள அமைப்புக்களைக் கொண்டு நாங்கள் விரும்பிய ஒலிபரப்பைக் கேட்கலாம். இதற்காக ஒவ்வொரு வானொலி நிலையமும் அவ்வவ் நிலைய நிகழ்ச்சி நிரல்களை வெளியிடுகின்றது. சிறப்பு

நிகழ்ச்சிகள் அவ்வப்போது ஒலிபரப்புக்களில் அறிவிக்கப் படும்.

வானொலியால் மனித சமூகம் பல நன்மைகளை அடைந் திருக்கின்றது. புகைக்கப்பல்களில் ஒலிபரப்புக் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அபாய மேற்படும்பொழுது அபாயச் செய்திகளை ஒலிபரப்ப இயலுவதாற் பல உயிர்கள் ஆண்டுதோறுங் காப்பாற்றப்படுகின்றன. வானொலி தூரத்தை அறவே ஒழித்து விட்டது. பல்லாயிரம் மைல் களுக்கப்பால் நடைபெறும் பேச்சை அதே நேரத்திற் கேட்க முடிகின்றது. பொதுமக்களின் கல்வி வளர்ச்சிக்கு மிகவும் பயன்படுகின்றது. இதற்காக வானொலி நிலையங்களிற் கல்வி நிகழ்ச்சிகளும், கிராமாந்திர நிகழ்ச்சிகளும் நடைபெறுகின் றன. வெவ்வேறு தேசங்களிலுள்ள பல அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனடைதற்கு வானொலி பெருந்துணையாய் விளங்குகின்றது. போர்க்காலங்களிற் போர் முனையிலிருந்து செய்திகளை வேண்டுமிடங்களுக்கு அறிவிப் பதற்கு உதவுகின்றது. எனவே வானொலியைப்பற்றி எல் லோரும் நன்கு அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

12. மெய்ப் புலவன்

பலநாட்களாக இருண்மண்டிக் காணவுங் கருதவும் முடியாது அல்லல் உழந்து கிடந்த ஒரு நாட்டிற்குப் புத்தப் புதிய ஒளி வீசி இன்பம் நல்கும் ஓர் இளவள ஞாயிற்றைப் போன்று, ஒரு மெய்ப்புலவன் மக்களின் அறியாமையை நீக்கி நல்லறிவுச் சுடர் கொளுவி வருகின்றான். கட்புலனாற் கதுவப்படுங் காட்சிப் பொருள்களிலும் மனவுணர்வால் நுணுகி யறியப்படுங் கருத்துப் பொருள்களிலும் ஒரு மெய்ப் புலவனின் நெஞ்சம் பதிந்து கிடக்கும். அதனால், பருப் பொருளாகிய அழகின் தோற்றத்தையும் நுண்பொருளாகிய அறிவினையும் அன்பினையும் ஆங்காங்கே கண்டு வியந்து பெரியதோர் உவகை யெய்துகின்றான். அவனது தூயநெஞ்சம் விழுமிய அறிவு துளும்பி வழிகின்ற கொழுஞ்சுனையாகவும், சாவா மருந்து நல்கிய திருப்பாற் கடலாகவும் அமைந்திருக்கின்றது. ஏனெனின், அறிவு விடாய் கொண்டானுக்குத் தெளிந்த அறிவாகிய நறுநீரைக் கொடுத்து, அவனுடைய விடாயைத் துவரப்போக்கி விடுதலினாலும், கண்டாலுங் கேட்டாலுங் கருதினாலும் நெஞ்சம் நிறைவுபடவுண்டாலுந் தெவிட்டாத அமிழ்தனைய தீஞ்சுவைப் பாட்டுக்களைத் தந்து உயிர்களுக்கு இனிமையையும் உறுதியையும் பயந்து நிற்றலினாலுமென்றுணர்க. அல்லதூஉம், திருப்பாற்கடல் விண்ணவர்க்கு அமிழ்தத்தை ஒருமுறை தானே நல்கிற்றல்லது, பிறரெல்லாம் வேண்டு நேரந்தோறும் அது நல்கியதை யாம் யாண்டுங் கேட்டிலம்; ஆயின், மெய்ப்புலவனின் உள்ளமாகிய திருப்பாற்கடல் வேண்டுநர்க்கெல்லாம் வேண்டிய நேரங்களில் அமிழ்தினுஞ் சிறந்த இன்பச் செய்யுள்களை வரையாது நல்குகின்றது. இத் திருப்பாற்கடலை முறுகக் கடைவதற்கு மலையும் பாம்பும் வேண்டுவதில்லை; இகலும் பிணக்கும் யாண்டும் இல்லை. ஆதலினாலே, அத் திருப்பாற் கடலினும் இத் திருப்பாற்கடல் இறப்பவும் மேதக்கதென்பது இனிது புலனாகுமென்க.

முறுகிய அன்பினாலே பிணிக்கப்பட்ட இரண்டு காதலரின் மிக்க காதலனாகவும் செருக்களத்தினிற் றனது இனிய

உயிரையும் வெறுத்து மலைந்து விழுப்புண்பட நின்ற வீரனின் மிக்க வீரனாகவும், அரசு கட்டிலேறி மணிமுடிகவித்துத் தனிக்குடைக்கீழ் அரசு செலுத்தும் வேந்தனின் மிக்க வேந்தனாகவும், கல்லா மழலைக் கனி வாயிலே பசும்பாலசும்பூற, "அம்மே! - அம்மே!! -" என்று குதலையாடிச் சீறடி சேப்பக் குறுகுறு நடந்து போந்து, இனிய தாயின் இன்முகங் கண்டு மகிழும் பச்சைப் பசுங் குழவியின் மிக்க பசுங்குழவியாகவும், மற்று, அக் குழவிக்கு இடுக்கண் நேர்ந்தது கண்டு நெஞ்சங் குழைந்து மெய் சோர்ந்து உடனுதவும் தாயினும் மிக்க அருட்டாயாகவும், ஒரு மெய்ப் புலவன் இருக்கின்றான். இங்ஙனம் இருத்தலினாலன்றோ, அவ்வவர் பெற்றிமைசான்ற செய்யுள்களைச் செய்து போதருகின்றான்.

ஒரு மருத்துவன் பிணியுடையானது பிணியைத் தன் அகன்ற அறிவினாற் றெளிந்து, அவன் அப்பிணியினீங்கி நலம்பெறும் பொருட்டு வாய்ப்பான மருந்துகளையெல்லாந் தனது மதிவளத்தினாலே தெரிந்தெடுத்து நல்குவான். அம் மருந்தினையுட்கொண்டு அந் நோயுடையானும் பிணியினீங்கி இன்பமும் நலமு மெய்துகின்றான். அதுபோலவே, ஒரு மெய்ப் புலவனும் உலகியல் நிலையை நன்கு தெரிந்து அவ்வுலகம் அறிவிலும் செயலிலும் வழீஇச் செல்லாது மேம்பட்டு இன்பம் பெறும் வண்ணம் உயர்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துகின்றான். சாலவுங் கைக்கும் மருந்தினை யுட்கொள்ள இயலாத பிணியுடையானுக்கு அம்மருத்துவன் அதனை வெல்லத்திற் பொதிந்து கொடுப்பான். பிணியுடையானும், "இது கைப்புடையதன்று; இறப்பவும் இனிக்கின்றது," என்று மகிழ்ந்து உண்டு நோய் நீங்கப்பெறுகின்றான். அதுபோலவே, ஒரு மெய்ப்புலவனும் அறஞ் செய்யவும் பொருள் தொகுக்கவும் இன்பந் துய்க்கவும், எல்லாம் வல்ல செம்பொருட் சிவத்தை நினைக்கவும் ஏலாதாரை, அவ்வத்துறைகளிலே நிறுத்தற்கு அவர் கருத்தூன்ற வைத்தற்குரிய நெறிகளைக் கடைபோகத் தெருட்டும் இனிய பாட்டுக்களைத் தருகின்றான். இலக்கிய நூல்களிலே சுவைகொண்டு கற்கும் விழைவில்லாதாரை அவற்றின்கண் மிகுதியும் அழுந்தி நின்று சுவைக்கச் செய்கின்றான். இவ்வொப்புமையைச் சிறிது நுணுகி நோக்குவேமாயின், மருத்துவன் உடம்பைப் பற்றும் நோய்களை

மாற்ற வல்லனுதல் போலவே மெய்ப்புலவனும் உயிரைப் பற்றிய நல்லனவற்றில் விழைவின்மை, மக்கட் பிறவியின் குறிக்கோளுணராமை, இறைவன் திருவுள்ளக் குறிப்புணராமை முதலாய வேண்டா வியல்புகளை மாற்ற வல்லனு இன்றுனென்பது புலனுகா நிற்கும்.

இனி, ஒரு மன்னவன் மணிமுடி கவித்து அரசு கட்டிலேறி இந் நிலவுலகத்தைக் கண்ணுங் கருத்துமாகப் பேணி வருகின்றுன். அம்முகத்தானே, இவ்வுலகம் அம்மன்னவனுக்கு ஆட்சியுரிமை யுடையது. அவ் வேந்தன் முறைசெய்து ஓம்பி வருகின்ற இந் நிலவுலகத்தைப் போன்ற ஓர் உலகத்திலேயே ஒரு மெய்ப்புலவன் அரசுபுரிந்து வருகின்றுன். அவ்வுலகமே மூவாச் சாவாக் கற்பனையுலகமென்று சொல்லப்படும். நிலமே நீரே தீயே வளியே என்ற அந்நான்கு பூதங்களையும் மற்று, அவை நனியியங்குதற்கு நிலைக்களனுய அகலிரு விசும்பினையும், அவ்விசும்பின்கண்ணே விளங்குகின்ற திங்களையும் ஞாயிற்றையும் நாண்மீன்களையும் பிறவற்றையும் நான்முகன் படைத்துதவினனுக, அவைதம்மைப் பல்வேறு திறத்த அரசர்கள் ஆங்காங்கே வைகி முறைசெய்து ஓம்பிவருகின்றனர். ஆயின், ஒரு மெய்ப்புலவன், அந் நான்முகக் கடவுள்தானுங் கண்டுங் கேட்டுங் கருதியுமுணர்தல் சாலாத கற்பனையுலகங்களைத் தானே தனது விழுப்பமும் நுண்மையுஞ் சான்ற மதிவளத்தினுலே படைத்து, ஆங்குவைகி அரசுபுரிந்து வருகின்றுன். ஈடும் எடுப்பும் இல்லா விறல்படைத்த மாப்பெரு வேந்தராலும், அக் கற்பனையுலகங்களை அடிப்படுத்தவியலாது. மற்று, அடைமதிற் படுத்தவும் முடியாது. நூற்றுவரைக் கொல்லி முதலிய எந்திரக் கருவிகளினுலே அழிக்கவும் இயலாது. அவை, எண்ணிறந்த ஊழிகாலங் கழிந்து செல்லினும் அழியாவியல்பினவாய்ப் புத்திளமைச் செவ்வியும் அழகுந் துறுமி விளங்குவனவேயாம்.

ஞாயிறும் திங்களுஞ் செவ்வாயும் புதனும் வியாழனுஞ் சனியும் என்ற இக்கோள்களின் செலவையும் பரிப்பையும் மண்டிலத்தையும் அளந்து இத்துணையவென்று அறுதியிட்டுக் கூறுதல் சாலும். புலவனின் கற்பனையுலகம் இத்துணையளவிற்றென்றும் இவ்வியல்பிற்றென்றும் கூறுதல் வானநூல் வல்ல மாப்பெரும் புலவர்க்கும் இயலாது. கற்பனையுலகத்திலே ஆயிரஞ் செங்கதிர்ச் செல்வர்கள் உலவா நிற்பர்; ஆயிரந் திங்களஞ் செல்வர் உலவா நிற்பர்; ஆயிரகோடி விண்மீன்களும் ஆண்டுக் காணப்படும். செந்தேன் பிலிற்றுந்

தாமரை பொதுளிய நறுநீர்ப் பொய்கைகளும் தெண்ணீர்ச் சுனைகளும் அளக்கலாகா மலைகளும், அவைகளினின்றும் இழிந்து பொன் கொழிக்கும் அருவிகளும், யாறுகளும் கடல்களும் ஆங்காங்கே காணப்படும். பொதியினிற் பிறந்து மதுரையில் வளர்ந்து புலவர் நாவிற் பயிலுந் தென்றலினும் மேதக்க தென்றல் அக் கற்பனையுலகின்கண்ணே வீசாநிற்கும்.

தமதினிய உயிரைத்தானும் வெறுக்கும் போர்வீரர்கள் அங்கே இறுமாந்து செம்மாந்து வீற்றிருப்பர். ஒருகாற் போர்க்கறைகூவி யெழாநிற்பர். காற்றினுங் கடுகியும் முடுகியும் செல்லுங் கணைகளுந் தேர்களும் காலாள்களும் பரிமாக்களும் ஆண்டுக் காணப்படும்.

கம்பர் பெருமானும்,

"பொன்சேர் மென்காற் கிண்கிணி யாரம் புனையாரம்
கொன்சே ரல்குன் மேகலை தாங்குங் கொடியன்னார்
தன்சேர் கோலத் தின்னெழில் காணச் சதகோடி
மின்சே விக்க மின்னர சென்னும் படிநின்றாள்."

என்று சீதாபிராட்டி மிதிலையிலுள்ள கன்னிமாடத்திற் பாங்கியரொடு நின்ற காக்ஷியைச் சித்திரிக்கிறார். மற்று அவர் தங் கற்பனை உலகில் செந்நீயைத் தகடுகளாகக் குயிற்றுவர். எல்லாத் தாமரைப்பூக்களின் கவினையும் ஒருவழிப் படுத்துவர்.

"செந்நெ ருப்பினைத் தகடுசெய் துபார்
செய்த தொக்குமச் செந்த ரைப்பரப்
பந்நெ ருப்பினிற் புகைதி ரண்டதொப்
பல்ல தொப்புறு வதனி டைப்புறு."

என்பது நோக்கியறிக.

ஒரு மெய்ப்புலவன் தான் நினைத்த வமயங்கள் தோறும் பகலவனைப் படைச்செய்வான்; திங்களைத் தோன்றவும் செய்வன். இந்திரனாலும் குபேரனாலும் தருமராலும் துரியோதனனாலும் சமைப்பிக்க முடியாத எழுநிலை மாடங்களையும் மண்டபங்களையுங் கோயில்களையுந் தானே ஒரு நொடிப் பொழுதிற் கட்டியெழுப்புவான். குபேரனுங் கண்டுணராத விலைமதிப்பரிய களஞ்சியங்களிலே உலவா நிதிகளைக் குவித்து விடுவான். நான்முகன்தானும் படைக்க முடியாத அழகு நிரம்பிய நங்கையரையும் அகப் புறப் பற்றுக்கள் ஒழித்துக் கடுந்தவ முனுற்றும் இருடிகளையும், அன்புதானு மரும்பாக் கொடுமன வரக்கரையும், அருளொழுகு மந்தண வாழ்க்கை

யருமறைச் செல்வரையும், இவர்போல்வார் பிறரையும் ஆங்காங்கே கண்டு மகிழ்வான்.

இவ்வாற்ருன், தானே படைத்துக்கொண்ட கற்பனை உலகின் 'கைபுனைந்தியற்ருக் கவின்பெறு வனப்புக்களை' யெல்லாங் கண்டு இன்பநுகருகின்ற ஒரு மெய்ப்புலவனுக்கு, அந்நுகர்ச்சியை வெளிப்படுத்துஞ் செவ்வியும் வாய்த்தல் வேண்டும். செவ்வி வாயாக்கால், அவனது தூய அறிவும் கற்பனையும் வெளிப்படாமல் வாளா மடங்கிக்கிடந்து ஒழியுமென்றுணர்க. இவ்வுண்மையைச் சில எடுத்துக்காட்டுகளினுலே விளக்குதும் :- அஞ்சா நெஞ்சு படைத்த ஒரு போர்வீரனுக்குப் போர் நிகழ்ந்தாலன்றி, அவன் தனது ஆற்றலைப் புலப்படுத்துதல் இயலாது ; போர் நிகழாதாயின் அவனது அளப்பருமாற்றல் பிறருக்குப் புலப்படாது நுண்ணிலையில் மடங்கிக் கிடக்கும். அதுபோலவே, ஒரு மெய்ப்புலவனுக்கும், அறிவின் வளத்தை வெளிப்படுத்துஞ் செவ்வி வாயாதாயின், அஃது ஓராற்ருனும் பிறர்க்குப் புலனுகாது, அவன்பால் நுண்ணிலையில் அமைந்து கிடக்கும். இசைக்கலையில் வல்ல புலவன் ஒருவனுக்கு இசைக்கருவிகளும் கேட்குநரு மில்லையாயின், அவன் அக்கலையிலெய்திய திட்பநுட்பஞ் சான்ற ஆற்றலைப் புலப்படுத்த மாட்டுவா னல்லனுவான். அதுபோலவே, ஒரு மெய்ப்புலவனுக்கும் இடம் பொருள் ஏவல்களும் சூழலும் பிறவும் நன்கு அமைந்திருப்பினல்லது தனதாற்றலைப் புலப்படுத்துதல் சாலாதாகும்.

கம்பர் பெருமானைச் சடையப்பவள்ளலும், புகழேந்திப் புலவரைச் சந்திரன் சுவர்க்கியும், சங்கத்துப் பொய்யடிமையில்லாத புலவர்களை ,முடியுடைவேந்தருங் குறுநிலமன்னரும் ஆருயிர்போலக் கருதிப் பேணி வந்திலரேல், இராமாயணமும் நளவெண்பாவும் சங்க நூல்களும் தோன்றியிராவென்றே கருதற்பாலதாம். மெய்ப்புலவன் சிறந்த குறிஞ்சி நிலத்திலாதல் மருதநிலத்திலாதல் வைகுவானுயின், வளவிய பொய்கைகளையும், கொழுவிய சுனைகளையும், நீண்டு வானுறவுயர்ந்த மலைகளையும், குன்றுகளையும், அருவிகளையும், புள்ளினங்களையும், விலங்கிட்டங்களையும், பிறவற்றையுங் கண்டு கண்டு இறும்பூது எய்தி யின்புற்றுக் கற்பனையும் மெய்ப்பாடும் அறிவு விளக்கமும் பிலிற்றுந் தீந்தமிழ்ப் பாட்டுக்களைப் பாடிப்பாடி மகிழ்வான். அறிவும் இன்பமும் பிறத்தற்கு அழகுவீறி நிற்கும் இடச்செவ்வி வாய்த்தல் வேண்டும்.

கம்பர் பெருமான் மருதநிலச் செவ்வியைப் பின்வருமாறு கூறுகின்றார் :--

" தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ."

கபிலர் பெருமான், நக்கீரனார், சேக்கிழார், மாங்குடிமருதனார் என்றித் தொடக்கத்து நல்லிசைப் புலவர் குறிஞ்சி, மருதம், நெய்தல் முதலிய இயற்கைவளஞ் சிவணிய நிலங்களிலே வைகியதாலன்றோ, சொல்வளமும், பொருள் வளமும், ஓசை வளமுஞ் சான்ற உயிர்ப் பாட்டுக்களைப் பாடியருளினார்கள்.

இன்னும் இவைகளை நுணுக்கமாக நோக்குவோமாயின், தண்ணென்றமுதொழுக்கும் வெண்மதியினைக் கண்டும், கீழ்த் திசை முகட்டிலே கிளர்ந்து தோன்றும் இளவள ஞாயிற்றின் வியத்தகு தோற்றங் கண்டும், அன்றலர்ந்த நறும்பூவின் குன்றாக் கவின் கண்டும், பசும்புற்றரையின் அழகு கண்டும், முழங்கு கடலின் விளங்கு தோற்றங் கண்டும், மன்றல் அளைந்த தென்றலின் ஊற்றின்பம் நுகர்ந்தும், இன்பமும் வியப்பு மெய்தி இயற்கையாற் கதுவப்பட்டு, நிற்பவனே மெய்ப்புலவனாவனென்றறிவேம்.

இங்ஙனமாக, அழகும், அன்பும், அறிவும் என்ற இம் மூன்றினாலும் புலவன் இன்பந் துய்க்கும் அவசரத்திலே இனிய செய்யுள்கள் தோன்றா நிற்கும். "மணியினது ஒளியும் மலரினது நாற்றமும் சந்தனத்துத் தட்பமும் போல உண்ணின் றெழுதரு மொருபேரின்ப வெள்ளம்," என்று ஆசிரியர் நக்கீரர் ஆண்டுக் கிளந்தோதியவாறு, மேற்கூறிய மூன்றனாலும் புலவன் இன்பந் துய்க்கின்றான். மூக்குணர்ச்சியைக் கதுவுகின்ற நறுமணங் கமழும் ஒரு பூவில் அம் மணம் இயற்கையிலே தோன்றி நுண்பொருளாக வமைந்து கிடந்து, அரும்பாகிப் போதாகி மலரும் நிலையிற் பருப்பொருளாகி வெளிப்பட்டுக் கமழ்ந்து இன்பந் தருவதுபோல, இயற்கையில் இன்ப நுகரும் மெய்ப் புலவனின் விழுமிய கருத்துக்களெல்லாந் தோன்றி நுண்ணிலையில் நின்று பின்னர் ஒன்று புணர்ந்து பருப்பொருள் போன்றதாகி வெளிப்பட்டுச் செய்யுள்களாகின்றன. அந்நறுமணத்திற்கு அப் பூவின் செவ்வியுந் தோற்றமும் உபகாரப்பட்டு அழகு படுத்துகின்றமை போலப் புலவனின் விழுமிய கருத்துக்களுக்கு உவமையும் உருவகமும் தற்குறிப்பும் உள்ளுறையும் இறைச்சியும் என்றித் தொடக்கத்த அணிகள் உபகாரப்பட்டு அழகுபடுத்துகின்றன.

13. இந்திரனும் கன்னனும்

பாரத வெண்பா

பாண்டவர் துரியோதனனோடு சூதாடித் தம் நாடு நகரங்களை யிழந்து, பன்னிராண்டு வனத்துறைந்தும், ஓராண்டு விராடநகரத்து மறைந்துறைந்தும் துரியோதனனது தீர்ப்பை நிறைவேற்றிவிட்டனர். இவ்வாறு அவர்கள் தனது தீர்ப்பை நிறைவேற்றியதைக் கண்டும் துரியோதனன் அவர்கள் நாட்டைத் திருப்பிக் கொடுக்க மனங்கொள்ளவில்லை. பாண்டவருள் மூத்தோனாகிய தருமன், கண்ணபிரானைக்கூடத் தூதாக அனுப்பி, நாடு தராவிட்டாலும் ஐந்தூராவது தரவேண்டும், அல்லது ஐந்து வீடாவது தரவேண்டும் என்று கேட்டுப் பார்த்தான். கெடுமதியங்கொண்ட துரியோதனன் எதற்கும் இணங்கினனில்லை.

துரியோதனன் முதலியோர்க்கும் தருமன் முதலியோர்க்கும் போர் மூளப்போகின்றது. தருமன்பக்கம் வெற்றி கிடைத்தற்குரிய வழிகளை—அருச்சுனன் சாவாமல் வெற்றிபெறுதற்குரிய வழிகளை ஒவ்வொன்றாகச் செய்துகொண்டு வருகின்றான் கண்ணபிரான். கண்ணபிரான் உள்ளத்திலே துரியோதனன் பக்கத்தைச் சேர்ந்தாரிற் கன்னன் என்ற வீரனைப் பற்றித்தான் அடிக்கடி நினைவு தோன்றுகிறது. ஏனெனிற் கன்னன் அருச்சுனனோடு ஒப்புச் சொல்லத்தகும் ஆற்றலுடையவன்; ஈடில்லாத பெருங் கொடைவள்ளலாயிருந்து புண்ணியத்தை அளவின்றி யீட்டியவன்; தன்னையணிந்திருக்கும்வரையும் யாராலும் கொல்லப்படாத பெருமைவாய்ந்த குண்டலத்தினை யுடையவன். அருச்சுனன் கொலையுண்ண வேண்டுமாயின் கன்னனாலேதான் கொல்லப்பட வேண்டும். கன்னனும் தான் அருச்சுனனோடு போர்செய்து அவனையே வெல்லவேண்டுமென்று காத்துக்கொண்டிருக்கிறான். போதாக்குறைக்கு நாகமென்னும் பகையொன்றும் அர்ச்சுனனை எப்பொழுது கொல்லுவேனென்று கன்னனிடம் சரண்புகுந்து காத்துக்கொண்டிருக்கிறது. அருச்சுனனும் கன்னனை வீழ்த்துவனென்றே வாயார மனமாரப் பேசிக்கொண்டிருக்கிறான்.

பார்த்தனுக்குச் சாரதியாகிப் போரை நடத்த ஒப்புக்கொண்ட கண்ணபிரான், குந்திதேவியைக் கன்னனிடம் அனுப்பி, அவள் தான் கன்னனுக்குத் தாயென்பதை மெய்ப்

பிக்கச் செய்து, அவளால் நாகமாகிய அம்பை அருச்சுனன் மேல் இரண்டாவதுதரம் விடவேண்டாமென்று கேட்கச் செய்து, இரண்டாந்தரம் விடமாட்டேனென்ற உறுதி மொழியை முன்னரே பெறுவித்துக்கொண்டான். "நாகம் ஒருமுறைதானே வரப்போகின்றது. அருச்சுனன் தலைமேற் பொய்த் தலையைக் கட்டிச் சமாளித்துக்கொள்ளலாம்" என்ற துணிவு கண்ணபிரானுக்குண்டு. எனவே நாகத்தைப்பற்றிய கவலை எள்ளளவுங் கண்ணனுக்கில்லை.

இனிக் கன்னனின் குண்டலத்தையும் அவன் புண்ணியத்தையும் பறித்துக்கொள்வது எவ்வாறென்ற எண்ணம் கண்ணனுள்ளத்தை ஊசலாட்டுகின்றது. முக்கால வுணர்ச்சியும் சூழ்ச்சித் திறனும் பேராற்றலும் பேரறிவும் வாய்ந்தவனல்லவா கண்ணன்? அவனுக்கு இஃதொரு பொருட்டா? உடனே நினைக்கின்றான் இந்திரனை. ஆயிரங் கண்ணன் திடுமெனத் தோன்றுகிறான் :-

"வெற்றி விறல்விசயன் வெஞ்சமரில் வீழாமல்
அற்றவர்கட் கெல்லா மருநிதியம்—உற்றுதவும்
கன்னன் திறலழிக்கக் கண்ணு யிரமுடைய
மன்னன் தனையழைத்தான் மால்."

"வானவர் தலைவ! நின் மகனாகிய அருச்சுனன் பாரதப் போரில் வெற்றிபெற வேண்டுமென்று விரும்புவாயாயின், அந்தணர் வடிவங்கொண்டு அங்கர்கோன்பாலணுகி, அவனை அழகுசெய்துகொண்டிலங்கும் குண்டலத்தைப் பெற்றுவரக் கடவை. அதனைக் கவர்ந்தால் மட்டுமே கன்னன் கொல்லுதற்கெளியனாவன். அதனை அவன் அணிந்திருக்கும்வரையும் மண்ணகத்து மன்னரெல்லாம் ஒருங்கு திரண்டுவந்தாலும் அவன் கொல்லப்படமாட்டான்" என்றான் மால்,

"இந்திரனே உன்மகனை வெல்விப்பான் வேண்டுதியேல்
அந்தணனாய் அங்கர்கோன் பாலணுகி—முந்தவற்குச்
சுந்தரமாய்க் கொண்டிலங்குந் தொல்கவச குண்டலங்கள்
மந்தரத்தால் நீவேண்டி வா."

[வெல்விப்பான்—வெல்லும்படி. மந்தரம்—மெதுவான சொல்.]

"வெலற்கரிய அங்கர்கோன் வில்விசயன் தன்னாற்
கொலற்கெளியன் ஆம்பரிசு கூறின்—மலர்க்கமல
மண்டலத்தி லேமலரு மாக்கதிரோன் மாமகன்றன்
குண்டலத்தை வாங்காய் குறித்து"

[பரிசு—தன்மை, விதம்; கதிரோன் மகனாகிய கன்னன்.]

"மண்டலத்தின் மன்னரெல்லாம் வந்து மலைந்தாலும்
குண்டலமுண் டாகக் கொலப்படான் — விண்டலத்துள்
ஆதியாய்! நீயலையேல் ஆங்கதனை வாங்குதற்கு
நீதியாய்! போதுவாய் நின்று."

[மண் + தலம் = மண்டலம். விண் + தலம் = விண்டலம், வானுலகம். மலைந்தாலும் — போர்செய்தாலும். அலையேல் — கவலைப்படாதே. நீதியாய் — அரசமுறை யறிந்தவனே, போதுவாய் — போவாய்.]

அதுகேட்ட இந்திரன், "மிக்க புகழையுடைய பாண்டவர்கள், சூதிற்றோற்ற அந்நாளில் என்னை அழைத்தாயில்லை. இன்று அவர் படுந் துயரத்தை யான் பார்த்தற்கோ என்னை அழைத்தனை" என்று வருந்திக் கூறிப் பின் உடன்பட்டான்.

கண் மூடி விழிக்குமுன் இந்திரன் பார்த்தோர் இரங்குமாறு, தொந்தி சரிந்து முதுகு கூனித் தந்தமசைந்து இதழ் தொங்கி நரைத்துத் திரைத்த முதிய அந்தண வடிவங் கொள்கின்றான்; மெல்ல மெல்ல நடந்து அங்க நாட்டரசன் அரண்மனை வாயிலை அடைகின்றான். அம் முதியோனைக் கண்ட வாயிற் காவலர், கன்னனை யணுகி, வணங்கி நின்று, "யாரோ ஒரு முதியவன் கையிற் குடை பிடித்துத் தள்ளாடித் தள்ளாடி நடந்து நம் வாயிலை யடைந்தனன். வேதியன்போலக் காண்கின்றான்" என்றனர்.

"உள்ளே வர விடுமின்" என்றனன் கன்னன். வாயிலர் தள்ளாடு கிழவனை அழைத்துவந்து கன்னன் முன் விடுத்தனர். கன்னன், அந்தணர்க்குச் செய்யும் சிறப்பெல்லாம் அம் முதியோனுக்குச் செய்து, தனியிருந்து, மறைப்பொருள் கேட்டு உவந்து, "நீவிர் வேண்டி வந்த பொருள் யாது?" என வினவினான். அந்தணன் கன்னனை விளித்துக் கொடைச் சிறப்பு மிக்காய்! எதனைக் கேட்பினும் நீ இல்லையென்னாது கொடுப்பாய் என்று கூறும் இவ்வுலகம். அஃது உண்மைதானா என்பதை யறிய ஈண்டு வரலானேன்" என்றனன். அது கேட்டுக் கன்னன், "இருபிறப்பாளா! இன்றுதான் இம் மாற்றங் கூறக் கேட்டேன். நீ எதனை விரும்பினும் அதனை என்னுயிர் போவதாயினும் ஈந்தே விடுப்பன். விரும்பியதைப் பெற்றுய் என்றெண்ணக்கடவை" என்றான்.

"இன்றே இம்மாற்றம் உரைத்தாய் இருபிறப்பாய்!
இன்றே உயிர்தான் இறந்திடினும் — நன்றேநீ

ஏதேனும் வேண்டிற்றுப் பெற்றுய் எனவுரைத்தான்
மாதான மன்னன் மகிழ்ந்து.''

[மாற்றம்—சொல். இருபிறப்பாய்—தாய் வயிற்றிலிருந்து ஒரு பிறப்பும், பூணூல் அணிந்ததிலிருந்து ஒரு பிறப்புமாக இரு பிறப்புள்ள அந்தணனே வேண்டிற்று—விரும்பிய பொருளை. மா + தானம்=பெரியகொடை.]

அது கேட்ட இந்திரன், "புகழுடையாய்! என்னுள்ளக் கருத்தை ....இயம்புவன். அதற்கு ....உடன்பட்டாயாயின்... ...பெரும் புகழை ஈட்டியவனுவாய்" என்ருன். உடனே கன்னன், நீ விரும்பியதை யான் ஈயாது விடுவேனுயின்:—

"மன்றில் வலிந்தோனும் மாதவரைச் செற்ருேனும்
நன்றி மறந்தோனும் நானிலத்துள்—அன்றியுந்தான்
பெற்றவரைத் தானிகழும் பேதையும் என்றிவர்கள்
உற்றவிடம் எய்துவனுன் உற்று."

என்று வஞ்சினங் கூறினுன்.

[மன்று—வழக்கு மன்றம். வலிந்தோன்—நீதிகெட வலிமையாகப் பேசியவன். மாதவர்—முனிவர்; செற்ருேன்—அழித்தோன். நானிலம்—உலகம்; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலங்களால் ஆனது. உற்றவிடம்=போயடைந்த நரகம்.]

அதுகேட்ட இந்திரன், தான் கேட்பதைக் கன்னன் மருதளிப்பானென உறுதிகொண்டு, "நின் கவச குண்டலங்களை அளித்தி!" என்றனன்.

(அ) "வாணுள்தா என்ருலும் வேண்டின் மறுப்பனே?
பேணு மறைமுனியே பேசுங்கால்—நாணுது
கொண்டிடுதி என்ருன்; குறையிரந்து சென்ருர்க்கு
மொண்டிடுபொற் கையான் முயன்று."

(ஆ) "உய்ய உடன்பிறந்த குண்டலங்கள் மண்டலத்தார்
செய்தனவும் அல்ல; திருத்தேரா!—மெய்யே
மறுத்திட்டேன் என்று மயங்காதே; காதை
அறுத்திட்டுக் கொள்நீ அமர்ந்து"

என விளம்பினன்.

[வாழ் + நாள் = வாணுள் (வீரசோழியம்); வாணுள் ஈண்டு உயிர்மேற்று. பேணு—வேருென்றையும் விரும்பாத. உய்ய—பிழைத்திருக்கும்படி. திருத்தேரா—சிறந்த விமானத்தையுடையவனே. அமர்ந்து—விரும்பி.]

அது கேட்ட வானவர்கோன், கன்னனை யணுகி அவன் காதருகே கைநீட்டிக் குண்டலத்தைப் பிடுங்கக் கருதுமெல்லையில்,

"பார்த்தற்கா மாயன் பணியினுல் அப்பார்த்தன்
போர்த்தொழிலில் வெல்லும் பொருட்டாக—ஏற்கின்ருன்
இந்திரன்கா ணையா இவைகொடேல்."

என ஒரு வாக்கு வான் வழி எழுந்தது. எழுந்துமென்? உயிரையே கேட்பினும் உதவும் பான்மையனுன கன்னன் குண்டலங்களைக் கொடாது மறுப்பனே? விரைந்து தன் கையால் அறுத்தெடுத்து இந்திரன் கையிற் றந்தான். பெற்றுக்கொண்ட இந்திரன் கன்னன் கையிலே மிளிரும் சிகாமணியையும் (சிகாமணி—தலைமையான இரத்தினம்; மோதிரம்) பெற்றுக்கொள்ளக் கருதி,-

"கொற்றவனே நின்னுடைய கோலமணிக் குண்டலத்தால்
உற்றபயன் பெற்றேனுக் கொன்றுகுறை—இற்றயதுன்
சிந்தைமகிழ்ந் தன்புடனே செங்கைச் சிகாமணியைத்
தந்தருள்வாய் என்ருன் தளர்ந்து."

விரைந்து அதனையுமளித்தான் கன்னன். அதனைப்பெற்றதும் இந்திரன், தன்னுண்மைவடிவைக் காட்டி, "உன் ஆருயிராம் கவசகுண்டலமும் மணியும் மகிழ்ந்தளித்தனை. கைம்மாருக யானும் நினக் கொன்றளிக்க விரும்பினன். இஃது உற்றவிடத்துதவும் ஒளிநெடுவேல். இதனைப் பெற்றுக்கொள்ளக்கடவை. ஆயின் ஒன்று கேட்கின்றேன். பார்த்தனை இதனுற் கொல்லாதே. மற்றுக் கடோற்கசனென்னும் வீமன் மதலையைக் கொல்" என்று கூறித் தன் அரிய வேலைக் கன்னனுக் கீந்து வானுலகம் போயினன்.

14. ஆற்றுப்படை

ஆற்றுப்படையென்பது தமிழ் இலக்கியங்களிற்காணப் படும் ஒருவகைச் செய்யுள். இது ஆறு+படையெனப் பிரியும். ஆறு என்பது வழி; படையென்பது படுத்தல்; ஆகவே ஆற்றுப்படை யென்பதற்கு வழிகாட்டலென்பது பொருளாகும். வழிதெரியாது அவதியுறுகின்ற ஒருவனுக்கே வழிகாட்டல் அவசியமாகலின், ஆற்றுப்படைச் செய்யுளும் எங்கே போவதென்றறியாமல் நிற்கும் ஒருவனைப் பார்த்து எல்லாமறிந்த ஒருவன் எங்கே போகவேண்டுமெனச் சொல்லுதலாகும். பெரும்பாலும் நல்குரவினுல் வாடி எங்குசெல்வோம் என வருந்திநிற்கும் கூத்தரையும், பாணரையும், பொருநரையும், விறலியரையும் நல்குரவு நீங்கப்பெற்ற கூத்தர் முதலியோர் தாம் எங்குசென்று எவ்வாறு வறுமை நீங்கப்பெற்றுரென்பதையும், அங்கு செல்லற்குரிய வழிகளையும் கூறி அங்கு செல்கென வழிப்படுத்தல் இலக்கிய மரபு. உதாரணமாகப் பெரும்பாணுற்றுப்படையில்,

" தண்கடல் வரைப்பிற் தாங்குநர்ப் பெறுது
பொழிமழை பொழிந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!
பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக்
கருவி வானந் துளிசொரிந் தாங்கு
பழம்பசி கூர்ந்தவெம் இரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாப் பெருவள னெய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்டு
யாமவ ணின்றும் வருதும் "

என்று எதிர்ப்பட்ட பாணனுடைய வறுமையின் கொடுமையையும் தாம் பெற்ற பெருவளத்தின் சிறப்பையும் கூறுதல் காண்க.

இவ்வாறு செய்யுள் செய்தற்கு இலக்கணமுண்டோவென நாம் கருதுமிடத்துப் புறப்பொருள் இலக்கணத்தில் பாடாண்டிணையின் துறைகளில் ஆற்றுப்படையும் ஒன்றுயமைந்திருத்தலைக் காணலாம்: தொல்காப்பியப் புறத்திணையியலில்,

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் "

என்று கூறப்படுதலால், கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்பாரே ஆற்றுப்படுத்தற்குரியராவர் என்க. வறுமை உலகத்தில் எல்லார்க்கும் பொதுவாயதெனினும், இந் நால் வகையோரையும் ஆற்றுப்படுத்தலே இலக்கிய மரபு.

வறுமையென்பது கல்வியால் வறுமை, ஞானத்தால் வறுமை, இன்பத்தால் வறுமை, பொருளால் வறுமையெனப் பலவகைப்படும். பேராசிரியரும் " வறுமையென்பது தாம் விரும்பியது துய்க்கப்பெறாத பற்றுள்ளம் " என்று கூறினர். ஆகவே எத்தகையனுயினும் அவன் கொண்ட வறுமை தீரும்படி அதைத் தீர்க்கும் ஆற்றல் வாய்ந்த வள்ளலிடம் வழிப் படுத்தலே ஆற்றுப்படையின் முக்கிய நோக்கமாகும். இவ்வாறு செய்யப்பட்ட செய்யுள்களைப், பதிற்றுப்பத்து, புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய சங்கநூல்களிலே காணலாம்.

ஆற்றுப்படைச்செய்யுள் வள்ளலையும் வள்ளலிடம் செல்லும் வழியையும் சிறப்பிப்பதாகவே இருக்கும். நல்குரவு தீரப்பெற்ற பாணன் முதலியோர் அவ்வாறு வழியைச் சிறப்பித்துக் கூறுங்கால் ஐவகை நிலங்களையும் பாகுபடுத்தி ஒவ்வொரு நிலத்திலும் காணப்படும் சிறப்புக்களைக் கூறுதல் மரபு. அவ்வாறு கூறும்போதும் அவ்வந் நிலத்துக்குரிய பொருள்களால் சிறப்பித்துக் கூறல்வேண்டும். அவை அவ்வந் நிலத்துக்கு உரியவையாகையால் உரிப்பொருள் என வழங்கப்படும். இவ்வளவோடமையாது போகின்ற நெறியில்வரும் துன்பங்களும், அவற்றை எவ்வாறு நீக்கவேண்டுமென்றும், எங்கெங்கே தங்கிப் போதல் வேண்டுமென்றும் கூறப்படும். இறுதியில் வள்ளலுடைய ஊர்ச்சிறப்பு, அதனுடைய தோற்றம், அவனுடைய இல்லம் என்பனவும் சிறப்பித்துக் கூறப்படும். அத்துடன் அவ்வள்ளல் எவ்வாறு இரவலரை உபசரிக்கின்முன் ; நீவிர் அவனிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதும் கூறி ஆற்றுப்படைச் செய்யுள் முடிக்கப் படும்.

ஆற்றுப்படைச் செய்யுள்கள் இலக்கியங்களில் அதிகமிருப்பினும் பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படைச் செய்

யுள்களே பெரியனவாய்ச் சிறப்புடையனவாய்த் திகழ்கின்றன. பத்துப் பாட்டில் ஐந்து பாட்டு ஆற்றுப்படையாகச் சங்கநூல்களுக்கெல்லாம் சிறந்தவோரங்கமாய் விளங்குகின்றன. பத்துப்பாட்டின் இறுதிக்கண் அமைந்துள்ள 'மலைபடுகடா' மெனுஞ் செய்யுள் ஆற்றுப்படையெனும் பெயருடன் வழங்காவிடினும், உண்மையில் பரிசில்பெற விரும்பிய கூத்தன் ஒருவனைப் பரிசில்பெற்றானொருவன் 'வேள்நன்னன் சேய்நன்ன' னிடத்து ஆற்றுப்படுத்தியதாகவே கூறப்படுகின்றது. ஆகையால் இம் 'மலைபடுகடாம்' எனுஞ் செய்யுள் 'கூத்தராற்றுப்' படையெனவும் வழங்கப்படும்.

ஆற்றுப்படைச் செய்யுள்கள் யார் யாரை ஆற்றுப்படுக்கின்றனவோ, அவ்வாற்றுப்படுத்தப்படுவோர் பெயரால், கூத்தராற்றுப்படையெனவும், பாணராற்றுப்படையெனவும், பொருநராற்றுப்படையெனவும், கூத்தராற்றுப்படையெனவும் வழங்கப்படும். ஆனால் பத்துப்பாட்டின் முதற்கணுள்ள 'திருமுருகாற்றுப்படை' மட்டும் பாட்டுடைத் தலைவனாகிய முருகக்கடவுள் பெயரால் வழங்கப்படுகின்றது. இங்ஙனம் கடவுளிடத்தில் ஆற்றுப்படுத்தற்கு இலக்கணம் இல்லையாயினும், வறுமை பலவகைப்படுமாகையால், ஞானத்தால் வறுமையடைந்தா னொருவனை அஃது பெற்றா னொருபுலவன் ஆற்றுப்படுத்தியதாகக் கொள்ளல் பொருந்தும் அன்றியும்,

"இருள்கண் வானத் திமையோருழைப்
பெரும்புலவனை யாற்றுப் படுத்தன்று"

எனக் கூறப்படும் புறப்பொருள் வெண்பா மாலைப் புறனடைச் சூத்திரத்தாலும் கடவுளிடத்து ஆற்றுப்படுத்தலுமுண்டெனக் கொள்க. திருமுருகாற்றுப்படை மற்றைய ஆற்றுப்படைகளிலும் சிறந்ததாகத் தமிழ்மக்களாற் கொண்டாடப்படுகின்றது.

பொருநராற்றுப்படையும், சிறுபாணாற்றுப்படையும், பெரும்பாணாற்றுப்படையும், மலைபடுகடாமென வழங்கும் கூத்தராற்றுப்படையும் தனித்தனி வள்ளல்களைச் சிறப்பித்தற்காய்ப் பரிசில்பெற்றானொருவன் பெறக்கருதிய ஒருவனை ஆற்றுப்படுப்பதாகப் பாடப்பட்டது.

ஆற்றுப்படையென்னும் பழைய பிரபந்தம் தமிழ்நாட்டு மக்களின் கொடைத்திறனையும், வள்ளல்களாயினார் கூத்து

முதலிய கலைகளை எவ்வாறு ஆதரித்துப் பேணிவந்தனர் என்பதையும் நமக்குக் கரதலாமலகம்போல வெடுத்துக்காட்டுகின்றது. வறுமையால் வாடிய மேனியும், அழுக்கடைந்த ஆடையும் உடையராய கூத்தர், பாணர் முதலியோரை அன்பு செய்தற்கு வேண்டிய தோற்றப்பொலிவு எதுவும் இலராயினும் அவர்மாட்டுள்ள கலைச்சிறப்பு நோக்கி வள்ளல்கள் பெரிதும் உபசரித்து வந்தனர். கலை நாட்டின் செல்வம். பேரின்பத்துக்குச் சாதனமாய் இருப்பது. இதை உணர்ந்த நம்முன்னோர் கலை வல்லானுக்கு நிறையப் பொருள்கொடுத்து உபசரித்து வந்தனர்.

இங்ஙனம் ஆற்றுப்படுக்கப்படுவோரில் கூத்தரெனப்படுவோர் ஆடலினாலே மக்களை மகிழச்செய்வோர். அவர் உள்ளத்துத்தோன்றும் மெய்ப்பாடுகளைப் புறத்தே வெளிப்படுத்தி ஆடுவர். இவர்கள் ஆடும் கூத்துப் பலவகைப்படும். பாணரென்போர் பாடுபவர். இவர்கள் இசைப்பாணர், மண்டைப் பாணர், யாழ்ப்பாணர் எனப் பலவகைப்படுவர்; யாழ்ப்பாணர், சிறுபாணர், பெரும்பாணர் என இருவகைப்படுவர். சிறுபாணர் சிறு யாழையும், பெரும்பாணர் பேரியாழையும் இசைக் கருவியாகக்கொண்டு மக்களை மகிழ்விப்பர். பொருநரும் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர் என இருவகையினர். இவர்கள் விழா நடக்கும் இடங்களில் தமது திறமையைக் காட்டிப் பின்னும் விழா நடக்கும் இடங்கட்குச் செல்லும் இயல்புடையர். பொருநரென்பதற்கு மற்றொருவர் போல் வேடங்கொள்வோ ரென்பது பொருள். விறலியென்பாள் பாடும் பெண்; பெரும்பாலும் பதினாறுவயதுப் பெண்ணுக்கே விறலியென்னும் பெயர் வழங்கப்படும்.

ஆற்றுப்படைச் செய்யுள்கள் அவ்வக்காலத்து உரியனவன்றிப் பிற்காலத்தவர்களை ஆற்றுப்படுக்கக்கூடியதாயிருக்காது. ஆற்றுப்படுத்தற்குரிய வள்ளல் மறைந்தபின் அவ்வள்ளல்களுடைய கொடைச் சிறப்பை விளக்கும் சரித்திர சாதனமாக ஆற்றுப்படைச் செய்யுள் விளங்கும். இச் செய்யுள்களில் காணப்படும் இலக்கிய நயங்கருதி எக்காலத்தவரும் இவற்றைக் கற்றல் வேண்டும். திருமுருகாற்றுப்படை எக்காலத்தவரையும் ஆற்றுப்படுக்கும் இயல்புடையதாய் விளங்குகின்றது.

15. பெண்பாற் புலவர்கள்

செந்தமிழ்நாடு பண்டைக்காலத்தில் மற்றெந்த நாட்டைக்காட்டிலும் சீர்பெற்று விளங்கியதென்பதற்குச் சங்க கால இலக்கியங்களும் தொல்காப்பியமெனும் பழந் தமிழ் இலக்கணமுமே சான்று பகரும். கல்வி, செல்வம், வாணிபம், அரசியல்முறைகள், சமூகம் முதலான பல துறைகளிலும் தமிழ்மக்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர். இன்றைக்கு நாகரிக முன்னேற்றமடைந்துள்ள சாதியாரெல்லாம் வனம் வனாந்திரங்களில் திரிந்த காலமாகிய ஈராயிரம் யாண்டுகட்கு முன்னமேயே தமிழ்ப் பெண்மணிகளும் புலமை மிக்காராய்த் திகழ்ந்தனர். முன்னேற்றமடைந்த எந்தச் சாதியிலும் பெண்களுக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும் என்பது அறிஞர் கொள்கை. ஆயின் அச் சுதந்திரத்தினால் ஒரு சாகியத்தைக் கெடுக்க நினைக்காமல் வளர்க்க நினைத்தார்கள் அக்காலப் பெண்மணிகள். இக் காலப் பெண்மணிகள் பலர் அதற்கு நேர்விரோதமாகத் தாம் சுதந்திரம் பெற்றேமென்று தருக்கி தாம்பெற்ற குழந்தைகளையே தக்க பாதுகாப்பின்றி விட்டுவிட்டுப் பொதுசன சேவைசெய்ய முற்படுகின்றனர். இவர்கள் தங்களை விளம்பரப்படுத்துவதற்காக அவ்வாறு செய்கின்றனரல்லது சமூகத்துக்கு நன்மைசெய்வதற்காகச் சுதந்திரம் பெற்றார்கள் எனக் கொள்ளற்க.

சங்ககாலத்திலும் பிற்பட்டகாலத்திலும் கல்வி கற்றற்கு வேண்டிய சாதனங்கள் இக்காலத்தைப் போன்றிருந்ததன்று. மக்கள் தமக்கு வேண்டிய கல்வியைத் தாமே அரும் பாடு பட்டுப் பெறவேண்டியிருந்தது. இக்காலத்தில் சிறுவர்கள் கல்வி கற்கும்படி எல்லா ஊர்களிலும் அரசாட்சியாரே வித்தியாசாலைகளை அமைத்திருக்கின்றனர். படித்த ஒவ்வொருவருடைய வீட்டிலும் சிறந்த புத்தகங்கள் இருப்பதை நாம் காண்கின்றோம். முன்னர் ஒரு ஊரில் ஒருவர் இருவரிடத்திற்றான் சிறந்த நூல்கள் கிடைக்கக்கூடியதாகவிருக்கும். அவையும் எவ்வளவோ அரும்பாடுபட்டு ஓலையிலே எழுத்தாணிகொண்டு எழுதிப் பக்குவப்படுத்தப்பட்டதாயிருக்கும்.

அவ்வாறு கஷ்டங்கள் நிரம்பிய அக்காலத்தில் சிறந்த பெண்மணிகள் புலவர்களாய் விளங்கினர். அவர்கள் பாடிய செய்யுள்களெல்லாம் சங்கப் புலவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இன்றைக்கு இவ்வளவு வசதிகள் ஏற்பட்டும் எத்தனை பெண்மணிகள் புலமை உடையவர்களாய் இருக்கின்றார்கள் என்பதை நோக்குமிடத்து மிகவும் மனம் வருந்த வேண்டியிருக்கிறது. அப் பெண்மணிகள் கல்வி விஷயமாக ஆண்பாற் புலவர்களைக்கூடச் சில இடங்களில் மிக்க கஷ்டங்களுக் குள்ளாக்கினர்.

அவர்களுள்ளே சிறந்தவர்களாக ஔவையார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், மாறோக்கத்து நப்பசலையார், முடத்தாமக்கண்ணியார், பாரிமகளிர், கோப்பெரும்பெண்டு, நக்கண்ணையார், வெண்ணிக்குயத்தியார், வெறிபாடிய காமக் கண்ணியார், வெள்ளிவீதியார் என்போரைக் கூறலாம். ஆயின் இவர்களைப்பற்றிய பூரண வரலாறு நமக்குக் கிடைப்பதரிது. சங்க நூல்களிலிருந்து சில சில குறிப்புக்கள்மட்டுமே கிடைக்கக்கூடியதாயிருக்கின்றது. அக்குறிப்புக்களைக்கொண்டு அவர்களுடைய தகைமை, புலமை, நோக்கம் ஆதியன புலப்படும்.

ஔவையாரைப்பற்றி அறியாத தமிழ்மக்களிலர். அவ்வாறிருத்தற்கு அவருடைய புலமையே காரணம். இவர் பாடிய செய்யுள்கள், அகநானூற்றிலும், நற்றிணையிலும், குறுந்தொகையிலும், புறநானூற்றிலும் காணப்படுகின்றன. சிறந்த நீதிகளையும், தத்துவங்களையும் புலப்படுத்தக்கூடியனவாய், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்பனவற்றையும் இயற்றினர். சிலர் ஔவையார் இருவரெனவுங் கூறுவர். புறநானூற்றுச்செய்யுள்களில் இவரால் பாடப்பட்ட அரசர் பலர். அவர்களுள் அதியமான் நெடுமானஞ்சியை இவர் சிறப்பித்ததுபோல் வேறெவரையும் சிறப்பிக்கவில்லை. அதியமான் தனக்குக் கிடைத்த சாவா மருந்தாகிய கருநெல்லிக்கனியைத் தானுண்டு நெடுநாளிருத்தலால் யாதும் பயனில்லையெனக் கருதி, ஔவையாருக்கே கொடுத்தான் என்பதால் அவரிடத்தில் அவன் வைத்திருந்த பெருமதிப்பு விளங்குகின்றது. அத்தகைய செய்தி புறநானூற்றில் அவர் அவனைக் குறித்துப் பாடிய செய்யுளொன்றில்,

"நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீந் தனையே"

என்று கூறப்படும் அடிகளால் அறியக்கிடக்கின்றது.

அதியமான் அக்கனியின் பெருமையைத் தன்னகத் தடக்கிக்கொண்டு சாதாரண கனிபோலக் கொடுத்தான் என்பதால் அவன் அவரை எவ்வாறு மதித்தான் என்பது புலனாகும். அவரும் அதியமானைப் பெருமைப்படுத்துவதில் பின்னிற்பதில்லை. அதியமானுடைய பகைவர்களை முன்னிலைப் படுத்தி,

"களம்புக லோம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து
எம்முளு முளனொரு பொருநன்; வைகல்
எண்டேர்ச் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே."

என்று கூறினார். அதில் பகைவர்களே ஒருநாளைக்கு எட்டுத் தேர் செய்யக்கூடிய தச்சன் ஒரு திங்கள் காலத்தில் ஒரு தேர்க்காலைச் செய்யின் எவ்வளவு உறுதியும், அழகும் உடைய தாகுமோ அத்தகையவன் நமது தலைவன். ஆகலின் அவனை எதிர்த்துக் களத்துக்கு வராதீர்கள், என்றார். இவர் திருவள்ளுவருடன் பிறந்தவர் என்று வரலாறுகள் கூறும்.

காக்கைபாடினியார் நச்செள்ளையார் பதிற்றுப்பத்து என்னும் தொகைநூலில் ஆறும் பத்தைப் பாடியிருக்கின்றார். இந்தப் பத்துச் செய்யுள்களினாலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் சேர அரசன் சிறப்பிக்கப்படுகிறான். அவ்வாறு அவனைச் சிறப்பித்துப் பாடியதற்கு அவன் அவருக்கு ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பரிசு கொடுத்தானென்று கூறப்படுகின்றது. இவருடைய இயற்பெயர் நச்செள்ளையாரெனவும், "விருந்து வரக் கரைந்த காக்கையதுபலியே" என்று குறுந்தொகைப் பாட்டொன்றில் காகங் கரைந்ததனைச் சிறப்பித்துப் பாடியிருந்தலால் காக்கைபாடினியாரென்னுஞ் சிறப்புப் பெயரைப் பெற்றாரென்றும் கூறுவர்.

மாறோக்கத்து நப்பசலையார் பாடிய செய்யுள்கள் புறநானூற்றிலும், நற்றிணையிலும் காணப்படுகின்றன. மாறோக்

கம் என்பது இவர் பிறந்த ஊர்ப் பெயரெனவும், நற்றிணைப் பாட்டொன்றில் கணவரைப் பிரிந்திருக்கும் மகளிரிடத்தே தோன்றும் நிற வேறுபாடாகிய பசலைநோயைக் குறித்து,

"மணிமிடை பொன்னின் மாமை சாயவென்
அணிநலஞ் சிதைக்குமார் பசலை"

என்று பசலையைச் சிறப்பித்துக் கூறலால் 'பசலையார்' எனவும் பெயர் பெற்றாரெனக் கூறுவர். புறநானூற்றுச் செய்யுள்களில் அரசரைமட்டுமன்றிக் கபிலர் என்னும் புலவரையும் சிறப்பித்துப் பாடியிருக்கின்றார்.

முடத்தாமக்கண்ணியார் என்பவர் பத்துப்பாட்டில் ஒன்றாகிய பொருநராற்றுப்படையை இயற்றினர். அப்பாட்டில் சோழன்கரிகால்வளவன் பாட்டுடைத் தலைவனாகச் சிறப்பிக்கப்படுகின்றான். இவரைப்பற்றி வேறு குறிப்புகள் கிடைக்கவில்லை.

பாரியென்னும் வள்ளலுடைய இரண்டு புத்திரிகளும் பாரிமகளிர் என வழங்கப்படுவர். பாரி என்பான் பகைவருடைய சூதினாற் கொல்லப்பட்டபின், இப் பெண்களிருவரும் கபிலருடைய பாதுகாப்பிலிருந்தனர். கபிலரிடத்திலேதான் இப்பெண்மணிகள் கற்கவேண்டியவை எல்லாவற்றையும் கற்றனர். இவ்விருவருக்கும் கபிலரே மணஞ்செய்து கொடுத்தாரென்று கூறப்படுகின்றது. அவர்கள் பெரியவள்ளலுடைய பிள்ளைகளாயிருந்தும் கற்கவேண்டியவற்றை முறையாய்க் கற்றனர். தந்தையையும், தம் நாட்டையும் நினைத்து,

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்
எந்தையும் உடையேம் எங்குன்றும் பிறர்கொள்ளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றுங் கொண்டார் யாம் எந்தையுமிலமே"

என்று கூறுஞ் செய்யுள், எத்தகைய உருக்கம் நிறைந்ததாக விருக்கின்றது.

"அக்காலத்தில் வறிய குடும்பத்திற் பிறந்து சீவியத்தை நடத்துவதற்கு வகையறியாமல் பாட்டுப் பாடிப் பிழைத்தனர். புலவர்களுக்குள்ளே தரித்திரம் தாண்டவமாடியது" என்று பலர் கருதுகின்றனர்.

பூதப்பாண்டியன் என்னும் அரசனுடைய மனைவி அரசியாய் வேண்டிய செல்வச் சிறப்போடு புலமைமிக்காளாயும்

இருந்தாள். இதுபோலப் பல அரசர்கள் புலவர்களாய் இருந் தமையும் சங்க நூல்களால் அறியக்கிடக்கின்றது. கோப்பெ ரும் பெண்டு என்னும் அவ்வரசி தன் கணவன் இறந்தபோது தானும் உடன்கட்டையேறத் துணிந்தனள். அவ்வாறு செய் தலை, வேண்டாமென்று விலக்கிய பெரியோர்களைப் பார்த்துக் கோப்பெரும்பெண்டு என்னும் அவ்வரசி,

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே!
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிபெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உய்வற் பெண்டிரே மல்லேம், மாதோ!
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல, எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே"

என்று கூறினள். இச்செய்யுளில் காணப்படும் உணர்ச்சியே முதலில் கவனிக்கத்தக்கது. இத்தகைய புலமையும் தெய்வத் தன்மையும் வாய்ந்த பெண்மணிகளை உடையதாயிருந்தது தமிழ்நாடு.

உரைக் குறிப்புகள்

1. வான்கண் விழியா... .

வான்கண் - சூரியன்; விழியா - விளங்கிய; யாமம் - பொழுது; மணிவண்ணன் - திருமால்; கோட்டம் - கோயில்; இந்திர விகாரம் ஏழு - இந்திரனால் ஆக்கப்பட்ட அரங்கு ஏழு; சிலாதலம் - கோயில்; உலகவிடைகழி - உலகத்தாரனைவரும் போதற்குரிய வாயில்; இலவந்திகை - நீராவி; எயில் - சுற்றுமதில்; கடைமுகம் - கரைவாயில்; வடபெருங்கோடு - வடகரை; பொழில் - சோலை; காவதம் - கூப்பீடு தொலை; கவுந்திப் பள்ளி - கவுந்தியடிகள் துயில் பொருந்துமிடம்; பொதும்பர் - சோலை; இறும் - அறுதல் (முரிதல்); கொடிநுசுப்பு - கொடிபோலும் இடை; கூந்தல் - அன்மொழித்தொகை; நறும் - வாசனை; உயிர்த்து - பெருமூச்சுவிட்டு; முதிராக் கிளவி - மழலைமொழி; எயிறு - பல்லு; மூதூர் - பழமையான ஊர்.

2. நீண்டமுடி......

நீண்டமுடி வேந்தன் என்றது - தசரதனை; நிறைசெல்வம் பூண்டு தனைநீங்கி - பட்டாபிஷேகம் (இராமன்) பெறவிருந்தமையை விட்டு; நெறி - (காட்டு) வழி; ஆரை - மதில்; இசைத்தது - சொன்னது.

3. வறுமொழியாளரொடு......

வறுமொழி - பயனில் சொல்; வம்பப் பரத்தர் - புதிய காம நுகர்ச்சியை விரும்புவோர்; குறுமொழிக் கோட்டி - இழிந்த சொல்லைப் பேசுவோர்; நெடுநகை - பெரியநகை; பொச்சாப்பு - மறதி; நச்சு - விருப்பம்; பொருள் உரையாளர் - மெய்யுரை பகரும் சான்றோர்; சிறுமுதுக் குறைவி - சிறிய வயதில் பெரிய அறிவினையுடையாள் (கண்ணகி); சிறுமை - இழிவு; வழு - குற்றம்; மாநகர் மருங்கு - நமது நகரின் பக்கம்; ஈண்டு - இங்கு (மதுரை).

4. போருழந்து......

உழந்து - செய்து; எடுத்த - பெற்ற; எயில் - மதில்; வாரல் - வராதே; மறித்து - தடுத்து.

5. மையறு மலர்......

மையறு - குற்றமற்ற; மலர் - செந்தாமரைப்பூ; யான் (மிதிலை) செய்யவள் - இலக்குமி; கடி - காவல்; கமலச் செங்கண் ஐயன் என்றது இராமனை; ஒல்லை - விரைவு.

6. சடையினர்......

உடை - மரவுரி; பீலி - மயிற்குஞ்சம்; நோன்பு - விரதம்; பாணிக்கை; இயம் - வாத்தியம்; துறைபோகிய - நன்குய் அறிந்த; விச்சைக் கோலம் - விரும்பிய வேடம்; வேண்டுவயின் - விரும்பிய இடத்து.

7. **மீனாய் .....**

வேலை - சமுத்திரம்; ஊன் - இறைச்சி; ஆர் - நிறைவு; மறையவர் - பிராமணர்; மானார்கண் - மான்போன்ற கண்; மடவார் - பெண்கள்; குழல் - கூந்தல்; வகிர்தல் - பிரித்தல்; சரண் - அடைக்கலம்; அரி - விஷ்ணு.

8. **தந்தாரமுமுறு......**

தாரம் - மனைவி; கிளை - சுற்றம்; நுமதமர் - உமது உறவினர்; மந்தாரம் - ஒருவகை மரம்; மருள் - மயக்கம்; எயிறு - பல்; இறுவித்தார் - முறித்தார்; எரி - நெருப்பு; குஞ்சி - மயிர்.

2 - ம் பாடம்

1. **எவ்வகை உயிர்களும்......**

உவமம் காட்டி - ஒப்புக் காட்டி; சுதை - சுண்ணச் சாந்து; வித்தகர் - சிற்பாசாரிகள்; ஓவியம் - சிற்பம்.

2. **எவ்வகைச் செய்தியும்.....**

எவ்வகை நுண்ணிதின் உணர்ந்த செய்தியும் - பலவகையான நுண்ணிய செயல்களையும்; நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைஞர் - கூரிய அறிவினையுடைய சித்திரக்காரர்; வட்டிகை - எழுதுகோல்; துகில் - சீலை.

3. **கண்டுகேட்டு......**

உயிர்த்து - மோந்து; ஐம்புலன் - ஐம்புல இன்பம்; ஒண்தொடி - அன்மொழித் தொகை (பெண்).

5. **வினைபயன்......**

உவமத் தோற்றம் - உவமப் பிறப்பிடம்

6. **வீங்குநீருவி......**

வீங்கு - அதிகரித்த; மிசை - மேல்; மருங்கு - பக்கம்; தானம் - இடம்; மின்னுக்கோடி - மின்னலாகிய புதுப்புடவையுடுத்து; வில் - இந்திரவில்; அணங்கு - வருத்துகின்ற; ஆழி - சக்கரம்; ஆரம் - முத்துமாலை; நெடியோன் - திருமால்; கவற்ற - கவலையெய்த.

7. **குணதிசை.....**

குணதிசை - கிழக்குப்பக்கம்; நாள்முதிர்மதியம் – பூரணசந்திரன்; குடதிசை - மேற்குப்பக்கம்; கதிர் - சூரியன்; தோடு - காதணி; எள்ளாறு - இகழ்ச்சியற்ற; பெய்தல் - அணிதல்.

8. **உருவுகொண்ட .....**

உருவுகொண்டமின் - இல்பொருளுவமம் (உருவம் பெற்ற மின்னல்); வில் திருவிட்டு - இந்திரவில்லைப்போல ஒளிவிட்டு; திகழ்தரு மேனியள் - அழகு விளங்கும் உடம்பையுடையவள்.

9. **மின்னுக்கொடி......**

விசும்பு - ஆகாயம்.

10. கோலநெடுங்கண்....

கோலம் - அழகு; பீலி - மயிற்பீலி; மஞ்ஞை - மயில்; புல்லி - சேர்ந்து; ஆலி - சந்தோஷம்; வண்ணம் - இயல்பு, அழகு.

11. தாய்தன்......

குறங்கு - தொடை; எறிதல் - அசைத்தல்; அமளி - படுக்கை; துஞ்சல் - துயில்தல்; குழவி - குழந்தை; தோடு - இதழ்; கமலம் - தாமரை; பள்ளி - படுக்கை.

[அன்னக்குழவி கமலப்பள்ளியில் திரையாகிய தாய் தாலாட்டத் துயிலுமென்றவாறும்.]

12. திண்கதிர்......

கதிர் - ஒளி; மதாணி - பதக்கம் (ஆபரணம்); மாக்கள் - மக்கள்; ஓம்புதல் - பாதுகாத்தல்; தழீஇ - தழுவி; புணர்ந்து - சேர்ந்து; முயங்கி - அணைத்து; தாது - மகரந்தம்; போது - புஷ்பம்; காமர் - அழகு; கவின் - அழகு; பேரிளம் பெண்டிர் - நாற்பது வயதுப் பெண்.

13. திரண்டெழு.....

மழைமுகில்வண்ணன் என்றது கண்ணனை; வண்ணம் - நிறம்; [தாமரைப் பூவைச் சூழ்ந்த கருவண்டுகள் போல முகத்தைக் கருமயிர் சூழ்ந்துள்ளது என்பதாம்.] மேய்கை - மேய்தல்; துளுங்கா - அசையாது; புடைபெயரா - நிலைபெயராது.

14. மார்பார......

மதுரம் - இனிமை; மாலை - பாடற்றொகுதி; தாள் - பாதம்; உழவாரம் - ஓர் ஆயுதம்; படை - ஆயுதம்; திருவீதிப்பணி - திருவீதியைப் புனிதமாக்கல்; பரவி - புகழ்ந்து.

15. ஞானத்தின்......

மறை - வேதம்; தனி - ஒப்பற்ற; மிசை - மேல்; மதிக்கொழுந்து - இளஞ் சந்திரன்; தேன் நக்க - தேன் சொரிகின்ற; செஞ்சடையார் - சிவபிரான்; சீர் தொடுக்கும் - சிறப்பைக் கூறும்; கானம் - இசை; எழு பிறப்பு - இசை பிறக்கும் ஏழு இடம்.

4 - ம் பாடம்

1. கண்ணியர் தாரர்......

கண்ணியர் - தலைமாலையுடையார்; தார் - மாலை; [இவற்றையணிவார் ஆடவர்.] கோதை - மாலை; ஈகை - தானம்; பயன் கொள்ளல் - போகம் நுகர்தல்; ஆடல் - புனலாடல்; நாளுறை -

கையுறை [உபகாரப் பொருள்]; சாந்து - சந்தனம்; புகை - ஈரம் புலர்த்தும் புகை; அவி - உணவு; புலராமை - இடையறுதிருத்தல்; வானம் மறுஅற்க - மழை மறுதிருப்பதாக; நீத்தம் - வெள்ளம்; அறுஅற்க - வற்றுதொழிக.

நீராடச் சென்ற மைந்தரும் மகளிரும் இன்பம் பெறவேண்டிப் பொருள்களைத் தானம் செய்து நீராடுதலால் அவர் கையுறையாகிய பொன்மீன் முதலியனவும் சந்தனமும் மாலையும் ஈரம் உலர்த்தும் புகையும் ஆற்றுக்கு இடும் உணவுப் பொருளும் குறைவுபடாது மழையும் பெய்வதாக; வெள்ளமும் வற்றுதிருப்பதாக என்றவாறு.

2. நத்தொடு......

நத்து - சங்கு; நள்ளி - நண்டு; இறவு - இறு; வாளை - மீன் [பொன்னாற் செய்யப்பட்டவை]; வித்தி - நீரில் இட்டு.

3. நெறிநீரருவி......

அருவி அசும்பு உறு செல்வம் - நீரருவி இடையறாது ஒழுகும் செல்வம்; பரிய - வருந்த; வானம் வறப்பினும் - மழை பெய்யாது விடினும்; மன்னுக - நிலைபெறுவதாக.

[திருப்பரங்குன்றமே மண்வருந்த மழை பொழியா தொழியினும் நீரருவி இடையறாது ஒழுகும் நீர்ச்செல்வம் உனக்கு நிலை பெறுவதாக என்றவாறு.]

4. [7]இரவு [6]இருள் [8]பகலாக [3]இடம் [4]அரிது [2]செலவு [5]என்னாது
[1]வலன் இரங்குமுரசின் தென்னவர் உள்ளிய
நிலன்உற நிமிர்தானை நெடுநிரை நிவப்புஅன்ன
[9]பெயலால் பொலிந்து பெரும்புனல் பலநந்த
நலன்நந்த நாடு அணிநந்தப் புலன்நந்த.

[வெற்றியுண்டாக ஒலிக்கும் முரசினையுடைய பாண்டியர் தாம் வெற்றிகொள்ள விரும்பிய (உள்ளிய - விரும்பிய) நாட்டை (=நிலன்) அடையுமாறு முற்படும் அவரது சேனையின் நீண்ட நிரையின் (=நிவப்பு) நிமிர்ச்சியைப்போல வையை ஆறானது தான் செல்லுமிடம் அரிதென்று எண்ணாது இருளையுடைய இரவும் பகல்போல எண்ணி மழையால் பொலிந்து மற்றைய இடங்களிலுள்ள பெரும்புனல் (=நீர்) களும் (பலநந்த=) சேர்தலால் உயிர்களுக்கு (நலன்=) நன்மைமிக நாடு அழகுபெற; (புலன்=புலம்) வன்புலங்களும் விளைய].

5. மாசில் பனுவல்......

மாசு - குற்றம்; பனுவல் - நூல்; கவிதை - செய்யுள்.

[புலவர் பாடிய செய்யுள்கள் பொய்யாகாமல் நாட்டுமாறு எங்கும் பரந்தது.]

6. வேய்பயில் சோலை......

மூங்கில்கள் (=வேய்) பொருந்திய மலைச்சாரலிலே மலர்களை அருவி கொண்டுவந்து (தூர்த்தர =) சொரிய அவற்றைப் பாய்கின்ற திரை தள்ளிக்கொண்டுவருதலால் அத்துறையை, பூக்களை ஆராய்ந்து பறிக்கும் கோலினையுடைய வலிய குடிகள் (=கோல்வயவர்) கொண்டுவந்துகுவித்த பூமண்டபம் (=துறை) என்கோ? மலராகிய போர்வையினையும் முத்துக்கள் தாழ்ந்த மார்பினையும் திரையையும் நுரையையும் குமிழியையும் இனிய மணம் பொருந்திய சந்தனத்தையுமுடைய வையையாகிய பெண்ணினது அல்குல்தானை என்று சொல்லட்டுமா? கள்ளை உட்கொள்ளும் நிலமகள் (=படி) மிடறு என்கோ?

7. விருப்பொன்று பட்டவர்......

[1]விருப்பு ஒன்றுபட்டவர் உளம்நிறை உடைத்துஎன
[3]வரைச்சிறை உடைத்தது [2]வையை; [4]வையைத்
திரைச்சிறை [6]உடைத்தன்று [5]கரைச்சிறை; [7]அறைகெனும்
உரைச்சிறைப் பறையெழ ஊர்ஒலித் தன்று.

உடைத்தன்று; ஒலித்தன்று என்பவற்றில் 'அன்' சாரியை; [உடைத்தது; ஒலித்தது என்பது கருத்து.] அன்பு ஒத்த அவருடைய மனம் காவல் (=மனத்தை கட்டுப்படுத்தல்) ஆகிய வெள்ளத்தை உடைத்தாற்போல வையைநதி மலையைஒத்த அணைகளை முறித்தது. முறிக்க, வையையின் திரையாகிய சிறகு கரையாகிய காவலை உடைத்தது. (சிறை=அணை; காவல்) அதனை அடைக்க ஆள் வருதற்கு பறை அடிக்க எனும் கரை காப்பாருடைய ஒலியுடன் பறையொலியும் எழ அதனைக் கேட்டு ஊர் எழுந்தது.

8. திண்டேர்ப் புரவி......

[தேரிற் பூட்டும் குதிரைகளை வண்டிகளிற் பூட்டி அதில் ஏறவும்; எருத்துவண்டி ஏறுவார் தேரில் ஏறவும், குதிரையை அலங்கரிக்கும் ஆபரணங்களால் யானையை அலங்கரிக்கவும், யானையை அலங்காரம் செய்யாது நடத்தவும், பெண்கள் அணியும் மாலையை ஆண்கள் அணியவும், ஆண்கள் அணியும் மாலையை பெண்கள் அணியவும் முன்னே செல்ல வேண்டுமென்னும் விருப்பத்தால் தம் உடையை முறைமாறி அணியவும் இவ்வாறாய் உயர்ந்த கரையிடத்தையுடைய புனலை அடைந்து;]

புரவி - குதிரை ; பாண்டி - எருது ; மா - குதிரை ; பண்ணுந - அலங்கரிப்பவற்றால் ; மதமா - யானை ; கயமா - யானை ; எருத்தம் - திடர் ; புலல் - நீர்.

9. முதியர் இளையர்......

[4]முதியர் [2]இளையர் [1]முகைப்பரு வத்தர்
வதிமண வம்புஅலர் வாய்அவிழ்ந் தன்னோர்
[5]இருதிற மாந்தரும் இன்னினி யோரும்
[3]விரவு நரையோரும் வெறுநரை யோரும்
[6]பதிவத மாதர் பரத்தையர் பாங்கர்.

முகைபோலும் பருவத்தினரும் மணம் பொருந்திய புதிய பூ கட்டவிழ்ந்தா லொத்த பருவத்தினரும் ஆகிய இளையவரும், இடையிடையே நரை கலந்தோரும் முழுவதும் நரையுடையவரும் ஆகிய முதியவர்களும் என்ற இரண்டு வகையினராய மக்களும் அவர்களுக்கு இனியவராயவர்களும் கற்புடை மகளிர் பரத்தையர் எனப்பட்ட மகளிரும் இவர்களுக்குப் பாங்காயினரும்.

10. வெள்வாள் விதிப்போர்......

கிடைச்சியாற் செய்யப்பட்ட வாள், வேல் முதலியவற்றை யுடையோராய் போரிடுவோரும், மைந்தர் தேருக்கு மைந்தரும் மகளிர் தேருக்கும் மகளிரும் பாகராய்ச் செலுத்துவோரும், அழகிய குதிரையினையும் பொன் ஆபரணங்களையுடைய யானையையும் வெள்ளநீருள் ஊர்ந்து உழக்குவோருமாய் மாலையை அணிந்த கோதையர் தம் கேளி (=உறவினர்) ருடன் மனமகிழ்ந்தாடும் தோற்றம் போர்க்களம் போலக் காணப்படும்.

11. இலம்படு புலவர்......

வறுமை (=இலம்பாடு) உடைய புலவர்களது கை நிறையும் படி பொன்னைச் சொரிகின்ற பாண்டியனைப்போல வையைநதி நீரை வயல் (=செய்) களிற் பரப்பிப் பொன்னைப் போன்ற பயிர்களை உண்டாக்கும் தொழில் குறையாத தொழிக.

12. ஆடுவார்......

வையையே! நின்னிடத்துப் படிந்து நீராடுவாரது மனத்தில் அலர்ந்து பொருந்திய காமமானது வாடாதொழிக.

13. இன்பமும்......

வையையே! நின்னால் ஆரவாரித்தலையுடைய பழைய ஊரில் வாழ்பவர்க்கு இன்பமும் அழகும் நன்கு பல உளவாயின ; அதனால் இவ்வுலகு அகன்ற இடத்தையுடையதாயினும் நின் புகழை அடக்கமாட்டாது.

5-ம் பாடம்

1. **சுடச்சுட......**

சுட - சுடுதல்; வருந்துதல்.

2. **தெள்ளுதமிழ்......**

கலை - கலைக்ஞானம்; ஞானம் - அறிவு; கொள்ளை - செல்வம்; சுன்னுகம்- ஓர்ஊர்ப்பெயர்; வள்ளல் - கொடையாளி; வெள் அறிவு - அறிவின்மை; முடை நாற்றம் - இழிந்த வாசனை; வீவித்தான் - அழித்தான்; விரை - வாசனை; மிலேவன் - அணிவேன் (சூடுவேன்.)

3. **நீடிய சீர்பெறு......**

புவி - பூமி; கூழ் - பயிர்; வாரி - கடல்.

7-ம் பாடம்

1. **ஏனது சுவைப்பினும்.....**

புரையும் - போலும்.

2. **முளிதயிர்......**

முளி - கட்டி; காந்தள் - ஒரு பூ; கலிங்கம் - சீலை; கழாஅது - கழுவாது; உண்கண் - மையுண்ட கண்; குய்ப்புகை - தாளிதப் புகை; துழந்து - துழாவி; பாகர் - பாகு; நுதல் - நெற்றி.

8-ம் பாடம்

1. **பாடலோர்த்தும்......**

ஓர்த்து - அநுபவித்து; நயந்து - விரும்பி.

2. **குழல்வழி......**

வழி - தொடர்ந்து.

3. **ஒரு திறம்......**

திறம் - புறம் (பக்கம்); பாணர் - பாடகர்; யாணர் - புதுமை; இமிர்தல் - ஒலித்தல்; கண் - துவாரம்; கரை - ஒலி; பண் - இசை; தும்பி - வண்டு; மண்ணுதல் - மார்ச்சனை; முழவு - மத்தளம்; அண்ணல் - பெருமை; அருவி - சிற்ருறு; விறலியர் - பாடியாடும் நாடக மகளிர்; ஒல்குபு - தளர்ந்து; நுடங்க - அசைய; வாடை - காற்று; உளர்தல் - அசைதல்; பாடினி - பாடும் பெண்; முரல்தல் - ஒலித்தல்; பாலையங்குரல் - பாலையிசை; அரிகுரல் - கரகரத்தல்; மாறு-எதிர் (=பகை); அடுதல் - கொல்லுதல்; குன்றம் - மலை.

4. இளிஇடபம்......

இசை	இலக்கினம்
இளி	இடபம்
விளரி	கற்கடகம்
தாரம்	சிங்கம்
குரல்	தராசு (கோல்)
துத்தம்	தனுசு
கிளை	கும்பம்
உழை	மீனம்.

5. குழல்வழி......

வழி - பின்பற்றி ; தண்ணுமை - உடுக்கை ; முழவு - மத்தளம் ; மேளம்.

10-ம் பாடம்

1. முந்நீர்......

முந்நீர் - கடல் ; மூவா - முதிராத ; கடம்பு - காவல் மரம் ; வஞ்சி - சேரநகரம்.

2. வலம்படு......

வலம்படு - வெற்றியாக முழங்குகின்ற ; முரசு - வாத்தியம் ; இமயம் - இமயமலை ; மருள - மயங்க ; வில் - விற்குறி.

3. சால்பெருந் தானை......

சால் - மிக்க ; தானை - சேனை ; மால் - மயக்கம் ; கண் - இடம் ; ஒலிக்குமிடம்.

4. பலர் மொசிந்து......

மொசிந்து - வருந்தி ; ஓம்பிய - பாதுகாத்த ; கடி - காவல் ; முதல் - அடி ; துமிய - அழிய ; ஏய் - ஏவி ; பணை - வாத்தியக் கருவி ; நறவு - கள் ; நாரரி – நாரால் (பன்னாடையால்) அரிக்கப் படுகின்ற.

5. இடங்கவர்......

பனிப்ப - நடுங்க.

6. துளங்கு பிசிர்......

துளங்கல் – அசைதல் ; பிசிர் - துளி ; மா - பெரிய ; கடம்ப மரத்தை வெட்டி அதைக்கொண்டு செய்த முழவு (மத்தளம்). பணை - மத்தளம்.

7. புறத்துறை ...

புறத்துறை - புறத்தேயுள்ள இடம்; மருங்கு - பக்கம்; அறம் - தருமம்; மறம் - வலி; தானை - சேனை; பிறக்கோட்டி - பிற்படச் செய்து.

[மற்றையோருடைய நாட்டினிடத்துத் தருமம் பொருந்திய வலிமையுடைய செயல்களை முடித்த வாள் படையுடைய சேனையுடன் சென்று கடலைக் கடந்து கங்கையாற்றின் கரையடைந்த செங்குட்டுவன்.]

8. கொடும்போர் கடந்து......

கொடிய போரை வென்று (கடந்து) நெடிய கடலைக் கடந்து தன்னிடம் கோபித்து வந்த ஆரிய மன்னரைக் கடிய வேகம் பொருந்திய நீரையுடைய கங்கை என்னும் பெரிய யாற்றின் கரையில் வென்றோனே !

9. படைநிலா விலங்கும்......

விலங்குதல் - குறுக்கிடுதல்; மருள் - மயங்குதல்; (ஒப்புமை பற்றி) தானை - சேனை; தெரியல் - மாலை; மட்டு - இதழ்; மறம் - வலி; முரண் - பகை; செரு - போர்; முன்பு - வலிமை; முந்நீர் - கடல், மூன்று + நீர் = முந்நீர்; [ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர்] பௌவம் - கடல்; நீங்க ஓட்டிய - பிறக்கோட்டிய.

[கடல்போன்ற சேனையையுடைய இதழ்கள் விரிந்த மாலையையுடைய வலிய போரில்வல்ல செங்குட்டுவன் சண்டை செய்வதற்குப் பகைவரைப் பெறுது மாறுபடுகின்ற கோபம் அதிகரித்து போர் செய்யும் வலியுடன் கடலிற் சென்று திரையையுடைய அக்கடலைப் பிறக்கோட்டிய.]

10. கோடு நரல்......

கோடு - வளைந்து; நரல் - ஒலிக்கின்ற; உடை திரை - உடைகின்ற திரை; பரப்பு - கடல் பரப்பு; கடல் ஓட்டிய - கடல்பிறக் கோட்டிய.

வளைந்த திரைகளையுடைய கடலானது கலங்கும்படி வேலை எறிந்து உடைந்த திரையையுடைய கடலைப் பிறக்கோட்டிய புகழை யுடைய செங்குட்டுவன்.

11. கெடலரும் பல்புகழ்......

கெடாத அருமையான பெரிய புகழை நிறுத்திக் கடலுட் புகுந்து அதனொடு மாறுபட்ட, குளிர்ந்த கடற்றுறைப் பரதவனே !

12. சினமிகுதானை......

தானை - சேனை ; வானவன் - சேரன் ; குடகடல் - மேற்குக் கடல் ; பொலந்தரு - பொன்மயமான ; நாவாய் - தோணி. ஓட்டிய – செலுத்திய ; கலம் - தோணி, கப்பல் ; செல்கலாது - செல்லாது.

சினம் பொருந்திய சேனையையுடைய சேரன் மேற்குக் கடலில் பொன்மயமான தோணியைச் செலுத்திய வழியிற் பிறனொருவனது தோணி செல்லாது.

13. வெள்ளிப் பனிமலை......

உலவு - உலாவுதல்.

12-ம் பாடம்

1. பொன்சேர்......

கிண்கிணி - காலணி ; மேகலை - மேகலாபரணம் ; கொடி - பூங்கொடி ; கோலம் - அழகு செய்தல் ; எழில் - அழகு ; சதம் - நூறு ; சேவிக்க - தொழ ; மின் அரசு - மின்னலரசு.

2. செந்நெருப்பு......

பார் - பூமி.

அப்பாலைவனத்து நிலப்பரப்பு சிவந்த நெருப்பினைத் தகடாக அடித்து நிலத்தைச் செய்தது போலும். அவ்விடத்திலுள்ள புரு அந்த நெருப்பினுள் புகை திரண்டதனை ஒக்குமன்றி வேறெதனையும் ஒவ்வாது.

3. தண்டலை மயில்களாட (மருதநில வர்ணனை)......

தண்டலை - சோலை ; தாமரை விளக்கம் - தாமரையாகியவிளக்கு ; அம் - சாரியை ; கொண்டல் மேகம் ; முழவின் - மத்தளம் போல ; ஏங்க - ஒலிக்க ; திரைஎழினி - திரையாகிய சீலை ; மகரயாழின் வண்டுகள் - யாழ்போல வண்டுகள்பாட.

14-ம் பாடம்

1. தண்கடல் வரைப்பு......

வரைப்பு - எல்லையாகவுடைய உலகம் ; தாங்குநர் - தாங்குவோர் ; குன்றம் - மலை ; தேரும் - தேடும் ; கல் - ஒலிக்குறிப்பு, இடைச்சொல் ; கிளர்ந்து - விரும்பியபடி அசைந்து ; யாக்கை - உடம்பு ; புலவு-புலால் ; வறம் - வற்கடம் (=மழையின்மை) ; கருவி-கூட்டம் ; ஒக்கல் - சுற்றம் ; தவா - குறையாத ; வளன் - செல்வம் ; வால் - வெண்மை ; உளை - தலையாட்டம் (பிடரிமயிர்) ; புரவி - குதிரை ; களிறு - யானை ; மூகந்து – பெற்று ; அவண் - அவ்விடம் ; வருதும் - வருகிறோம்.

குளிர்ந்த கடலை எல்லையாகவுடைய உலகத்து தாங்குவோரைப் பெறாது [மழை பொலிந்த மலையிடத்து பழுத்த மரத்தைத் தேடும் பறவைகளைப் போல] ஒலிக்கின்ற சுற்றத்தினருடன் கால் சென்றவழியே செல்கின்ற புல்லென்ற உடலினையுடைய புலால் மணம் வீசுகின்ற வாயினையுடைய பாணனே! [பெரிய வற்கடம் மிகுந்த நாட்டில் கல்லென்னும் ஒலியுண்டாமாறு கூட்டமான மேகம் துளி சொரிந்தது போல] பழமையான பசி மிகுந்த எமது சுற்றத்தாரோடு நாம் பிறருக்குக் கொடுத்தாலும் குறையாத பெரிய செல்வமெய்தி அவ்விடத்தினின்றும் வருகிறோம்.

2. **கூத்தரும் பாணரும்.........**

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் வழியிடைத்தோன்றி தாம் பெற்ற பெரிய செல்வத்தைப் பெறாதவர்களுக்கு அறிவுறுத்தி அவரும் சென்று பயன் பெறுமாறு சொன்ன தன்மையும்.

பொருநர் - ஒப்பக் கோலம் புனைவார்; விறலி - பாடல்மகடூஉ.

3. **இருள்கண் வானத்து......**

கண் - இடம்; வானம் - ஆகாயம்; இமையோர் - தேவர்; உழை - இடம், பக்கம்; படுத்தன்று - படுத்தது.

15 - ம் பாடம்

1. **நீயே.......**

விடர் - பிளப்பு; தரு - மரம்; மிசை - மேல்; (சாதல் + நீங்க = சாதனீங்க) ஆதல் - அதனால் வரும் பயனை; தொன்னிலை - பழைய தாய் நிலைபெற்ற; குறியாது - பெறுதற்கரிதென்று கருதாது.

2. **களம்புகல் ஓம்புமின்........**

களம் - போர்க்களம்; புகல் - போதல்; ஓம்பு - பாதுகார்; (= போகாதே) தெவ்-பகை; பொருநன் - வீரன்; வைகல் - தினம்; திங்கள் - மாதம்.

3. **மணிமிடை........**

மணிமிடை பொன்னின் - மணி வைக்கப்பட்ட பொன்போன்ற; மாமை - அழகு; சாய - கெட; அணி நலம் - அழகு; பசலை - தேகநிற மாறுபாடு.

4. **அற்றைத் திங்கள்........**

திங்கள் - மாதம்; எந்தை - எனது தந்தை; குன்று - மலை; எறிதல் - அடித்தல்.

5. பல்சான்றீரே........

பல் விஷயங்களிலும் சான்றோரே! கணவனுடன் செல் என்று சொல்லாது கணவனொடு செல்லாதே என்று விலக்குகின்ற பொல்லாத சூழ்ச்சியுடையவரே! அணிலினது வரிபோலும் வரியையுடைய வெள்ளரிக்காயை அரிந்தால். அதனுள்ளே காணப்படும் விதைபோன்ற [வெள்ளிய நெய் கலவாது இலைகள் இடையே சேர்ந்த கையாற் பிழியப்பட்ட] நீர்ச் சோற்றுடனே, எள்ளை அரைத்த விழுதும் புளியும் சேர்த்து வேக வைக்கப்பட்ட வேளை இலையை உணவாகவும், பருக்கைக் கற்கள் பொருந்திய பாயில்லாத படுக்கையைப் படுக்கையாகவும் கொண்டு கைம்மைவிரதம் அநுபவிக்கும் பெண்களைப்போன்றவரல்லோம் நாம். புறங் காட்டிற் செய்யப்பட்ட கரிய கொம்பர்கள் அடுக்கப்பட்ட பிணப் படுக்கை உமக்கு அரியதாயின் ஆகட்டும். எமக்கு எமது பெரிய தோளையுடைய கணவன் இறந்தால் அவனது பிணப் படுக்கையிலுள்ள தீயும் தாமரை வளரும் குளிர்ந்த பெரிய பொய்கையும் ஒரு தன்மையவாகும்.

போழ்தல் - அறுத்தல்; காழ் - விதை; வல்சி - சோறு; பரல் - பருக்கைக்கல்; உயவல் - வருந்தல்.

1950 - 51-ம் ஆண்டுக்குரிய
தமிழ், ஆங்கில எஸ். எஸ். ஸி.
தமிழ் இலக்கியம்

மகாபாரதம்
புட்ப யாத்திரைச் சருக்கம்

விசேஷ உரையுடன்

விலை ரூ. 1] [தபாற்செலவு வேறு

சுன்னுகம்
தனலக்குமி புத்தகசாலை

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்